Not for sale

மார்ச் - ஏப்ரல் 2012

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## நம்முடைய ஆண்டவரின் நினைவுகூறுதல்

கிரியை நிறைவேற்றப்படுதல் • இயேசு எருசலேமுக்குள் எப்போது நுழைந்தார்?

உங்களிடமிருந்து ராஜ்யம் எடுக்கப்படும் • இராஜாவுக்கு ஐந்து கேள்விகள்

அவர் முடிவு பரியந்தம் அவர்களை நேசித்தார் • நம்முடைய ஐக்கியங்கள்

மனுஷரால் வெறுக்கப்பட்டு புறக்கணிக்கப்படுதல் • மரித்தோரிலிருந்து எழுந்திருத்தல்

**நம்முடைய ஆண்டவரின் நினைவுக்கூருதல்**

# ஆதியிலே



கிட்டத்தட்ட 2,000 வருடங்களுக்கு முன் நாசரேத் ஊரை சேர்ந்த இயேசு தன்னுடைய சீஷர்களோடு எருசலேமுக்கு வந்தார். அங்கு, இஸ்ரயேல் தேசத்தின் இராஜாவாக தன்னை வெளிப்படுத்தினார். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தில், வியாபாரத்தினால் அசுத்தப்படுத்தப்பட்ட ஆலயத்தை சுத்திகரித்தார். இதினிமித்தம் இயேசுவை பகைத்த மத போதகர்கள், அவரை அவமானப்படுத்தும்படியாக அநேக வாக்குவாதங்களையும் கேள்விகளையும் எழுப்பினார்கள். அவர்களின் தந்திரமான கேள்விகள் அனைத்திற்கும் பதில் பேச முடியாத அளவுக்கு, பரலோக ஞானத்தின் உதவியினால், அவர்களுக்கு தக்கவிதத்தில் பதில் அளித்தார்.

அவர் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார், அவரிடத்தில் வந்தவர்களை சொஸ்தமாக்கினார், இறுதியாக, நியாயப்பிரமாணத்திற்கு உண்மைக்காண்பிக்காத இஸ்ரயேல் ஜாதியை புறக்கணித்தார். அவர் தம்முடைய இறுதி பாடங்களையும், உவமைகளையும், கட்டளைகளையும் சீஷர்களுக்கு கொடுத்தார். கடைசியாக, அவருடைய சொந்த சீஷரால் காட்டிக்கொடுக்கப்பட்டு, யூத மத தலைவர்களால் மிக அவமானத்திற்குரிய விசாரணையை அடைந்து, ரோம அதிகாரிகளால் கொல்லப்பட்டார்.

இந்தக் கடைசி வாரத்தில், இயேசு "பூரண குமாரனாக" தன்னையே நிரூபித்து கொண்டார். (எபி 5:9) மேலும், சிலுவையின் மரணபரியந்தம் அவர் விசுவாசமுள்ளவராக இருந்ததினால், அவருடைய சீஷர்களுக்கும், இஸ்ரயேலர்களுக்கும், புறஜாதியாருக்கும் இரட்சிப்பின் வாசலை திறந்து வைத்தார். சந்தேகத்தின் நிழலுக்கு அப்பாற்பட்ட, அன்பு, சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகளை அவர் போதித்து, அதன்படி அவர் வாழ்ந்தும் காட்டினார். அவருடைய கீழ்ப்படிதலினால், அவர் தேவனை மகிமைப்படுத்தினார், அதற்குப் பலனாக தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

நம்முடைய ஆண்டவருடைய இறுதி வாரம், அவருடைய போதனைகள், மற்றவர்களோடு அவருடைய கலந்துரையாடல் மற்றும் இறுதியில் அவருடைய சோதனைகளையும், சிலுவை மரணத்தையும் விசுவாசத்தோடு எதிர்நோக்கின காரியங்களை குறித்து இந்தப் பிரதி கண்ணோக்குகிறது. இயேசுவின் கடைசி நாட்களின் பூமிக்குரிய ஊழியத்தை, விவரிக்கக்கூடிய ***கிரியை நிறைவேற்றப்படுதல்***

என்ற தலைப்போடு இந்தப் பிரதி துவங்குகிறது. தேவனுடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய பகுதி, இஸ்ரயேல் தேசத்தை விட்டு எடுக்கப்படும் என்பதை இயேசு சொன்ன மூன்று உவமைகளின் வழியாக, ***இராஜ்யம் உங்களிடமிருந்து எடுக்கப்பட்டது*** என்ற தலைப்பு ஆய்வு செய்கிறது.

ஜனங்களுக்கு முன்பாக இயேசுவை அவமானப்படுத்தி அவர் பெயரை கெடுக்கும்படியாக யூத மத தலைவர்கள் கேட்ட கேள்விகளுக்கு, இயேசு சொன்ன ஞானமான பதில்கள் ***இராஜாவுக்காக ஐந்து கேள்விகள்*** என்ற தலைப்பு கண்ணோக்குகிறது. இயேசுவின் மரணத்திற்காகவும், அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் சுவிசேஷ பணிகளைச் செய்வதற்கு, தம்முடைய சீஷர்களை ஆயத்தப்படுத்துவதற்காக இந்தப் பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி மாலை வேளையில் இயேசு அவர்களுக்கு கற்பித்த பாடங்களை ***அவர் முடிவு பரியந்தம் அவர்களை நேசித்தார்*** என்ற தலைப்பு கண்ணோக்குகிறது.

நம்முடைய பரலோக பிதாவோடும், நம்முடைய சகோதரர்களோடும், இந்த உலகத்தோடும் நாம் கொண்டுள்ள உறவைப் பற்றி, யோவான் 15ம் அதிகாரத்தின் வசன வாரியான ஆய்வில், இயேசுவின் ஆலோசனைகள் ***நம்முடைய ஐக்கியங்கள்*** என்ற தலைப்பில் கொடுக்கப்படுகிறது. இயேசு தம்முடைய விசாரணையின்போதும், சிலுவை மரணத்தின் போதும், விசுவாசமுள்ளவராக இருந்ததைக் குறித்து ***மனுஷரால் வெறுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டார்*** என்ற தலைப்பு விவரிக்கிறது.

இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்ணோக்குகிற ***மரித்தோரிலிருந்து எழுந்திருத்தல்*** என்ற தலைப்போடு இந்தப் பிரதி முடிவுக்கு வருகிறது.

இயேசுவின் மரணத்தை நினைவுகூரும்படியாக நாம் நம்முடைய இருதயங்களையும், சிந்தைகளையும் ஆயத்தப் படுத்தும்போது, நமக்காக ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கீழ்ப்படிதலின் மாதிரிகளை படித்து, நடைமுறைப்படுத்த முயற்சிப்போம்.

**மார்ச் - ஏப்ரல் 2012**


**ஆதியிலே** (புதிய துவக்கங்கள்) . . . 35

**கிரியை நிறைவேற்றப்படுதல். . . . .** 36

இந்தப் பூமிக்குரிய ஊழியத்தில் இயேசுவின் கடைசி வாரம்

**இயேசு எருசலேமுக்குள் எப்பொழுது நுழைந்தார்?** 44

இயேசு ஆரவாரத்தோடு எருசலேமுக்குள் சென்றது ஞாயிறா, திங்களா ?

**உங்களிடமிருந்து இராஜ்யம் எடுக்கப்படும். . . . . .** 46

பரலோக இராஜ்யத்தைக் குறித்த மூன்று உவமைகள்

**இராஜாவுக்கு ஐந்து கேள்விகள்** 51

யூத தலைவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இயேசு பதில் அளித்தார்.

**அவர் முடிவு பரியந்தம் அவர்களை நேசித்தார்** 57

இயேசுவின் சீஷர்களுக்கு அவருடைய இறுதி பாடங்கள்.

**நம்முடைய ஐக்கியங்கள் . . . .** 61

மற்றவர்களோடு ஐக்கியப்படுவதைக் குறித்த இயேசுவின் ஆலோசனை

**மனுஷரால் வெறுக்கப்பட்டு புறக்கணிக்கப்படுதல் . .** 67

இயேசுவின் இறுதி பரிசோதனையில் அவர் எவ்வாறாக வெற்றி அடைந்தார்

**மரித்தோரிலிருந்து எழுந்திருத்தல். .** 72

மரணத்தின் கம்பிகளை இயேசு கிறிஸ்து முறித்தெறிந்தார்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 74

**நம் உயிர்த்தெழுதல்** 76



நம்முடைய ஆண்டவரின் கடைசி வாரம்

# கிரியையை நிறைவேற்றுதல்

"பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைக ளெல்லாம் நிறைவேறும்"(லூக்கா 18:31)

Richard Doctor

**நீசான் 7 : வியாழன், மாலை 6 மணி - வெள்ளி மாலை 6 மணி கிபி.33**

ஓய்வு நாள் மாலை, பெத்தானியாவில் - பஸ்கா அனுசரிப்பதற்காக நம்முடைய ஆண்டவரும் அவருடைய சீஷர்களும் கலிலேயாவிலிருந்து கிளம்பி, யோர்தான் நதியை கடந்து எருசலேமுக்கு வந்து சேர்ந்தார்கள். எரிகோவிலிருந்து அவர்கள் வந்த போது ஒரு செங்குத்தான மலையில் ஏறி பெத்தானியாவுக்கு வந்திருக்க வேண்டும். பெத்தானியாவுக்கு வந்தும் கூட, அவர்கள் பரிசுத்த நகரத்தை கண்டிருக்க முடியாது. ஏனெனில் பெத்தானியாவுக்கு அடுத்து எருசலேமுக்கு செல்ல மற்றும் ஒரு நகரை அவர்கள் கடக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் பெத்தானியாவை சேர்ந்தபோது வெள்ளி மாலை ஏழாம் தேதி நிறைவு பெற்றது.

ஏழைகளுக்கு உதவி செய்யவும், அவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய தர்மசத்திரமாக பெத்தானியா காணப்படுகிறது. குஷ்டரோகிகளை எருசலேமிலிருந்த பெத்தானி யாவில் குடி அமர்த்தியிருப்பார்கள் என்று கருதப் படுகிறது. குஷ்டரோகி ஆகிய சீமோன் பெத்தானி யாவில் இருந்ததாக சொல்லப்படுகிறது. (மத் 26:6, மாற் 14:3) ஆகவே "தரித்திரர்கள் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறார்கள்" என்று இயேசுவும் குறிப்பிட்டார். (மாற்கு 14:7, மத் 26:11) சீஷர்களும் பெத்தானியாவில் மட்டுமே தரித்திரர்களை குறித்துப் பேசினதை நாம் காணலாம். யூதாசினால் வழிநடத்தப்பட்ட சீஷர்கள், விலையுயர்ந்த பரிமளத் தைலத்தை விற்று தரித்திரருக்கு கொடுக்காமல், ஊதாரித்தனம் ஆக மரியாள் இயேசுவின் தலையில் ஊற்றிவிட்டதாக யூதாஸ் கூறினான். அதை தொடர்ந்து சீஷர்களும் இந்தக் கருத்தை ஆமோதித்தனர். (மாற்கு 14:5, மத் 26:8,9 யோவான் 12:4-6)

ஒலிவ மலையின் கிழக்கிலுள்ள சரிவில் அடர்த்தியான மரங்களுக்குள், செங்குத்தான மலை இடுக்கில் பெத்தானியா அமைந்திருந்தது. இந்த ஒரு புவியியல் அமைப்பு பெத்தானியாவில் நடைபெறும் காரியங்களுக்கு இசைவாக பெத்தானியாவை பரிசுத்த நகரத்திலிருந்து பிரித்தது. உடல்நலம் அற்றோரை பாதுகாப்பதற்கு மூன்று இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சொஸ்தமாக்கப்பட்ட குஷ்டரோகிகளும் அடங்குவர். ஒன்று எருசலேமின் கிழக்குப் பகுதியிலும், மற்றொன்று பெத்தானியாவிலும் சொல்லப்படுகிறது. இவைகள் பரிசுத்த நகரத்தி லிருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கவேண்டும். ஏனெனில் பரிசுத்த நகரத்தை சுற்றிலும் எந்த அசுத்தங்களும் காணப்படக்கூடாது. எருசலேமில் இருந்த 1.7மைல் அல்லது 2.8 கிமி தூரத்தில் பெத்தானியா இருந்ததாக யோவான் 11:18 ம் வசனம் கூறுகிறது. ஆயினும் இந்த வழியாக தான் எருசலேமின் வாசலுக்கு செல்ல வேண்டும். பெத்தானியாவில் சமைக்கக்கூடிய புகை கிட்டத்தட்ட பட்டணத்தின் மதில் சுவற்றிலிருந்து 1. 1 மைல் தொலைவில் காணப்படும்.

சமீப காலத்தில் செதுக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான பெயர்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதில் இயேசு வாழ்ந்த காலத்தில் எருசலேமில் வாழ வேண்டுமென்று கலிலேயர்கள் பெத்தானியாவில் குடியிருந்ததாக சொல்லப்படுகிறது. இயேசுவுக்கும், கலிலேயர்களாகிய சீஷர்களுக்கும் இந்தப் பெத்தானியாவில் கூடுதலான உபசரிப்பு கிடைத்ததினாலும், இவர்கள் பெத்தானியாவில் தங்கி வந்தனர். குறிப்பாக சொல்லப்போனால் மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட லாசருவின் வீடும் பெத்தானியாவில் இருந்தது. (யோவா 11:43, 12:1, 9,10) இந்தப் பட்டணத்தை இக்காலத்து இஸ்லாமியர்கள் அடையாளம் கண்டு கொள்வதற்கு லாசருவின் கிராமம் என்று பெயர்ச் சூட்டியிருக்கிறார்கள்.

வெள்ளிக் கிழமை (நீசான் 7) பகலின் இறுதியில், அதாவது பஸ்காவுக்கு ஆறு நாட்களுக்கு முன்பு நம்முடைய ஆண்டவர் தம்முடைய அப்போஸ்தலர்களும், நெருங்கிய சீஷர்களோடு பெத்தானியாவுக்கு வந்தார்.(யோவ 12:1) இயேசுவின் வருகையை குறித்து அறிவிக்கும் அளவிற்கு அந்நேரத்தில் ஆள் நடமாட்டம் இல்லாதிருந்தது. ஆனால் இயேசுவைப் பற்றின விவரங்களை அறிவிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. (யோவ 11:57) அன்று இரவு மார்த்தாள், மரியாள், லாசருவின் வீட்டில் இராத் தங்கினார்கள். இளைப்பாறுதலுக்கும், ஓய்வெடுப்பதற்கும்,

நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு லாசருவின் வீடு தலைநகரமாக இருந்தது. பஸ்கா மாலை வரைக்கும் நம்முடைய ஆண்டவருக்கு அமைதியாக ஓய்வெடுக்க பெத்தானியா அடைக்கலம் தந்தது. நிச்சயமாக லாசருவின் வீடு இயேசுவுக்கும், அவரோடு கூட சென்றவர்களுக்கும் ஆயத்தப்படுத்தபட்டிருக்கும். அவர்கள் அனைவரும் சுத்திகரித்துக் கொண்டு போஜனம் பண்ணி இளைப்பாறியிருக்க வேண்டும்.

**நீசான் 8 - வெள்ளி மாலை 6 சனி மாலை 6 மணி**

பெத்தானியாவில் ஓய்வு - எருசலேம் பட்டணத்திற்குள் நடந்த தீவிரமான பேச்சுக்களை முன்னதாகவே யோவான் சுவிசேஷம் பதிவு செய்துள்ளது. " . யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது. அதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள். . அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரையொருவர் நோக்கி: உங்களுக் கெப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்கொண்டார்கள். பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்து, அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்கவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள்." (யோவான் 11:55-57) ஓய்வு நாளை அனுசரிப்பதற்கு சற்றுமுன், வாசல்களின் கதவுகள் அடைக்கப்படும் வரைக்கும், இயேசுவும் அவருடைய சீஷர்களும் மிக அருகில் வந்துவிட்டார்கள் என்பதை அறியாதிருந்தார்கள். ஒருவரும் நம்முடைய ஆண்டவர் சிலுவையில் அறையப்படும் கடைசி ஓய்வு நாளை எவ்வாறு அனுசரித்தார் என்பதற்கான பதிவுகள் சுவிசேஷத்தில் காணப்படவில்லை. உண்மையில் இந்த நாள் இனி வரக்கூடிய காரியங்களைச் செய்வதற்கான ஆயத்தநாளாய் இருந்தது. ஏனெனில் நம்முடைய ஆண்டவர் சந்திக்கக்கூடிய காரியங்கள் அனைத்தையும் எண்ணி அவருடைய இருதயம் பாரத்தினால் அமிழ்ந்திருக்கவேண்டும். இவைகளை எதிர்நோக்க அவர் ஜெபத்தின் மூலம் ஆயத்தப் பட்டிருக்க வேண்டும்.

அதே நேரத்தில் தொடர்ந்து வரும் நாட்களை காணும்போது தேவனுடைய ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவும், அடிமைதனத்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை மீட்பதற்கும் உண்டான காரியங்கள் அங்கு பேசப்பட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட பிரசங்கங்கள் சுவிசேஷத்தை எழுதினவர்களுடைய கவனத்தை ஈர்க்காமல் தேசத்திற்கு இனி வரக்கூடிய மிகப்பெரிய ஆபத்துகளும் அதற்குண்டான எச்சரிப்புகளுமே அதிகதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூடுமான அளவுக்கு அந்தக் கூட்டம் பட்டணத்து மதில் சுவர்களை சுற்றி பயணம் செய்திருக்கவேண்டும். ஏனெனில் கெத்சமனே தோட்டத்திற்கு அருகாமையில் மாற்குவின் குடும்பம் வசித்ததாக நம்பப்படுகிறது. "இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால்" என்று சொல்லப்படுகிறது. (யோவ18:2)

**நீசான் 9 - சனி மாலை 6 மணி - ஞாயிறு மாலை 6 மணி**

"குறுத்து ஞாயிறு" கிழமையின் முந்திய மாலை - இந்த நாளின் சனிக்கிழமை மாலையில் நடந்த காரியங்கள் - குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் இராப்போஜனத்தோடு துவங்கியது. இந்த சீமோன் லாசரு மற்றும் அவருடைய சகோதரிகளின் தகப்பனாகவோ அல்லது மார்த்தாளின் கணவனாகவோ இருக்கக்கூடும் என்று நம்பப் படுகிறது. ( Reprints, pg 3534) பெத்தானியாவில் வாழ்ந்த அநேக ஜனங்கள் இப்படியாக இயேசுவுக்கு ஆதரவு தெரிவித்திருக்க வேண்டும். இந்த சீமோன் யாராக இருந்தாலும் சரி, இவர் நிச்சயமாக இயேசுவினால் சுகம் பெற்றிருக்கவேண்டும். ஆகவே பெத்தானியாவுக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் வந்துவிட்டார்கள் என்று கேள்விப் பட்டவுடன், அங்கு சுற்றியிருந்தவர்கள் இயேசுவை காணவேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல, இயேசு உயிர்த்தெழுப்பிய லாசருவையும் காணவேண்டும் என்பதற்காக வந்தார்கள். லாசரு உயிர்த் தெழுப்பப் பட்டதினால் அவர் இயேசுவுக்கு உயிருள்ள சாட்சியாக வாழ்ந்துவந்தார், என்ற காரணத்தினால், லாசருவையும் கொல்லவேண்டும் என்று பிரதான ஆசாரியர்கள் திட்டமிட்டார்கள். (யோவ 12:1-11)

போஜனம் பண்ணுகையில் மரியாள் விலையேறப் பெற்ற நளதம் என்னும் தைலத்தை இயேசுவின் பாதங்களில் பூசி அவருடைய பாதங்களை தலை மயிரினால் துடைத்தாள். அந்த வீடு முழுவதும் அதன் வாசனையால் நிறைந்தது. "யூதாஸ்காரியோத் தூண்டிவிட சீஷர்கள் அனைவரும் கோபமடைந்தனர். (மாற் 14:4,5, மத் 26:8) "அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்"யோவ 12:3-5 என்று யூதாஸ்காரியோத் கேள்வி எழுப்பினான். இந்த முந்நூறு பணம் ஒரு வருஷத்தின் கூலியாகும்."அவன் தரித்திரரைக் குறித்துக்

கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்" (யோவா 12:6) ஆயினும் இந்த நோக்கம் வெளிப்படையாக காணவில்லை.

இதற்கு ஆண்டவராம் இயேசு சரியான பதில் கொடுத்தார்."அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்"(யோவ 12:7,8) இயேசு மரியாளை பாராட்டி யூதாஸை கடிந்து கொண்டதினால், யூதாசுக்குள் இறுதியாக மிகப்பெரிய பிளவை ஏற்படுத்தியது. பாவமாகிய களைகளின் வேர் ஆழமாக வளர்ச்சியடையும் போது, தங்கள் கிரியைகள் நீதியாக இருக்கிறது என்ற திருப்தியை இவர்கள் பெறுவதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட பாவிகள் தாங்கள் மட்டுமே சரியான பாதையில் இருப்பதாகவும், மற்றவர்கள் அனைவரும் தவறான பாதையில் இருப்பதாகவும் எண்ணிக் கொள்கிறார்கள்.

**ஆரவாரத்தோடு பிரவேசித்தல் -** மறுநாள் காலையில் நகரத்திற்குள் ஆரவாரத்தோடு பிரவேசிப்பார் என்பதை முந்தைய இரவின் போது நம்முடைய ஆண்டவர் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கவில்லையென்று கருதப்படுகிறது.

உண்மையில், பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் முன் ஒருபோதும் ஒருவரும் ஏறிராத கழுதையையும், அதன் குட்டியையும் ஆயத்தப்படுத்த வேண்டியதாக இருந்தது. ஏனெனில், பட்டணத்திற்குள் பிரவேசிப்பதும், இராபோஜனத்திற்கான முன் ஏற்பாடையும் நம்முடைய ஆண்டவர் தனித்து ஆயத்தம் செய்தார். இக்காரியங்கள் பேதுரு, யாக்கோபு , யோவானுக்கும் அறிவிக்கப்படாமல் இருந்தது.

பெத்தானியாவுக்கு அருகே, எருசலேமுக்கு செல்லும் வழியில் நாகரீகம் நிறைந்த பெத்பகே அமைந்திருந்தது. அதிலிருந்து பரிசுத்த நகரம் மிகத் தெளிவாய் காணப்பட்டது. வசதியானவர்கள் அங்கு குடியிருந்தார்கள். பெத்பகேவிலிருந்த எருசலேமின் கிழக்கு வாசலுக்கு, பாதை அமைக்கப்பட்டிருந்தது. பரிசுத்த நகரத்தை மிகத் தெளிவாக காணும் அளவிற்கு, இந்தப் பெத்பகே ஒலிவ மலையின் மேற்கு சரிவு பகுதியில் காணப்பட்டது. இது வரைக்கும் ஒருவரும் எறிராத கழுதையையும், அதன் குட்டியையும் ஆயத்தம் பண்ண வேண்டியதாயிருந்தது. கழுதை மிகத் தாழ்மையான ஒரு பிராணி யாக சொல்லப்படுகிறது."நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம்" உபா 11:11. செங்குத்தான பள்ளத்தாக்குகளிலும், மலை சரிவுகளிலும், குதிரையைக் காட்டிலும் கழுதைகள் மிகப் பொறுமையாகவும், நிதானமாகவும் கால்களை ஸ்திரமாக ஊணி பிரயாணம் செய்தது.

அவர்கள் பட்டணத்திற்குள் வந்தபோது அந்த நகரத்தைக் கண்ட இயேசு கண்ணீர்விட்டார். (லூ 19:41) இனி வரக்கூடிய கசப்பான காலங்களை தீர்க்கதரிசனமாக உரைத்து அவர்களை எச்சரித்தார். "உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்" (லூ 19:44) இயேசுவின் கண்ணீரை பொருட்படுத்தாத சில சீஷர்கள் மலையிலிருந்து விரைந்து சென்று, ஆண்டவருடைய வருகையை மகிழ்ச்சியோடு அறிவித்தார்கள். மரக்கிளைகளையும், தங்களுடைய வஸ்திரங்களை வழியில் பரப்பினார்கள். இந்த மகிழ்ச்சிகரமான ஊர்வலம் எருசலேமின் பட்டணத்தில் வாசலிலிருந்து துவங்கியது. "அவர் ஒலிவமலையின் அடிவாரத்துக்குச் சமீபமாய் வருகையில் திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்குறித்துச் சந்தோஷப்பட்டு," (லூக் 19:37) " குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள். அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிறபிரகாரமாக" (யோவ 12:13,14) என்று யோவான் பதிவு செய்திருக்கிறார். மகிழ்ச்சிகரமான அந்த கொண்டாட்டத்தின் மத்தியில் - மேல் அதிகாரிகளிடமிருந்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. "அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள்" (மத் 21:10) "குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்"(யோவான் 12:13 ) இப்படியாக சகரியா 9:9 ம் வசனத்தில் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறியது.

அதிகாரிகளின் இந்தக் கண்டனத்தை பொருட்படுத்தாத நம்முடைய ஆண்டவர், அனைவரும் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு அவர்களை ஊக்குவித்தார்.

இப்படிப்பட்ட கண்டனங்களை பொருட்படுத்தாக நம்முடைய ஆண்டவர் அனைவரும் அதிகதிகமான மகிழ்ச்சியடைய ஊக்குவித்தார். நாம் எதிர்பார்த்தபடி இயேசு ஜனங்களுக்கு போதித்து, வியாதியஸ்தரை சொஸ்தபடுத்தியிருக்க வேண்டும். சில கிரேக்கர்களும் ஆண்டவரை காண வந்திருந்தார்கள். அவர்களின் விருப்பங்களை கிரேக்க நாமங்களை கொண்டிருந்த இரண்டு அப்போஸ்தலர்களாகிய பிலிப்பு மற்றும் அந்திரேயாவின் வழியாக தெரிவித்தார்கள். வேதத்திலுள்ள இந்தப் பகுதி முழுவதும் சகரியா 9 :10 வசனத்தின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் ஆகும்."அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்பரியந்தமும் செல்லும்."

எடுத்துக்காட்டாக தேவனுடைய திட்டத்தில், இஸ்ரயேலுக்கு விசேஷித்த முன்னுரிமை கொடுக்கப்பட்ட போதிலும், முன்னதாகவே கொடுக்கப்படட சில வாக்குறுதிகளினிமித்தம் புறஜாதிகளும் நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் போது அவரை சந்தித்தார்கள். (யோவ 4:22, மத் 15:24-26) ஆயினும் அவர்களை புறக்கணிக்கும்படி எதுவும் நடக்கவில்லை. அதற்குப் பதிலாக "ஆமென்", என்ற துவங்கக்கூடிய ஒரு சிறிய பிரசங்கத்தை துவங்கினார். யோவான் சுவிசேஷத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு விதை அழிந்துபோனால் மட்டுமே பலன் கொடுக்க முடியும் என்று இயேசு சொன்னார். (யோவ 12:24) இயேசுதான் அந்த விதையென்றும், அவர் இப்பொழுது மரிக்கப்போகிறார் என்றும் அவர் அறிந்திருந்தார். மேலும் இதன் பலனாக இஸ்ரயேலில் மட்டுமல்ல புறஜாதிகளில் இருக்கும் மற்ற ஆடுகளையும் பலனாகப் பெறப்போகிறார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆயினும், உணர்ச்சிவசப்படக் கூடிய நடந்த சம்பவங்கள். நம்முடைய கவனத்தை திருப்புகிறது. " இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்."(யோவ 12:27) இந்தச் சிறிய பிரசங்கத்தை பழைய ஒழுங்கின் மரணத்தோடு முடித்து புதிய ஒழுங்கின் நம்பிக்கையின் படி அவர் ஜெபித்தார். "பிதாவே, உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" (யோவ 12:28 ) பழைய ஒழுங்கின் பாரமானவைகளை ஒழித்து விட்டு, அங்கு நடந்த முக்கியமான சம்பவத்தை முக்கியத்துவம் படுத்தும்படியாக பரலோக அற்புதம் ஒன்று நிகழ்ந்து. "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" "இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று"(யோவா 12:28,30) அங்கு சுற்றியிருந்த ஜனங்கள் அதை கேட்டார்கள். மேலும் இயேசு "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்" (யோவ 12:32-33) என்று கூறி தான் மரிக்க வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இதற்குப் பின் இயேசு அந்த ஜனக்கூட்டத்தின் நெரிசலில் இருந்து தப்பித்து மறைந்து கொள்ளும்படி முயற்சித்ததாக யோவான் கூறுகிறார். (யோவ 12:36) "அப்பொழுது, இயேசு எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தில் பிரவேசித்து, எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்து, சாயங்கால மானபோது, பன்னிருவரோடுங்கூடப் பெத்தானியாவுக்குப் போனார்" (மாற்கு 11:11) அதை தொடர்ந்து வரும் நாளில் நடக்கக்கூடிய காரியங்களுக்கு கொடுக்கப்படும் எச்சரிப்பை நிராகரிப்பதைப் போல காணப்படுகிறது.

அந்த நாளின் மதிய வேளையில் இயேசுவும் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் கூட்டத்தை விட்டு கடந்து ஆலயத்தை விட்டு வெளியே வந்தனர். பின் வாசல் வழியாக வெளிவந்து ஒலிவ மலைக்கு ஏறி இரவு நேர இளைப்பாறுதலுக்காக தங்கள் பெத்தானியா சென்றார். (மத் 27:17)

**நீசான்-10-ஞாயிறு மாலை 6மணி-திங்கள் மாலை 6 மணி**

காலையில் எழுந்தவுடன் இயேசுவும் சீஷர்களும் பெத்தானியாவை விட்டு புறப்பட்டார்கள். இயேசுவுக்கு பசி உண்டாயிற்று. (மத் 21:18) அத்திபழ காலமாக இராதபோதிலும் சாலை அருகே நின்ற ஓர் அத்திமரத்தில் அவர் கனியை தேடினார். (மாற்கு 11:13) இலைகள் தோன்றுவதற்கு முன்னதாகவே அத்திமரங்கள் பூத்து கனிகளை கொடுக்க வேண்டும். ஆகவே அந்த மரத்தில் கனிகள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அங்கு கனி காணப்படாததினால் நம்முடைய ஆண்டவர் அந்த மரத்தை சபித்தார்.

தேவனை விட்டுபிரிந்து செல்வோருக்கு நம்முடைய ஆண்டவர் அநேக எச்சரிப்புகளைக் கொடுத்திருந்த போதிலும், இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு அரிதாக இருந்தது. பதிவு செய்யப்பட்ட அற்புதங்களில் இது ஒரு மோசமான நிலையைக் காட்டக்கூடிய அற்புதமாகும். மனுஷகுமாரன் ஒருவரையும் அழிப்பதற்காக அல்ல, இரட்சிக்கவே வந்தார். ஆகவே இந்தச் சாபம் ஒரு தனிப்பட்ட நபருக்கு அல்ல முழு இஸ்ரயேல் ஜாதியாரின் தவறான கிரியைகளினிமித்தம் தீர்ப்புப் பெற்றார்கள்.

இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஆலயத்திற்குள் பிரவேசித்தபோது, காசுக்காரர்கள் தங்களுடைய வியாபாரத்தை முழு அளவில் நடத்திக்கொண்டு இருந்தார்கள். முன்னால் நடந்த அங்கீகாரமற்ற காரியங்களை அவர் கவனித்து பார்க்கவில்லை. மேலும் யூத தலைவர்கள் இக்காரியங்களை நிச்சயமாக கவனிப்பார்கள் என்பதை இயேசு எதிர்ப்பார்த்திருக்கவேண்டும். அதற்கு முன் தினம் நடந்த காரியங்களில் காட்டப்பட்ட தன்னடக்கத்தை இந்த முறை இயேசு காண்பிக்க வில்லை. ஆனால் ஆலயத்தை அசுத்தம் செய்து கொண்டிருந்த காசுக்காரர்களின் மேஜைகளை கவிழ்த்து, ஆடுமாடுகளை விரட்டி, அந்த இடத்தை பரிசுத்தப்படுத்தினார். இன்னும் ஆலய பிரகாரத்தின் வழியாக தங்களுடைய வியாபார பொருட்களை எடுத்து செல்வது வழக்கமாய் இருந்தது. இவைகளை மத குருக்கள் கவனியாதிருந்தார்கள். (மாற்கு 11:15,16) "என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்றார்" (லூக் 19:46) என்று இயேசு மதத் தலைவர்களை பார்த்து சொன்னார். அவர்கள் அனைவரும் மூர்க்க கோபமடைந்தார்கள். அவரை கொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்தார்கள். ஆனாலும் அவர்களால் இயேசுவின் மேல் எந்தக் குற்றங்களையும் கண்டுபிடிக்க முடியாமல், சில தேவையற்ற கேள்விகளை கேட்டார்கள். (மத் 21:23) ஆனால் மற்ற ஜனக்கூட்டங்கள் அவருடைய உபதேசங்களை ஆச்சரியத்தோடு கேட்டார்கள். மத தலைவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலாக -"யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார். அதற்கு அவர்கள்: தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று நம்மைக் கேட்பார்"(மத் 21:25) என்று இயேசு கேள்வி எழுப்பின போது அவர்களால் பதில் சொல்ல முடியில்லை.

யூத தலைவர்களை அவர் விமர்சிக்கும்படி சொன்ன உவமைகள் அனைவராலும் எளிதில் புரிந்துகொள்ளப்பட்டது."தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப்பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலைசெய்து, ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்" (மத் 21:35) என்ற உவமையை இயேசு சொன்னார். அதற்குப்பின் உரிமைக்காரனாகிய எஜமானுடைய குமாரனையே அவர்கள் கொலை செய்தார்கள் என்று கூறினார். (மத் 21:38, 39) இந்த உவமை அவர்களுக்கு புரியாததாக இருந்தாலும்."ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" என்ற காரியத்தை இயேசு தெளிவாகக் கூறினார். (மத் 21:43)

கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்ட உறவினர்கள் அபாத்திரராக போன உவமை அப்பொழுது சொல்லப்பட்டது. (மத் 22:2-14) விறுவிறுப்பான இந்தக் கதையை தொடர்ந்து அவரை பிடிக்கும்படி புதிய யுக்தி ஒன்றை மேலதிகாரிகள் ஆலோசித்தார்கள். ஜனக்கூட்டங்கள் மீண்டும் அடுத்த நாள் வரும்போது அதை நடைமுறை படுத்த முடிவு செய்தார்கள்.

யோவான் ஸ்நானகனை கொன்றதுபோல இயேசுவையும் கொன்றுவிட்டால் பிரச்சனைகள் தீரும் என்று மேலதிகாரிகள் எண்ணினார்கள்."அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்" (மத் 21:46) மதிய வேலையில் மீண்டுமாக இரவு நேர இளைப்பாறுதலுக்காக இயேசுவும், சீஷர்களும் பெத்தானியாவுக்கு சென்றார்கள்.

**நீசான்-11-திங்கள் மாலை 6மணி-செவ்வாய் மாலை 6 மணி**

காலையில் எருசலேமுக்கு புறப்பட்ட இயேசுவும் அவரது சீஷர்களும் மீண்டுமாக அத்திமரத்தின் வழியாக சென்றபோது, அது பட்டுபோய் இருந்ததை கண்டார்கள். உண்மையில் இது இயற்கையாக நடவாமல் நேற்றைய தினத்தில் இயேசு கூறின வார்த்தைகளின் படி அது பட்டுபோய் இருந்தது.

"பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்" (மாற்கு 11:21) என்று பேதுரு கூற துவங்கினார் "இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்"( மாற்கு 11:22) என்று இயேசு பதிலளித்தார். மலைகளை (உலக இராஜ்யங்கள்) அசைக்கக்கூடிய ஜெபத்தின் வல்லமையைக் குறித்து அவர் அவர்களுக்கு

கற்பித்தார். ஆனால் இந்த வல்லமை புற ஜாதியாரின் காலத்தில் செயல்படவில்லை. மாறாக, சரியான முறையில் ஜெபங்களை ஏறெடுப்பதற்கு நாம் மன்னிப்பை பெறக்கூடிய பாவமான நிலையில் இருப்பதையும், பிறரை மன்னிக்கும் மனநிலையோடு இருக்கும்படிக்கு இயேசு நமக்கு நினைப்பூட்டினார். ஆம் ஒரு பாடம் கற்பிக்கப்படுவதற்காக துரதிஷ்டவசமாக ஒரு மரம் பட்டு போனது. ஆனால் சத்தியத்தை விரோதிப்பவர்கள் மேல் இப்படிப்பட்ட காரியங்களை நடப்பிப்பதற்கு ஜெபத்தின் வல்லமை பயன்படுத்தப்படலாம் என்பதை இயேசு சீஷர்களுக்குக் காட்டவில்லை.

இயேசுவும், சீஷர்களும் ஆலயத்திற்குள் பிரவேசித்தபோது பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பர்களும் அவருக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார்கள். (மாற்கு 11:28) இயேசு யோவான் ஸ்நானகனின் ஊழியத்தை குறித்து பதிலாக அளித்தார். அவர்களுக்கு பதில் சொல்ல இயலவில்லை. அதற்குப்பின் ஜனக்கூட்டத்தார் மத்தியில் அவரை பிடிக்கும்படி புதிய முறைகளை பயன்படுத்தினார்கள். ஜனங்களுக்கு முன் அவரை பொதுவான விவாதங்களுக்கு உட்படுத்தி, அவருடைய அறிவை மற்றும் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் சோதிக்க ஆயத்தமானார்கள். எந்த விதமான உவமைகளையும் பேச அனுமதிக்காமல், போர்க்களத்தில் இயேசுவை இறக்குவதற்கு ஆயத்தமானார்கள். இயேசு எந்தவிதத்திலும் பதில் அளிக்க முடியாதபடிக்கு கேள்விகளை எழுப்பினார்கள்.

"ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்" (மத் 22:17) என்ற கேள்வி முதலில் கேட்கப்பட்டது.

அவர்கள் வந்த நோக்கத்தையும், அவர்களின் இருதயத்திலிருக்கும் துன்மார்க்கமான சிந்தையையும் இயேசு நன்கு அறிந்திருந்தார். ஆகவே அவர்களுக்கு கொடுக்கபோகிற பதிலுக்கு ஆயத்தமாக - "மாயக்காரரே நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? என்று இயேசு கேட்டார். ராயனுக்கு வரி கொடுக்க வேண்டுமா? என்ற கேள்விக்கான பதில் தேவனுடைய பார்வைக்கு முன் மிக நேர்த்தியாக கொடுக்கப்பட்டது. "...வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார்; அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய்விட்டார்கள்." (மத் 22:15-17)

ஆச்சரியத்தில் உறைந்துபோன பரிசேயர்கள் தங்களுடைய தோல்வியை ஒத்துக்கொள்ளவில்லை. அடுத்து உயிர்த்தெழுதலில், திருமண பந்தங்களை குறித்த ஒரு கேள்வியோடு சதுசேயர்கள் அவரை சந்தித்தார்கள். இக்கேள்விக்கு எதிர்பாராத வகையில் அவர்களை கடிந்துகொண்டு, மிக ஞானமாக இயேசு பதில் அளித்தார். (மத் 22:23-32) தேவனுடைய வல்லமையையும், வசனங்களையும் அறியாத சதுசேயர்கள் தவறாக சிந்தித்தார்கள். ஆனாலும், அவரை சுற்றியிருந்த கூட்டத்தார் அவர் போதித்த உபதேசங்களை ஆச்சரியத்துடன் கேட்டார்கள் (மத் 22:33)

இறுதியாக, பிரமாணங்களில் சிறந்த பிரமாணம் எது என்ற கேள்வியோடு அடுத்த வாக்குவாதத்தை பரிசேயர்கள் துவங்கினார்கள். உண்மையில் இது ஒரு தகாத கேள்வியாய் இருந்தது. ஏனெனில் பத்து பிரமாணங்களும் (மத் 22:34-40) இரண்டு பிரிவாக பிரிக்கப்படுகிறது. தேவனுக்கு செய்யப்படும் மனுஷனுடைய கடமை மற்றும் மனுஷனுக்கு செய்ய வேண்டிய மனுஷனுடைய கடமை. இவர்களில் எது சிறந்தது என்ற கேள்வியை கேட்டு இயேசுவை வார்த்தையால் குற்றம் கண்டுபிடிக்க வகை தேடினார்கள்.

இயேசு இதற்கு நேரடியான பதிலை கூறாமல், இந்த இரண்டு பிரிவுகளையும் ஒரே பிரமாணமாக இணைத்து பதிலளித்தார்." இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவா யாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்"(மத் 22:37-40)

இந்த மூன்று கேள்விகளுக்குப் பின் இயேசு பரிசேயர்களிடம் ஒரு கேள்வி எழுப்பினார். "பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி: கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே

சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்" (மத் 22:41-45) ஒருவரும் அவருக்கு பதில் சொல்லக் கூடாதிருந்தது."அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை" (மத் 22:46) யூத மத தலைவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இயேசு வசனங்களின் அடிப்படையில் அவர்களை மிக அருமையாக வாயடைத்தார்.

இஸ்ரயேலின் அதிகாரிகள் செய்த துரோகங்களையும், கொலைகளையும் குறித்து இயேசு நேரடியாக கண்டனம் செய்ய துவங்கினார். அவர்களின் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் அறிவித்தார்."நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" (மத் 23:35)

இயேசு முடிவாக - "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத் 23:37-39 )

இயேசு சொன்னதை அவர் நிறைவேற்றினார். இதற்குப்பின் அவருடைய பொதுவான ஊழியம் நிறைவடைந்தது. அந்நேரம் முதல் தனிப்பட்ட முறையில் இயேசு தம்முடைய சீஷர்களை பலப்படுத்த துவங்கினார்.

### மிகப் பெரிய தீர்க்கதரிசனம்

இயேசுவும், அவருடைய சீஷர்களும் ஆலயத்தை விட்டு புறப்பட்டு பெத்தானியாவுக்கு திரும்பிப் போகையில், "பின்பு, அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறுங்காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்" (மாற்கு 13: 3,4) என்று பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயா கேள்வி எழுப்பினார்கள். மேலும் இந்தத் தேவாலயத்தை குறித்து நீங்கள் என்ன சொல்லுகி றீர்கள் என்று கேட்டார்கள். (மத் 24:3)

அவர்கள் அனைவரும் பட்டணத்தை பார்த்தபடி அந்த மலைசரிவில் அமர்ந்த போது இக்கேள்விகளுக்கு இயேசு பதிலளித்தார். மத்தேயு 24 -ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட மிகப்பெரிய தீர்க்கதரிசனம், சுவிசேஷ யுக வரலாற்றை முழுமையாய் கொண்டிருந்தது. சாயங்காலமானபோது பெத்தானியாவுக்கு திரும்பினார்கள். மத்தேயு 25-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட உவமைகள் அதை தொடர்ந்து சொல்லப்பட்டது என்று கருதப்படுகிறது. ஆயினும் இயேசு போதிப்பதற்கு மீண்டும் உவமை களில் பேச துவங்கினார்.

### நிசான்-12-செவ்வாய் மாலை 6 மணி - புதன் மாலை 6 மணி

சீஷர்களை எச்சரிக்கும்படியாக இயேசு இந்த உவமைகளை சொன்னார். இந்த உவமைகள் மத் 25-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. புத்தியுள்ள கன்னிகைகளின் உவமை அந்தச் சூழ்நிலைக்கு மிக அழகாக பொருந்தியது.

பகல் நேரத்தில் இயேசுவின் காரியங்களைக் குறித்து எந்தச் சுவிசேஷங்களும் குறிப்பாக, எதையும் பதிவு செய்யவில்லை. தாலந்துகள் மற்றும் வெள்ளாடு செம்மறியாடுகளின் உவமைகள் அந்நேரங்களில் சொல்லப்பட்டிருக்க வேண்டும். மற்ற நேரத்தில் ஜெபித்துக் கொண்டும், ஓய்வெடுத்துக் கொண்டும் இருந்திருக்க வேண்டும். ஒருவேளை கெத்சமனே தோட்டத்தில் கூட இவைகள் சம்பவித்திருக்க கூடும்.

இயேசு காட்டிக் கொடுப்பதற்கு யூதாஸ் இந்த நாளில் பிரதான ஆசாரியர்களிடம் ஒப்பந்தம் செய்திருக்க கூடும் என்று மத்தேயு சுவிசேஷம் கருதுகிறது. "இரண்டுநாளைக்குப்பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள்; அப்பொழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்" (மத் 26:2)

இராபோஜனம் நெருங்கியபோது, யூதாஸ் காட்டிக் கொடுப்பதற்கு முயற்சித்தான் என்று லூக்கா சுவிசேஷமும் கருதுகிறது. யூதாஸ் அப்போஸ்தலர்களை விட்டு பிரிந்து இரகசியமாக பிரதான ஆசாரியர்களை சந்திக்க சென்றான். "ஜனக்கூட்டமில்லாத வேளையில் அவரை

அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயந்தேடினான்." (லூக் 22:3-6, மத் 26:14-16)

**நீசான் 13 - புதன் மாலை 6 மணி - வியாழன் மாலை 6 மணி**

எருசலேமுக்கு சென்று பஸ்காவை அனுசரிப்பதற்காக அவர்கள் மாலை நேரத்தில் புறப்பட்டதை தவிர வேறு எந்தக் காரியங்களும் குறிப்பிட படவில்லை. பேதுருவும், யோவானும் இதற்கான ஆயத்த வேலைகளுக்கு முன் அனுப்பப்பட்டார்கள். (லூக்கா 22:8-13) முன் ஏற்பாட்டிற்கு சில அடையாளங்களும் கொடுக்கப்பட்டது. (மாற்கு 14:13) ஆகவே இந்த இடம் ஏதோ ஒரு சீஷனுடைய வீடாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. அந்நேரத்தில் யூதாஸ்காரியோத்து அறியாதபடிக்கு இந்த ஸ்தலம் தேர்வு செய்யப்பட்டது. நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் இறுதிக் கட்டம் அங்கு நிறைவேற காத்திருந்தது. அங்கு அவருடைய மரணத்தைப் பற்றியும், அவர் பரம் ஏறினபின்பு சீஷர்கள் நடக்கக்கூடிய பாதையைப் பற்றியும் அநேக பாடங்கள் கற்பிக்கப்பட்டது.

இங்கு கடைசி வாரத்தின் முடிவுக்கு வருகிறோம். ஆனால் யூதாஸ் மேலும் சில காரியங்களைச் செய்வதினால் அந்தச் சம்பவங்களில் வரிசை தெளிவாக வெளிப்படுத்தப்படும்.

**நீசான் 14 - வியாழன் மாலை 6 மணி - வெள்ளி மாலை 6 மணி**

**கடைசி இராபோஜனம், கெத்சமனே தோட்டம், காட்டிக்கொடுத்தல், நம்முடைய ஆண்டவரின் சோதனையும், மரணதீர்ப்பும், சிலுவையில் அறைதல், காரிருள், இரட்சகரின் மரணம், உடனடியாக அவருடைய சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது.**

இதுவே சிலுவையில் அறையப்பட்ட தேதி என்று ஸ்தாபிப்பதற்கு அன்றைய தினம் எருசலேமில் சந்திரன் இரத்தமாக மாறியது. அன்று சூரிய கிரகணமாக இருந்ததினால் அந்தச் சிவப்பான நிழல், உதிக்கக்கூடிய சந்திரன் மேல் பட்டது. இதினிமித்தம் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது பூமியை காரிருள் சூழ்ந்திருக்க வேண்டும்.

**நீசான் 15 - வெள்ளி மாலை 6 மணி - சனி மாலை 6 மணி**

இயேசுவை கல்லறையில் வைத்தபோது ஓய்வுநாள் கடந்தது.

**நீசான் 16 - சனி மாலை 6 மணி - ஞாயிறு மாலை 6 மணி**

காலையில் வாசல்கள் திறக்கப்பட்டவுடனே, ஸ்திரீகள் கல்லறைக்கு சென்று, காலியான கல்லறையைக் கண்டார்கள். இயேசு நித்திரையிலிருந்து முதற்பலனாக உயிர்த்தெழுந்தார். (1கொரி 15:20) வாற்கோதுமையின் முதற்பலன்களை ஆலயத்தில் காணிக்கையாக கொடுக்கப்பட்ட நிழலான காரியங்கள் இப்பொழுது நிஜமாக நிறைவேறியது. இது எட்டாவது நாள் - புதிய துவக்கங்களுக்குரிய நாள்.

# இயேசு எருசலேமுக்குள் எப்பொழுது நுழைந்தார்?



James Parkinson and Ernie Kuenzli

இயேசுவின் கடைசி வாரத்தைக் குறித்து, அதாவது, பொது ஜனங்கள் இயேசுவை கௌரவித்து மரக்கிளைகளையும், தங்களுடைய வஸ்திரங்களை வழியில் பரப்பின சம்பவமானது - யோவானின் குறிப்புகளில் இரண்டு விதமான கருத்துக்கள் எழுப்பப்பட்டுள்ளது : ஞாயிறு நீசான் 9 மற்றும் திங்கள் நீசான் 10

நீசான் 10ம் தேதி இஸ்ரயேலர்கள் பஸ்காவிற்குரிய ஆட்டை தேர்வு செய்யவேண்டும். நீசான் 14ம் தேதி பஸ்கா ஆடுகளும் இயேசுவும் கொல்லப்பட்டார்கள். (யாத் 12:3, 6-10) கிபி 33, நீசான் 10ம் தேதி திங்கள் கிழமையாக இருந்திருக்கக் கூடும். யூதர்கள் வெள்ளி மாலை (ஏப்ரல் 3 ஜூலியன் கால அட்டவணை) பஸ்கா ஆட்டை புசித்தார்கள்.

"அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடிவந்திருக்கையில், அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி: நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ""அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டான்" (யோவா 12:1, 12-13)

இப்படியாக, இயேசு பஸ்காவுக்கு ஆறு நாளைக்கு முன் ஆரவாரத்தோடு எருசலேமுக்குள் நுழைந்தார். யோவான் 12:1ம் வசனத்தில் பஸ்கா ஆடு கொல்லப்பட்டது. (எஸ் 6:19,20) நீசான் 14ம் தேதியோ (எசேக்கி 45:21) அல்லது நீசான் 15ம் தேதியோ என்பதை சூழ்நிலைகளை வைத்து நாம் முடிவு செய்யவேண்டும்.

முதல் கருத்தில் இயேசு நீசான் 8ம் தேதி சனிக்கிழமை பெத்தானியாவுக்கு வந்தார். அதற்குப்பின் ஞாயிறு நீசான் 9ம் தேதி அவர் எருசலேமுக்கு வந்தார். இந்தக் கருத்தை ஆதரிப்பவர்கள் (லேவி 23:5)ம் வசனத்தை ஆதாரமாக காட்டுகிறார்கள். "முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையும்," மேலும், யோவான் 13:1 ம் வசனத்தில் பஸ்கா ஒரு பண்டிகையாக குறிப்பிடப்படுகிறது. அதே நேரத்தில் யோவான் 12 :1ம் வசனத்தில் "பஸ்கா" ஒரு பண்டிகையாக குறிப்பிடுவதற்கு அவசியமில்லை என்பதை வேறுபடுத்தி காண்பிக்கிறது. இப்படியாக மத் 26 :17,18, மாற்கு 14:12 லூ 22:7-8 மற்றும் யாத் 12 :18ம் வசனங்கள் கூறுகிறது.

இயேசு இராவிருந்துக்கு, ஒரு நாள் முழுவதும் பயணித்து சென்றாரா ? அது சனி கிழமையாக இருந்ததா ? அவர் ஓய்வு நாள் அன்று பிரமாணத்தை மீறினாரா ?

கமாலியேல் என்ற மூப்பர் ஓய்வு நாளில் கிட்டத்தட்ட 2000 முழங்கள் (1கிமி) பயணிப்பதற்கு அனுமதி கொடுத்திருந்தார். (அப் 1:12) ஆனால் எருசலேமிலிருந்து பெத்தானியா கிட்டத்தட்ட 2கிமி தூரத்தில் இருந்தது. இயேசு சனிக்கிழமை பெத்தானியாவுக்கு பயணித்திருந்தால் "ஓய்வு நாள் பிரமாணத்தை முறித்திருப்பார். ஆயினும் இயேசு பயணத்தை துவங்கினாரா இல்லையா என்பதை யோவான் 12:1ம் வசனம் சரியாக குறிப்பிடவில்லை. ஆறு நாட்களுக்கு முன் இயேசு பெத்தானியாவுக்கு வந்தார் என்று குறிப்புகள் கூறுகிறது.

இயேசு நீசான் 9ம் தேதி ஞாயிற்றுக்கிழமை எருசலேமுக்குள் நுழைந்திருந்தால், நீசான் 10ம் தேதி திங்கள் கிழமை அவர் ஆலயத்தை சுத்திகரித்திருக்க வேண்டும். அதற்குப்பின் நீசான் 11ம் தேதி செவ்வாய் கிழமை யூத தலைவர்களோடு வாக்குவாதங்களைச்செய்துவிட்டு, தம்முடைய சீஷர்களுக்கு இறுதி பாடங்களைக் கற்பித்திருக்கவேண்டும். ஆனால் இந்தக் கருத்து மத் 26:2 மற்றம் மாற் 14:1ம் வசனங்களில சற்று முரண்பாடாக தோன்றுகிறது. ஏனெனில், இந்தப் பாடங்கள் முடிவடைந்தது என்று குறிப்பிடுகிறது. "இரண்டு நாளைக்குப்பின்பு புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை வந்தது. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், அவரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி வகைதேடினார்கள்" (சனி கிழமை மாற் 14:1)

யோவான் 12:1 "பஸ்கா" என்பது நீசான் 15ம் தேதியில் அனுசரிக்கப்படும். இது பஸ்கா பண்டிகையைக் குறிப்பிடுகிறது. அதற்குப்பின் இயேசு நீசான் 9ம் தேதி ஞாயிற்று கிழமை பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்தார். நீசான் 10ம் தேதி திங்கள் கிழமை எருசலேமுக்குள் நுழைந்தார்.

இந்தக் கருத்தை ஆதரிப்போர் யாத் 12:3 ம் வசனத்தின்படி பஸ்கா ஆடு நீசான் 10ம் தேதி தேர்வு செய்யப்படுகிறது என்று கூறுகிறார்கள் - இதே நாளில் நீசான் 10ம் தேதி இயேசு இராஜாவாக எருசலேமுக்குள் நுழைந்தார். யோவான் 18:28, 19:14, மற்றும் எண் 28:16-17 வசனங்களும் இதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. (யேகோவா தேவனின் பஸ்காவுக்கும், இஸ்ரயேலர்களின் பஸ்காவுக்கும் உள்ள வித்தியாசங்கள் இதில் காணப்படுகிறது. )

இயேசுவும், அவருடைய சீஷர்களும் பெத்தானியாவுக்கு ஞாயிறு மதியம் (நீசான் 9) வந்திருந்தால், 25 கிமி தொலைவில் இருந்த எரிகோவிலிருந்து ஒரு முழு நாள் பிரயாணமாக வந்திருக்க வேண்டும். அப்பொழுது, இயேசு நீசான் 10ம் தேதி திங்கள் கிழமை எருசலேமுக்குள் நுழைந்திருக்கவேண்டும். இந்தக் காரியம் யாத்திராகமம் 12:3ம் வசனத்தோடு ஒத்துப்போகிறது. செவ்வாய் கிழமை ஆலயத்தை சுத்திகரித்திருக்க வேண்டும் . புதன் கிழமை யூத தலைவர்களோடு இயேசு விவாதித்து, இரண்டு நாட்களுக்கு முன் தம்முடைய சீஷர்களுக்கு இறுதி பாடங்களைக் கொடுத்திருக்கவேண்டும். "இரண்டு நாளைக்குப்பின்பு புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை வந்தது. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், அவரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி வகைதேடினார்கள்." (மாற் 14:1)

ஆயினும் இந்தக் கேள்வியை நாம் ஆழ்ந்து கவனிக்கும் போது, இன்று நாம் செய்யக்கூடிய காரியங்களை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை.

இராஜ்யத்தை குறித்த மூன்று உவமைகள்

# இராஜியம் உங்களிடமிருந்து எடுக்கப்படும்

"ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத் 21:31)



**Jeffrey Earl**

### மேலோட்டமான பார்வை

சத்தியத்தை அல்லது மத கோட்பாடுகளைக் கற்பிப்பதற்கு, பயன்படுத்தக்கூடிய ஒப்புமையாக சொல்லப்படும், சிறு கதைகளை உவமைகள் என்று நாம் கூறுகிறோம். இவைகளுக்குள் மற்றொரு விளக்கங்கள் அல்லது செய்முறைகளும் இருக்கும். பொதுவாக வேதாகமத்தில் இயல்பான மனுஷ சூழ்நிலையிலிருந்து சம்பவங்கள் எடுத்துரைக்கப் பட்டு, ஆவிக்குரிய பாடங்கள் கற்பிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட உவமைகள் அனைத்தும் இராஜ்யத்தை குறித்தே சொல்லப்பட் டிருக்கிறது. சில உவமைகள் நேரடியாகவும், சில உவமைகள் மறைமுகமாகவும் சொல்லப்படுகிறது. இயேசு சொன்ன பதினைந்து உவமைகள் தேவனுடைய இராஜ்யத்தை குறித்ததாகும். மற்றும் மத்தேயு சுவிசேஷத்தில், பன்னிரெண்டு உவமைகள் "பரலோகராஜ்யம் ....... ஒப்பாக" என்ற வார்த்தைகளோடு துவங்குகிறது.

இயேசு உவமைகளினால் பேசின காரணம் என்ன ? என்று சீஷர்கள் இயேசுவினிடம் கேட்டார்கள் - மத் 13:10-13"அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர் களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்"

அதற்கு பதிலாக "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்...இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே" (மத் 13:13,15) என்று இயேசு சொன்னார். இயேசுவின் செய்திகளை கேட்டு உணர்ந்து கொள்ளும் அளவுக்கு இஸ்ரயேலர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. இந்தச் சுவிசேஷ யுகத்தில் "சிறு மந்தை" மட்டுமே இயேசுவின் அழைப்பை உணர்ந்து அவருடைய செய்திகளைப் புரிந்து கொள்ள முடியும். தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை பூர்த்தி அடைந்து அவர்கள் மகிமை பட்டபின், ஆயிர வருட ஆட்சியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு இந்த இரகசியங்கள் உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும்.

"இரண்டு குமாரர்களை" பற்றிய உவமையை நாம் முதலில் பார்க்கலாம். இந்த உவமை மத்தேயு சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிறது. "துன்மார்க்கமான தோட்டக்காரன்" என்ற இரண்டாவது உவமை மத்தேயு, மாற்கு, லூக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் "கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களை" பற்றி சொல்லப்பட்ட மூன்றாவது உவமை மத்தேயு மற்றும் லூக்காவில் மட்டும் காணப்படுகிறது. இயேசுவின் ஊழிய காலத்திலிருந்து யூத மத தலைவர்களைப் பற்றி முதல் இரண்டு உவமைகளில் பேசப்படுகிறது. நமக்கும் சில பாடங்கள் அதில் உள்ளது. கடைசியாக சொல்லப்பட்ட உவமை யூதர்களின் புறக்கணிப்பை மட்டும் குறிப்பிடாமல், மணவாட்டியின் அழைப்பிற்கு ஆயத்தப்படாதவர்களை பற்றியும் கூறப்படுகிறது.

### இரண்டு குமாரர்களை பற்றிய உவமை - (மத்21:28-32)

*"ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான்.*

*அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். 30. இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை.*

*இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*
*ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்."*

யூத ஜாதியின் தலைமைக்கும், இயேசுவின் ஊழியத்தின் போதும், பரலோக இராஜ்யத்தின் செய்திகளைக் குறித்தும் , கொடுக்கப்பட்ட மதிப்புக்கும் உள்ள வேறுபாட்டை இந்த உவமை காட்டுகிறது. இந்த உவமையில் "அந்த மனுஷன்" என்று சொல்லப்படும் நபர் பிதாவாகிய "யேகோவா" தேவனை அடையாளப்படுத்துகிறார். விசுவாசமுள்ள முற்பிதாக்களின் நிமித்தம், தேவன் இஸ்ரயேல் ஜாதியாருக்கு மேலான ஓர் அழைப்பை கொடுத்தார். இங்கு சொல்லப்பட்ட இரண்டு குமாரர்களும் இரண்டு வகுப்பாரை குறிக்கிறார்கள். தேவனை சேவிப்பதில் ஆர்வம் இல்லாத பாவிகளையும், ஆயக்காரர்களும், வேசிகளும் குறிக்கக்கூடும். அவர்களை மனம் திரும்ப அவர்கள் பாவத்தில் ஜீவித்ததினால் மனந்திரும்ப வேண்டும் என்று வந்த யோவான் ஸ்நானகன் கூறினார். உடனே அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக வருந்தினார்கள்."அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்." மாற் 12:37

யோனா போதிப்பதற்கு நினிவே பட்டணத்திற்கு அனுப்பப்பட்டதும் இதற்கு ஓர் இணையாக காணப் படுகிறது. நினிவே பட்டணத்து ஜனங்கள் மனம் திரும்புவார்களா? என்ற சந்தேகம் இருந்ததினால் அங்கு செல்வதற்கு யோனா மறுத்துவிட்டார். ஆயினும், நினிவே பட்டணத்து ஜனங்கள், இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பாவிகளைபோல, தங்களுடைய பாவங்களுக்காக உபவாசித்து மனம் வருந்தினார்கள்.

இரண்டாவது குமாரன் அடுத்த வகுப்பாராகிய பரிசேயர்கள், போதகர்கள், சதுசேயர்களை அடையாளப்படுத்தவேண்டும். இவர்கள் நியாயப்பிரமாணத்தை நன்கு அறிந்தவர்கள். வெளிப்புறத்தில் பக்தியுள்ளவர்களாகவும், நடத்தையில் முரண்பாடாகவும் வாழ்ந்தவர்கள். இவர்கள் தெய்வீகமான பணியைச் செய்யாமல் தங்களுடைய சொந்த விருப்பங்களை நிறைவேற்றி, கனத்தையும், மகிமையையும் தேடினார்கள். இயேசு அவர்களை மாய்மாலக்காரர்கள் என்று கண்டனம் செய்தார். இந்த இரண்டாவது வகுப்பாராகிய ஜனங்கள், ஒரு ஜாதியாக நீண்ட காலம் மாய்மாலம் செய்து கொண்டு, அவிசுவாசமாக வாழ்ந்து வந்ததினால் தேவன் அவர்களை புறக்கணித்தார்.

கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம் இந்த உவமையிலிருந்து ஒரு பாடத்தைக்கற்று கொள்ளலாம். நம்முடைய சகோதரர்களை சேவிப்போம் என்று வாயின் வார்த்தையில் சொல்லாமல், அவைகளை நாம் செயல்களில் காட்டக்கூடியவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய சகோதரர்களின் மாம்சத்திற்குரிய தேவைகளையும், ஆவிக்குரிய தேவைகளையும் நம்மால் முடிந்த வரைக்கும் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அன்று இருந்த பரிசேயர்கள், சதுசேயர்களை போல நாமும் எளிதில் விழுந்துவிடலாம். வசனங்களில் உள்ள நுணுக்கமான காரியங்களையும் புரிந்துகொண்டு, இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களின் வார்த்தையின்படி நாம் அனைத்தையும் நிறை வேற்றும்போது, நம்மை அறியாத ஒரு பெருமை நமக்குள் நுழைந்து விடக்கூடாது (மத் 7:24-26) மற்ற கிறிஸ்தவர்களை காட்டிலும் நம்மை நாம் மிக அதிக பரிசுத்தவான்களாக எண்ணிக்கொண்டு, மற்றவர்களை இராஜ்யத்திற்கு அபாத்திரராக நியாயம் தீர்த்து விடக்கூடாது (மத் 23:13, மத் 7:1-5) நாம் உண்மை கிறிஸ்தவர்களாக இல்லாமல் கிறிஸ்தவர்களை போல வேஷம் போடுவதைகூட இந்த உலகத்தில் அநேகர் புரிந்துகொள்கிறார்கள்.

**துன்மார்க்கமான தோட்டக்காரனைப் பற்றிய உவமை**

**மத் 21:33-46, மாற் 12:1-12, லூக் 20: 9-19**

*" வேறொரு உவமையைக் கேளுங்கள்: வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாகவிட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்.*
*கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்.*
*தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப்பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலைசெய்து, ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.*

*பின்னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களையும் அப்படியே செய்தார்கள்.*

*கடைசியிலே அவன்: என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.*

*தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி; இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு;*

*அவனைப் பிடித்துத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.*

*அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்.*

*அதற்கு அவர்கள்: அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்றகாலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள்.*

*இயேசு அவர்களை நோக்கி: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?*

*ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.*

*இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக்குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து,*

*அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்."*

இஸ்ரயேல் தேசத்தாரின் மத தலைவர்கள் மேசியாவினிடத்திலும், தேவனுடைய சட்டதிட்டங்களுக்கும் இசைவாக வழிநடத்தக்கூடிய பொறுப்புகளை பெற்றவர்கள் எவ்வாறு புறக்கணிக்கப் பட்டார்கள் என்பதை இந்த உவமை விவரிக்கிறது. இந்த உவமையில்(ஏசா 5:1-7ம் வசனத்தில் சொன்னது போல) திராட்சை தோட்டம் இஸ்ரயேல் தேசத்தை அடையாளப்படுத்துகிறது. அதை சுற்றியிருந்த வேலி தேவனுடைய பாதுகாப்பை குறிக்கிறது. (விசுவாசமாக இருக்கும் வரைக்கும்) அந்த ஆலயம்தேவனால் கையளிக்கப்படட அநேக நன்மைகளை அடையாளப்படுத்துகிறது. ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் இல்லாதபோது அவர்கள் எச்சரிப்பதற்காக தேவனால் நியமிக்கப்பட்ட தீர்க்கதரிசிகளை, அந்தக் கோபுரம் அடையாளப் படுத்துகிறது. தோட்டக்காரர்கள் ஜனங்களை வழிநடத்தி, தேவனுடைய நியாயப் பிரமாணத்தை போதித்து, பராமரிக்கக்கூடிய பரிசேயர்கள், பிரதான ஆசாரியர்கள் மற்றும் இஸ்ரயேலை ஆளக்கூடிய மத தலைவர்களைக் குறிக்கிறார்கள். அவருடைய இராஜ்யத்தை பெற்று கொள்ளும்படி தூர தேசத்திற்கு சென்ற வீட்டு எஜமான் அநேக ஊழியக்காரர்களை அனுப்பி (தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள்) பலன்களை எடுத்து வரச் சொன்னார். அதாவது தேவனுடைய நியாயப் பிரமாணத்தை கடைபிடித்து அவருக்கேற்ற ஆவியின் கனிகளை கொடுப்பவர் களை காணும்படி அனுப்பினார். ஆயினும், யூதர்களில் வெகு சிலரே தேவனுடைய பிரமாணத்தை கடைபிடித்தார்கள்.

யூத மத தலைவர்கள் தங்களுடைய பதவியை காத்துக்கொள்வதற்கு, யூத யுகம் முழுவதிலும் தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளையும் , போதகர்களையும் கொடூரமாக நடத்தி, உபத்திரவப்படுத்தி, சிலரை கொலையும் செய்தார்கள். இறுதியில் அற்புதங்களை செய்து மரித்தோரை உயிர்ப்பிக்கக்கூடிய தன்னுடைய சொந்த குமாரனை மதிப்பார்கள் என்று எண்ணி அந்த எஜமான் (யேகோவா தேவன்) தன்னுடைய சொந்த குமாரனை (இயேசு) அனுப்பினார். ஆனால் அவர்களோ தங்களுடைய பதவியை தக்கவைத்துக் கொள்ள, இயேசுவையும் கொலை செய்தார்கள். (யோவ 11:48)

தங்களுடைய அதிகாரத்தையும். வல்லமையையும், கௌரவத்தையும் தக்க வைத்துக்கொள்ள யூத தலைவர்கள் விரும்பினார்கள். இறுதியில் அவர்கள் அனைவரும் புறக்கணிக் கப்பட்டார்கள். திராட்ச தோட்டம் - மற்றவர்களிடம் கொடுக்கப்பட்டது. அதாவது கனி கொடுப்பதற்கு ஆயத்தமானவர்களுக்கு கொடுக்கப்பட்டது. எஜமான் தன்னுடைய திராட்ச தோட்டத்திற்கு திரும்பி வந்து அவர்களை அழித்து போட்டார். கிபி 70-73 ம் வருடங்களில் ரோம ஆட்சியாளர்கள் இஸ்ரயேல் தேசத்தை முற்றிலும் அழித்துப்போட்டார்கள்.

மூலைக்கு தலைக்கல், இஸ்ரயேலின் மேசியாவாகிய இயேசுவை, அடையாளப்படுத்துகிறது. ஆகாது என்று பரிசேயர்களால் தள்ளின கல்லே மூளைக்கு தலைக்கல்லாயிற்று. இதன் பலனாக ஆபிரகாமின் வாக்குத்தத்தம் - வானத்தின் நட்சத்திரங்களுக்குரிய ஆசீர்வாதம், மாம்ச

இஸ்ரயேலர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக மாறுபவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

இந்த உவமையின் முடிவில், இயேசு தங்களைப்பற்றி குறிப்பிடுகிறார் என்று பரிசேயர்களும், சதுசேயர்களும் அறிந்துகொண்டார்கள். ஆனாலும் அவர்கள் இயேசுவை கொல்ல வகை தேடினார்கள். பொது ஜனங்களோ இயேசுவை ஒரு "தீர்க்கதரிசி" என்று எண்ணி அவரை பாதுகாத்தார்கள். மேலும் அவர்கள் இயேசுவை பிடிப்பதற்கு காலம் இன்னும் வராதிருந்தது.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் இரண்டாவது விளக்கத்தை இந்தச் சுவிசேஷ யுகத்தில் நாம் காணலாம். திராட்சத் தோட்டம் பொதுவாக முழு கிறிஸ்தவ மண்டலத்தை அடையாளப்படுத்தும். இங்கு தோட்டக்காரர்கள், ரோம கத்தோலிக்க சபை துவக்கத்தில் இருந்த சபை போதகர்களையும், ஆட்சியாளர்களையும் அடையாளப்படுத்துவார்கள். இவர்கள் முழு அதிகாரத்தையும், வல்லமையையும் பெற்றிருந்தார்கள். அவர்களின் தவறுகளையும், பொய் போதனைகளையும், எதிர்ப்பவர்களுக்கும், இயேசுவை பின்பற்றி, நீதியுள்ள வாழ்க்கையை வாழ்ந்து தங்களை பலி செலுத்தக்கூடியவர்களை உபத்திர வப்படுத்தி கொலை செய்தார்கள். சுவிசேஷ யுகத்தின் சீர்த்திருத்த காலம் வரைக்கும் இது நடந்து வந்தது. சீர்த்திருத்தலின் காலத்திற்குபின் உண்மை கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும் காரியங்கள் நிறுத்தப்பட்டது. பழமை வாய்ந்த, தப்பறையான போதனைகளை (திரித்துவம், நித்திய ஆக்கினை) விசுவாசிப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது.

இந்த யுகத்தின் இறுதியில் பொது ஜனங்கள் வசனங்களில் உள்ள தேவனுடைய சத்தியங்களைப் புரிந்து கொள்வதற்கு, தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை மொழி பெயர்ப்பாளர்களாகவும், சீர்த்திருத்தவாதிகளாகவும், சுவிசேஷத்தை பல மொழிகளில் கூறக்கூடிய ஊழியக்காரர்களாகவும் அனுப்பினார். எடுத்துக்காட்டாக 1861ம் வருடத்தில் "வேதாகமம்" அறியப்பட்ட சகல மொழிகளிலும் அச்சடிக்கப்பட்டது. இந்தப் பாகத்தின் கடைசி கால அறுவடையில் வரக்கூடிய உண்மையான கடைசி பலன்களுக்குரிய அழைப்புக்கும், தெரிந்துகொள்ளுதலுக்கும் வழிநடத்தியது.

**கலியாணவிருந்தைக் குறித்த உவமை**

(மத் 22:1-14, லூக் 14:16-24)

*"இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவென்றால்:*

*பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.*

*அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள்.*

*அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்.*

*அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள்.*

*மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள்.*

*ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்.*

*அப்பொழுது, அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்.*

*ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான். 10. அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது.*

*விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு:*

*சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்.*

*அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.*

*அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்."*

வலை உவமை, கோதுமை மற்றும் களைகளைப் பற்றிய உவமை, புத்தியுள்ள கன்னிகைகளை பற்றிய

உவமை, தாலந்து மற்றும் இராத்தல் போன்ற சில உவமைகள், மேல் கூறப்பட்ட உவமையைப் போல அர்த்தம் கொண்டதாக உள்ளது. மாறுவதற்கான வாய்ப்பு முதலில் யூத ஜாதிக்கு கொடுக்கப்பட்டது. அதற்குப்பின் புற ஜாதிகளுக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டதைக் குறித்து இந்த உவமை விவரிக்கிறது. இந்த உவமையிலும் சொல்லப்பட்ட இராஜா நம்முடைய பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரன் இயேசுவையும் அடையாளப்படுத்துகிறார்கள். முதலில் அனுப்பப்பட்ட ஊழியக்காரர்கள் மனந்திரும்புதலை பிரசங்கித்த யோவான் ஸ்நானகனை அடையாளப்படுத்துகிறார். இயேசுவின் மணவாட்டிகளாக மாறுவதற்கு உண்டான அழைப்பை கொடுக்க வரக்கூடிய இயேசுவை இஸ்ரயேல் ஜனங்கள் ஏற்றுக் கொள்வதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக அவர் அனுப்பட்டார். இயேசுவின் $3^{1/2}$ வருட ஊழியக் காலத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் பரலோக வகுப்பாராக மாறுவதற்கான வாய்ப்பை பெற்றிருந்தார்கள். இந்த அழைப்பின்போது வெகு சில யூதர்கள் மட்டுமே அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டனர். இயேசுவின் மரணத்திற்குபின் அவருடைய சீஷர்கள் யூதர்களிடம் அனுப்ப பட்டார்கள். அநேக யூதர்கள் தங்களுடைய சொந்த வேலைகளில் முழுகி போனதினால், திருமண விருந்திற்கு வராமல் போனார்கள். அநேகர் தங்களுடைய வியாபாரத்திலும், அரசியலிலும், பதவிகளிலும் முழுமையாக ஈடுபட்டிருந்தார்கள். வந்த ஊழியக்காரர்களை அவர்கள் அவமானப்படுத்தி , உபத்திரவப்படுத்தி, கொலை செய்தார்கள். இறுதியாக இராஜாவுக்கு கடும் கோபம் உண்டாகி, தன்னுடைய சேனைகளை (ரோம அதிகாரம்) அனுப்பி இஸ்ரயேல் ஜாதியை அழித்துப் போட்டார்.

திருமண விருந்திற்கான மூன்றாவது அழைப்பு புறஜாதிகளுக்கு வந்தது. ஆயினும், இறுதியான தேர்வில் அழைக்கப்பட்டவர்கள் வெற்றி அடைவார்கள் என்பதை அறியாததினால் அவர்களின் தகுதியைப் பாராமல் திருமணத்தின் போது விருந்தாளிகளை இராஜா தேர்வு செய்தார். இதில் அழைக்கப்பட்டவர்களில் மிக குறைவானவர்கள் மட்டுமே, இராஜாவின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றபடி நடந்து கொள்வார்கள். இந்த விருந்தில் கலந்து கொள்வதற்கு சரியான அடிப்படை சத்தியங்களில் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டும் போதாது, அதற்கேற்ற குணாதிசயங்களிலும் வளர்ந்திருக்க வேண்டும்.

மற்ற உவமைகளில் கலியாண விருந்துக்கு தேர்வு செய்யப்பட்ட, தகுதிபெற்றவர்கள் கோதுமை மணிகள் மற்றும் புத்தியுள்ள கன்னிகைகள் என்று அழைக்கபடுகிறார்கள். இந்த மணவாட்டிக்குரிய அழைப்பிற்கு அபாத்திரமானவர்கள் அழுகையும், பற்கடிப்பும் நிறைந்த காரிருளில் தள்ளப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த அழைப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் நிச்சயமாக மிகப்பெரிய ஏமாற்றங்களை அடைவார்கள். "அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர் " என்று இந்த உவமையின் முடிவில் சொல்லப்படுகிறது. ஆகவே அநேகர் அழைக்கப்பட்டாலும் , வெகு சிலர் மட்டுமே விசுவாசமுள்ளவர்களாக தேர்வு செய்யப்படுகிறார்கள். (வெளி 17:14, "அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மற்றும் உண்மையுள்ளவர்கள்)

கர்த்தருடைய இராபோஜனத்தில் பங்கெடுப்பதற்கு மனரீதியாக ஆயத்தப்பட்டு கொண்டிருக்கும் நாம் இந்த உவமைகளிலிருந்து அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற் குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா 6:10)

இயேசுவிடம் கேட்கப்பட்ட கேள்விகள்

# ஓர் இராஜாவுக்கு ஐந்து கேள்விகள்



"அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை" (மத் 22:46)

**Dan Wesol**

சகரியா 9: 9 ம் வசனத்தில் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக, இயேசு கழுதையின் மேல் எருசலேமுக்கு வந்தார். எருசலேமில் பஸ்கா பண்டிகையைக்கொண்டாட வந்த யூதர்கள் மகிழ்ச்சியோடு இயேசுவை வரவேற்றார்கள். "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக் 19: 38)

"அப்பொழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா? இதோ, உலகமே அவருக்குப் பின்சென்று போயிற்றே "(யோவ12:19) என்று அவர்கள் நினைத்தபடியால் பொறமை அடைந்த பரிசேயர்கள், சீஷர்களை அதட்டும்படி இயேசுவை கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கையை இயேசு மறுத்துவிட்டு - "அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் " (லூக் 19:40 ) என்று பதில் அளித்தார்.

தேவன் தம்மை இராஜாவாக அபிஷேகிக்கப்பட்ட அதிகாரத்தை பெற்ற இயேசு, தன்னைப் பற்றி கூறிய ஏசாயா, ஏரேமியாவின் தீர்க்கதரிசனங்களை கூறி ஆலயத்தை சுத்திகரித்தார். "என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்."(மத் 21:13, ஏசா 56:7, ஏரே 7:11)

### இந்தக் குழந்தைகள் என்ன சொல்கிறதைக் கேட்கிறீரோ?

இயேசு ஆலயத்தை சுத்திகரித்தபின் மத தலைவர்கள் அவருக்கு நன்றி கூறவும் இல்லை, அவருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்கவும் இல்லை. ஆனால் இயேசுவிடம் ஆலயத்திற்கு வந்த முடவர்களும், பார்வையற்றவர்களும் குணமாக்கப் பட்டார்கள். ஆகவே ஆலயத்திற்கு வந்த இவர்கள் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தார்கள். இது மகிழ்ச்சியின் ஆரவாரம் மட்டும் அல்ல, இஸ்ரயேலுக்கு இயேசு கொடுக்க போகும் விடுதலையையும் எண்ணி களிகூர்ந்தார்கள். ஏனெனில், இவர்களை ரோம அரசாங்கத்தின் நுகத்திலிருந்து விடுவிக்கவும், இஸ்ரயேலை சீர்பொருத்தி, ஜாதிகளுக்கு ஒளியாக இருப்பதற்காக மேசியாவை எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள்.

இஸ்ரயேல் ஜனங்கள் பிரதான ஆசாரியர்களிடமும், பரிசேயர்களிடமும், வேத பாரகர்களிடமும் அவர்கள் விண்ணப்பிக்கவில்லை. பரிசுத்த வேதாகமத்திலிருந்து கிருபை பொருந்தின வார்த்தைகளை பேசின மனுஷனிடம் இவைகளை கேட்டார்கள். திறமையோடு சொற்பொழிவாற்றும் ஓர் இராஜாவிடம் கேட்டார்கள். ஆலயத்தில் உலகப் பிரகாரமான வியாபாரத்தை நடப்பித்த ஒவ்வொருவரையும் தைரியமாக வெளியே விரட்டி அற்புதமாக சுகமளித்த ஒரு மனுஷனை கேட்டார்கள். ஏனெனில் தங்களுடைய தேசத்தை இரட்சிக்க இந்த மனுஷனுக்கு மட்டுமே வல்லமை இருந்தது என்று நம்பினார்கள்.

இப்படிப்பட்ட புகழ்ச்சியான வார்த்தைகளை பெற்றுக் கொள்ள இயேசு தகுதியற்றவர் என்று பிரதான ஆசாரியர்களும் வேத பாரகர்களும் எண்ணினார்கள், இயேசுவை தங்களுடைய இராஜ ாவாக ஏற்றுக்கொண்டு அவருக்கு வேண்டிய உதவிகள் செய்வதை விட்டு விட்டு ஜனங்கள் மத்தியில் இயேசுவை அவமானபடுத்தும்படியாக இஸ்ரயேலின் மதத் தலைவர்கள் அவரிடம் அநேக கேள்விகள் எழுப்பினார்கள்."அவரை நோக்கி: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள் ?" (மத் 21:16) என்பதே அவர்கள் முதல் கேள்வியாகும். ஆரவாரித்துக் கொண்டிருந்த ஜனங்களை, இயேசு கண்டிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்ப்பார்த்தனர்.

இயேசு செய்த அற்புதத்தினால் குணமடைந்த ஜனங்களின் மகிழ்ச்சியான ஆரவாரத்தைக் கண்டிப்பதற்கு பதிலாக"குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா (சங்கீ 8:2)" (மத் 21:16) என்று இயேசு மறுமொழியாக கேள்வி எழுப்பினார்.

குருடர்கள் பார்வை பெற்றார்கள், முடவர்கள் காலுான்றி நின்றார்கள். இவர்கள் அனைவரும் - "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா " என்று

தங்களுடைய கண்ணில் ஆனந்த கண்ணீர் நிரம்பி வழிய மகிழ்ச்சியில் ஆரவாரித்தார்கள். தேவனுக்கும், குடும்பத்திற்கும், மற்ற ஜனங்களுக்கும் உதவி செய்யும்படியாக புதிய வழிகள் திறக்கப்பட்டது. கனவாக மாத்திரம் இருந்த இப்படிப்பட்ட வாய்ப்புகள், சில நிமிடங்களில் உண்மையாகி தாங்கள் எட்டி பிடிக்கும் தூரத்தில் நின்றது.

ஆயினும், பார்வை அடைந்தவர்களும் காலூன்றி நின்றவர்களோடும் கூட சந்தோஷப்பட்டு தேவனை துதிப்பதற்குப் பதிலாக ஜனங்கள் இயேசுவை போற்றுவதை கண்டு இந்தப் பிரதான ஆசாரியர்களும், வேத பாரகர்களும் மிகுந்த கோபம் அடைந்தனர்.

**எந்த அதிகாரத்தில்?**

அடுத்த நாள் இயேசு ஆலயத்தில் உள்ள ஜனங்களுக்கு போதித்தார். தேவனுடைய நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேல் ஜனங்களுக்கு கற்பிக்கக் கூடிய அதிகாரத்தையும், கடமையையும் -பிரதான ஆசாரியர்களும், வேத பாரகர்களும், மூப்பர்களும் பெற்றிருந்தார்கள். வேதத்தை கற்பிக்கவும், வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கவும்; இயேசு தேவனிடத்தில் அதிகாரத்தை பெற்றிருந்தாரா? என்பதை அவர்கள் அறிய விரும்பினார்கள். ஆகவே "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்கிறதற்கு அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார் என்று கேட்டார்கள்" (மாற்கு 11:28) என்ற இரண்டாவது கேள்வியை இயேசுவிடம் கேட்டார்கள்.

இவர்கள் இயேசுவினால் சொஸ்தமடைந்த ஜனங்களிடம் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை. ஏனெனில் அதற்கு ஆதாரமான சாட்சிகள் ஜனங்களின் முகத்தில் காணப்பட்டது. ஆலயத்திலிருந்து காசுக்காரர்களையும், வியாபாரிகளையும் விரட்டியடித்ததின் நீதியான கிரியைகளைக் குறித்தும், அவர்கள் எந்தக் கேள்வியும் கேட்க வில்லை. ஏனெனில், எப்படிப்பட்ட வியாபாரங்களும் ஆலயத்திற்குள் நடக்க கூடாததென்று அனைவரும் அறிந்திருந்தனர். யூத மத தலைவர்களின் சிந்தனைகள் இப்படிப்பட்ட காரியங்களின் நிமித்தம் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். வியாபார ஸ்தலமாக மாற்றப்பட்ட ஆலயம், மீண்டும் ஒரு முறை தேவனை ஆராதிப்பதற்கு ஓர் அமைதியான ஸ்தலமாக மாறியதைக் குறித்து, இவர்கள் மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக ஜனங்களுக்கு முன் இயேசுவை அவமானப்படுத்தும்படி "நீர் எந்த அதிகாரத்தில் இவைகளை செய்கிறீர்" ? என்ற கேள்வியை இயேசுவிடம் கேட்டார்கள். தேவனுடைய தீர்க்கதரிசியைப் போல இயேசு, சத்தியத்தை பேசி ஓர் இராஜாவின் அதிகாரத்தைப் பெற்றிருந்த போதிலும், யூத மத தலைவர்கள் தங்களுடைய அதிகாரத்தை அபகரிக்க வந்த இயேசுவை அற்பமான ஒரு தச்சனுடைய குமாரனை போல கண்ணோக்கினார்கள். தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்ட இஸ்ரயேலின் இரட்சகராக அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தக் காரியங்கள் "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" ஏசாயா 53:1, ரோம 10:16 என்ற ஏசாயாவின் வார்த்தைகள் நிறைவேறியது.

இயேசு மறுமொழியாக அவர்களிடம் கேள்வி எழுப்பினார்"இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், நீங்கள் எனக்கு உத்தரவு சொல்லுங்கள், அப்பொழுது நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன். யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்" (மாற்கு 11:29-30)

இயேசு யூத மத தலைவர்களைக் குழப்புவதற்காக இந்தக் கேள்வியை கேட்காமல் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்க உதவி செய்தார். சொஸ்தமடைந்த குருடரும், முடவரும் மற்ற வியாதியஸ்தரும் இன்னும் மற்ற ஜனங்களும் இந்த அற்புதங்களை கண்டு - "யோவான் ஸ்நானகனைப் போல இயேசு இந்த அதிகாரத்தை பரலோகத்திலிருந்து பெற்றார்." என்று அறிந்திருந்தார்கள். ஆனால் இந்தப் பதிலை பிரதான ஆசாரியர்களும், வேத பாரகர்களும் ஏற்றுக் கொள்ள வில்லை.

"அதற்கு அவர்கள்: தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்று கேட்பார். மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்படவேண்டியதாயிருக்கும்; எல்லாரும் யோவானை மெய்யாகத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணி; இயேசுவுக்கு பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள். அப்பொழுது இயேசு: நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்" (மாற்கு 11:31-33)

அவர்கள் விசுவாசத்திற்கு உண்மையாக பதிலளிக்காமல் "எங்களுக்குத் தெரியாது என்று யூத மத தலைவர்கள் பொய் சொன்னார்கள்." யோவான்

ஸ்நானகன் பரத்திலிருந்து அதிகாரத்தை பெறவில்லை என்று பதிலளித்தால் பொது ஜனங்களின் செயல்பாடுகள் எப்படி இருக்குமோ என்று பயந்தார்கள். அதே நேரத்தில் யோவான் ஸ்நானகன் பரத்திலிருந்து பெற்றார் என்று பதிலளித்தால் "இதோ, தேவ ஆட்டுக்குட்டி " (யோவான் 1:29,36) என்று யோவான் சொன்னது போல இயேசுவும் பரத்திலிருந்து அதிகாரத்தை பெற்றார் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்திருக்கும். இதற்குப் பதிலாக எங்களுக்கு தெரியாது என்று பொய் சொன்னார்கள்.

**இது நியாயமா?**

மறுநாளில் பரிசேயர்கள் இயேசு கிறிஸ்துவை பிடிப்பதற்கு ஏரோதியர்களுடன் தங்களது சீஷர்களையும் அனுப்பினார்கள். இந்த ஏரோதியர்கள் ரோம ஆட்சிக்கு இசைவாக இருக்கும் அரசியல்வாதிகள். இவர்கள் ரோமர்களுக்கு வரி செலுத்துவதை ஆதரித்தார்கள். ஆனால் பரிசேயர்களோ இந்தக் கருத்துக்கு இசைவாக இருக்க வில்லை. ஆனாலும் இப்படி எதிரிடையாக செயல்படும் குழுவினர்கள். இயேசுவின் பெருமையையும், அவருடைய புகழையும் முடிவுக்கு கொண்டுவர இசைந்து செயல்பட்டார்கள்.

"ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்" (மத் 22:17) என்ற மூன்றாவது கேள்வியை இயேசுவிடம் கேட்டார்கள். இயேசு வரி செலுத்துவது நியாயமான காரியம் என்று சொன்னால் இவர் ஜனங்களிடம் பகைக்கப்படுவார்கள். ஏனெனில் இராயனுக்கு வரிசெலுத்துவதில் ஜனங்கள் அனைவரும் அதிகமாக பாரமடைந்திருந்தார்கள். ஏனெனில், வரி வசூலிப்பவர்கள் தங்களுக்கும் தேவையான பணத்தையும் சேர்த்து வசூலித்தார்கள். அதே நேரத்தில் இராயனுக்கு வரி செலுத்த வேண்டாம் என்று சொன்னால், அவர் ரோம சட்டத்திற்கு விரோதமாக குற்றவாளியாவார் என்பதை அறிந்த பரிசேயர்கள் இப்படிப்பட்ட கேள்வியை எழுப்பினார்கள்.

இவர்களின் இருதயத்தின் கொடூரமான எண்ணங்களும் இருளான சிந்தைகளையும், இந்தக் கேள்வி வெளிப்படுத்தியது. (சகரி 7:9 -12, லூக்கா 16:15) பரிசேயர் தங்களுடைய சீஷர்களை அனுப்பி இயேசுவிடம் இந்த கேள்விகளை கேட்டார்கள். அவர்களுடைய முயற்சியில் நீதிமான்களாய் காட்டிக் கொள்வதற்கு அநேக காரியங்களைச் செய்தார்கள். இயேசுவை தங்களுடைய சொந்த இனமாக அவர்கள் கருதாமல் அவரை ஒரு பகைவரைப் போல நடத்தினார்கள். (லேவி 19:15-17)

பரிசேயரின் சீஷர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு அதிக கனத்தை கொடுப்பது போல வேஷம் போட்டனர்."தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" (மத் 22:16) அதற்குப் பின் "ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்" (மத் 22:17) என்று அடுத்த வலையை விரித்தார்கள். இதை கேட்டுக் கொண்டிருந்த ஜனங்கள் இந்தச் சீஷர்களின் நேர்மையான விருப்பத்திற்கு இயேசுவின் நியாயத்தீர்ப்பை ஆர்வத்தோடு எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆயினும் இயேசு இவர்களின் வஞ்சனையை புரிந்துக்கொண்டு"அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்து: நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படிக்கு ஒருபணத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" (மாற்கு 12:15) என்று கேட்டார். ஆனால் இப்படிப்பட்ட பதிலை சீஷர்கள் எதிர்ப்பார்க்கவில்லை. இயேசு எந்த விதத்திலும் தயங்க வில்லை. இவைகளினால் பிடிபட்டு விடுவோமோ என்று பயப்படவும் இல்லை. அவரை பிடிக்கும்படியான முயற்சியைத் தெளிவாக அறிந்துகொண்டார்.

அவர் ஒரு நாணயத்தை கேட்டபோது அவர்கள் அனைவரும் குழப்பம் அடைந்திருக்க வேண்டும்"நான் பார்க்கும்படிக்கு ஒருபணத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார். அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்: இந்த சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார்; இராயனுடையது என்றார்கள். அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அவரைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (மாற் 12:13-17) எவ்வளவு ஞானமான ஒரு பதில்

பரிசேயரின் சீஷர்கள் இந்தப் பதிலை கேட்ட உடன் வாயடைத்து நின்றார்கள். பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்த இயேசு, இப்படிப்பட்ட வலைகளில் அகப்படாத படிக்கு எளிமையாக தப்பித்தார். பூமிக்குரிய ரோம ஆட்சியின் காரியங்களில் இருந்து தேவனுடைய காரியங்களைப் பிரித்து காட்டக்கூடிய இயேசுவின் திறமையை, ஜனங்கள் அதிகதிகமாக கனப்படுத்தினார்கள். இராயனுக்கு வரி செலுத்த

வேண்டும் என்று இயேசு சொன்னதினிமித்தம் ஏரோதியர்கள் அவர்மேல் எந்தக்குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பரிசேயர்கள் இயேசுவை கண்டனம் செய்யக்கூடிய முயற்சிகளை இயேசு முறியடித்தார். அதே நேரத்தில் அவர்களின் கேள்வியைப் பயன்படுத்தி சுற்றியுள்ள ஜனங்களுக்கு சில காரியங்களைப் போதிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார். தேவனுடையவைகளை தேவனுக்கு கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நியாயப்பிரமாணத்தின் கீழ் அவர்கள் பெற்றிருந்த வாய்ப்புகளையும், நன்மைகளையும் மற்றும் அவர்கள் செய்த உடன்படிக்கையின் முக்கியத்துவத்தையும் இயேசு அவர்களுக்கு நினைவுப்படுத்தினார். அவர்களின் அன்றாட ஜீவியம் இஸ்ரயேலரின் பரிசுத்தரை நித்தமும் பிரதிபலிக்க வேண்டும். இப்படிப்பட்ட பரலோக ஞானத்தை குறித்த போதகங்களை, இயேசுவின் வாயினால் போதிக்கப்படுவதை அவர்கள் கேட்காமல் உடனே அவ்விடம் விட்டு சென்றார்கள்.

**இவள் யாருடைய மனைவி?**

அந்த நாளின் இறுதி நேரத்தில் இஸ்ரயேலின் மூப்பர்களாகிய மற்றொரு பகுதியினராகிய சதுசேயர் இயேசுவை ஜனங்களுக்கு முன் அவமானபடுத்தும்படியாக 4வது கேள்வியை எழுப்பினார்கள்.( மத் 22:23-28) இந்தச் சதுசேயர்கள் உயிர்த்தெழுதல், பரிசுத்த ஆவி மற்றும் தூதர்களை விசுவாசிக்கவில்லை. இவர்களின் கேள்வி உயிர்த்தெழுதல் இல்லை என்று நிரூபிக்க கூடியதாக இருந்தது. "போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும் என்று மோசே சொன்னாரே."(உபா 25:5,6 மத் 22:24) ஒரு சகோதரனுடைய நாமம் அந்தக் கோத்திரத்திலிருந்து அற்றுபோகாமல் இருப்பதற் காக இந்தச்சட்டம் கொடுக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயேசுவை பிடிக்கும்படி சதுசேயர்கள் கேள்வி எழுப்பினார்கள் (மத் 22:25-27) ஏழு சகோதரர்களும் ஒரே ஸ்திரீயை விவாகம் செய்தார்கள். உயிர்த்தெழுதலில் இவள் யாருடைய மனைவியாக இருப்பாள்? ஒரு ஸ்திரீ ஒரே நேரத்தில் ஒரே மனுஷனை விவாகம் செய்வதற்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தது. (லேவி 20:2) உபா 22: 28) ஆனால் அனைவரின் உயிர்த்தெழுதலுக்குபின், இந்த ஸ்திரீ நியாயப்பிரமாணத்தின்படி எந்தப் புருஷனுக்கு மனைவியாக இருக்க முடியும்? என்று கேட்டு உயிர்த்தெழுதல் இல்லை என்பதை நிரூபிக்க முயன்றார்கள்.

மீண்டுமாக இயேசு இவ்வளவு கடினமான கேள்விக்கு தயக்கமின்றி பதிலளித்தார். இவர்கள் வசனங்களையும் தேவனுடைய வல்லமையையும் சரியாக புரிந்துகொள்ளாமல் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை இயேசு விளக்கினார். "உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல இருப்பார்கள்;"(மத் 22:30 ) பூமிக்குரிய உயிர்த்தெழுதலில் திருமண பந்தங்கள் தொடராத தினால் அந்த ஸ்திரீ யாருக்கும் மனைவியாக இருக்க வாய்ப்பில்லை. சந்தேகத்திற்கு இடமின்றி சதுசேயர்களால் இக்கருத்தை ஏற்றுகொள்ள முடியவில்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து புரிந்து கொள்வதற்கு உதவியாக. "மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் என்றார்."(மத் 22:31,32) என்ற கேள்வியை இயேசு கேட்டார். இயேசு வசனங்களின் ஆதாரங்களைக் கொண்டு, விவரித்த காரியங்களைக் குறித்து, அங்கு சுற்றி இருந்த ஜனங்கள் ஆச்சரியமடைந்து திகைத்துப் போனார்கள்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மரித்திருந்திருந்தாலும், தேவன் மோசேயுடன் பேசும்போது நிகழ்காலத்தில் பேசுவதைப் போல பேசினார். அவர்கள் நித்தியமாக கல்லறையில் விடுபடுவதில்லை என்று கூறினார். (அப் 2:29) இவர்கள் அனைவரும் மீண்டும் உயிர்பெறுவார்கள். இவர்கள் கிறிஸ்துவின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் மீண்டும் ஜீவனை பெறுவார்கள். "ஆதாமுக்குள் அனைவரும் மரிப்பது போல கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஜீவனைப் பெறுவார்கள்.(1கொரி 15:22)

**கற்பனைகளில் பிரதானமானது எது?**

சதுசேயர்களை இயேசு வாயடைத்தார் என்று பரிசேயர்கள் கேட்டபோது, இரு வகுப்பாரும் ஒருமித்து கூடினார்கள். இயேசு சதுசேயர்களுக்கு சரியான பதிலளித்தார் என்று அவர்கள் மகிழ்ச்சியடைந்திருந்தாலும், எருசலேமில் பஸ்காவை அனுசரிக்க வந்து கொண்டிருந்த ஜனங்கள் இயேசுவின் போதனைகளை கேட்டு

அவரை உயர்வாக எண்ணினதை இவர்களால் தாங்க முடியவில்லை. (மாற்கு 12:28-37ம் வசனங்களில் வேதபாரகன் மற்றும் நியாயசாஸ்திரியாக இருந்த ஒருவன் அவரை சோதிக்கும்படி இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டார். இது 5ம் கேள்வியாய் இருந்தது. (மாற் 12:28)

தயக்கமின்றி இயேசு -"இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக." (உபா 12:28) என்று நேரடியாக பதிலளித்தார். முதலாவது உண்மையும், நித்தியமும், ஜீவனுள்ள தங்களுடைய ஒரே சிருஷ்டிகருக்கு சகலத்திலும் கடமைப் பட்டிருக்கிறார்கள். இவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. (ஏசா 45:5,6) நம்முடைய அன்பிற்கும், கனத்திற்கும் பாத்திரமானவர் இவர் ஒருவரே.

இயேசு அதோடு முடிக்கவில்லை "உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூறுவா யாக;" (லேவி 19:18) ம் வசனத்தை அவர் இரண்டாவது கற்பனையாக கொடுத்தார். நாம் ஒவ்வொருவரும் தேவனோடு இசைந்திருப்பதற்கு ஒருவரில் ஒருவர் அன்புகூருவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். (1யோவா 3:11) .

"இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்." (மத் 22:40)

இயேசுவின் பதில்களை அந்த நியாயசாஸ்திரி கேட்டபோது அவன் இயேசுவின் வார்த்தைகளை ஒத்துக் கொண்டான். இந்தத் தனி நபர் கேட்கக் கூடிய காதுகளை பெற்றிருந்த படியால் இயேசுவுக்குள் இருந்த பரலோக ஞானத்தை புரிந்து கொண்டார். தேவனிடத்தில் காட்டக்கூடிய, ஒவ்வொருவருடைய அன்பும் , கீழ்படிதலும் மற்றும் தங்களை சுற்றி உள்ளவர்களிடம் தேவனுடைய அன்பை பிரதிபலிக்கும். இந்த இரண்டு காரியங்களுக்குள்ளும் நியாயப்பிரமாணம் முழுவதும் அடங்கியிருக்கிறது. "கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்." (மாற்கு 12:33, 1சாமு 15:22) அந்த நியாயசாஸ்திரி நியாயமான முறையில் பதிலளித்ததை கண்ட இயேசு - "அவன் விவேகமாய் உத்தரசொன்னதை இயேசு கண்டு: நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல என்றார். அதன் பின்பு ஒருவரும் அவரிடத்தில் யாதொரு கேள்வியுங் கேட்கத் துணியவில்லை." (மாற்கு12:34) என்று சொன்னார். உண்மையுள்ள இந்த தனி நபர் தேவனுடைய சுவிசேஷங்களை புரிந்துக் கொண்டு, கிறிஸ்துவின் சீஷராக மாறினார். தன்னோடு கூட இருக்கும் பரிசேயர்கள் மத்தியில் அவமானங்கள் ஏற்படும் என்று அறிந்திருந்த போதிலும், இந்த நியாயசாஸ்திரி இயேசு பேசின சத்தியத்தில் நிலைத்து நின்றார்.

ஒவ்வொரு முறையும் இந்த யூத தலைவர்கள் தாங்கள் கேட்கக் கூடிய கடினமான கேள்விகளினால் இயேசுவை அடியோடு அழித்துவிட முயற்சி செய்தார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் இயேசு வசனங்களிலிருந்து பதிலளித்து, தன்னை ஒருவராலும் தவறாக நிரூபிக்க முடியாது என்பதை தெளிவாகக் காட்டினார். அதற்குப்பின் ஒருவரும் அவரிடம் கேள்வி கேட்க துணியவில்லை.

பரிசேயர்கள் அனைவரும் கூடியிருப்பதை இயேசு கண்டு - தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட மேசியாவை குறித்து இவர்கள் புரிந்துகொள்ளும்படி, இயேசு ஒரு கேள்வியை வடிவமைத்தார். இயேசு மேசியாவா ? என்ற பிரதான ஆசாரியர்கள் வேத பாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் இருதயத்திலுள்ள சந்தேகத்திற்கு ஏற்றவாறு இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. பிரதான ஆசாரியர்கள் , வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் அனைவரும் இயேசுவை மேசியா அல்ல என்று நிரூபிப்பதற்காக அநேக கேள்வியைக் கேட்டனர். இப்பொழுது இயேசு இந்த ஒரு காரியத்தை இவர்களுக்கு முன் வைத்தார். "கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார்." (மத் 22:42) அதற்கு அவர்கள் - "அதற்கு தாவீதின் குமாரன் " என்று பதில் அளித்தார்கள். அதற்கு இயேசு ": அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே." (மத் 22:43,44 ,சங் 110:1) என்று இயேசு மறுமொழியாக கேட்டார். மாற்கு சுவிசேஷத்தில் இந்த முக்கியமான கேள்வி சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. "தாவீதுதானே அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி?என்றார். அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்."?( மாற்கு 12:37) "அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும்

அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை."(மத் 22:46) என்று குறிப்பிடப்படுகிறது. இவர்களால் இதற்கேற்ற பதிலை கூறமுடியவில்லை. மேசியா தாவீதின் குமாரனும் அதே நேரத்தில் ஆண்டவருமாக எப்படி இருக்கக்கூடும் ? இரண்டும் உண்மையாக இருக்கக்கூடுமோ ? என்பதை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

வசனங்களில் உள்ளவைகளை நிறைவேற்றும்படியாக மேசியா தாவீதின் வம்ச வழியில் பிறக்க வேண்டியதாயிருந்தது. (11சாமு 17:16,17, ஏசா 9:6,7, எரேமி 33 :14-17) நியாயப்பிரமாணத்தின்படி ஒரு கன்னிகை பரிசுத்த ஆவியினால் கருத்தரிக்கப்பட்டு மேசியாவாக பிறக்க வேண்டும். (ஏசா 7:14, கலாத்தியர் 4:4-5) அப்பொழுது பாவத்திலிருந்து மனுக்குலத்தை இரட்சிக்கக்கூடிய செயல்முறையின் துவக்கமாக ஆதாமுக்கு சரிநிகர் சமமான விலையை தன்னுடைய பரிபூரண மனுஷ ஜீவனை, அவரால் கொடுக்க முடியும். (மத் 1:21-22, 1தீமோ 2:5,6) அதற்குப்பின் மேசியா மரித்தோரிலிருந்து தெய்வீக நிலைக்கு உயிர்த்தெழுப்பப்பட்டு - மகிமையும், கனத்தையும் ,அழியாமையையும் பெற்றுக் கொள்வார். அவர் மகிமையடைந்தபின் தாவீதுக்கும் ஆண்டவராய் இருந்து, அவரை மரித்தோரிலிருந்து எழுப்புவார். தாவீதை உயிர்த்தெழுப்புவது மட்டுமல்ல, இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும் மேசியாவின் மூலமே தாவீதுக்கு கொடுக்கப்படும். மாம்சத்தில் மேசியாவுக்கு தந்தையாக இருப்பவர். வெகு சீக்கிரத்தில் மகிமையடைந்த மேசியாவுக்கு குமாரனாயிருப்பார். ஏனெனில் மகிமையடைந்த மேசியா, இந்த முழு உலகத்தையும் தன்னுடைய மாம்சத்திற்குரிய ஜீவனைக் கொடுத்து தாவீது உட்பட சகலத்தையும் கிரயத்துக்கு பெற்று விட்டார். ஆகவே

" உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்; (சங் 45:16) என்று வாசிக்கிறோம். ( Reprint Pg.4687)



# அவர் முடிவுபரியந்தம் அவர்களை நேசித்தார்

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்.அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்.தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி," (லுக்கா 22:14-16)

Russ Marten

நினைவுக் கூறுதலின் காலங்களில் இந்த உலகத்தில் நம்முடைய கர்த்தரின் கடைசி இரவில் நடந்த சம்பவங்களுக்கு நம்முடைய கவனத்தை செலுத்துவது, நம்முடைய வழக்கம். அந்நேரத்தில் அவர் படக்கூடிய பாடுகளுக்கும், அனுபவிக்க கூடிய அவமானத்திற்கும் தன்னை ஆயத்தப்படுத்தின காரியங்களைக் குறித்து இக்காலங்களில் நாம் அதிகமாய் தியானிக்கிறோம். ஆனால், இயேசுவோ, அவருடைய மரணத்திற்குபின், அவருடைய அன்பான அப்போஸ்தலர்கள் செய்யவேண்டிய ஊழியத்தைக் குறித்து அவர்களை திடப்படுத்திகொண்டிருந்தார். அவர்கள் தம்முடைய ஆண்டவரோடும், நம்முடைய ஆண்டவரோடும், பேசின ஒவ்வொரு காரியங்களும் சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள சபை அங்கத்தினர்களுக்கு பாடங்களாக முன் வைக்கப்பட்டுள்ளது.

துவக்கத்தில் இயேசு தன்னுடைய மரணத்தைக் குறித்து பேசும்போது சீஷர்கள் அதை ஒரு பெரிய காரியமாக எடுத்து கொள்ளவில்லை. அவர் கடைசி இரவில் கொடுத்த கட்டளைகள் மிக எளிமையாய் இருந்தது. பஸ்கா அனுசரிப்பதற்கு ஓர் இடத்தை ஆயத்தம் பண்ணக் கூறினார். இப்படியாக அனைவரும் அந்த மேல் வீட்டில் இயல்பாக சம்பாஷித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். இன்னும் 24 - மணி நேரத்திற்குள் நடக்கவேண்டிய வெவ்வேறு சம்பவங்களை இந்த அப்போஸ்தலர்கள் முழுமையாக எவ்வாறு புரிந்துகொள்ள முடிந்திருக்கும். அதை அறியாத இவர்கள் இராஜ்யத்தில் இவர்கள் பெறக்கூடிய இடங்களைக் குறித்து வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர்.

பொதுவாக நாம் காலங்களைக் குறிப்பாக காண வேண்டும் என்றால், லூக்கா சுவிசேஷத்தைப் பார்க்கலாம். அந்த மேல் வீட்டு அறையில் லூக்கா இல்லாதிருந்தும் அவர் இந்தச் செய்திகளை மற்றவரிடமிருந்து கேட்டறிந்திருக்க வேண்டும். ஆகவே லூக்கா 22:17-24ம் வசனங்களில் இருக்கும் சம்பவங்கள், வரிசைக்கு புறம்பாக இருந்திருக்க கூடும். (அப்பத்தையும் ரசத்தையும் கொடுப்பது, யூதாஸ் காட்டிக்கொடுத்தல்) என்ற சில குறிப்பிடப்பட்ட இந்தச் சம்பவங்கள் மாலையில் நடந்திருக்க கூடும். மேல் வீட்டு அறைக்குள் நுழைந்த பின் இயேசு அந்தப் பன்னிருவரையும் மேஜைக்கு அழைத்து, இந்த நாளில் இவர்களோடு ஒருமித்து பந்தி இருப்பதற்கு எவ்வளவு வாஞ்சையாயிருந்தார் என்பதை அவர் அறிவித்தார். உடனடியாக ஏற்படக்கூடிய அவருடைய மரணத்தை குறித்தும், இனி ஒருபோதும் அவர் இந்த மாம்சத்தில் புசிப்பதில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டார். (லூக் 12:18) இந்தக்குறிப்புகள் அநேகருடைய சிந்தைகளை முழுமையாக மாற்றாவிட்டாலும், ஒரு சிலர் பெருமையினாலும், பொறாமையினாலும் விவாதம் செய்யத் துவங்கினார்கள். இயேசு எருசலேமுக்குள் நுழைந்த போது, அவருடைய மரணத்தைக் குறித்து அறிவித்த காரியங்கள் இவர்களின் சிந்தையோடு ஒத்து போக வில்லை. அப்போஸ்தலர்கள் மத்தியில் காணப்பட்ட வாக்குவாதங்கள் இந்த இராஜ்யத்தை குறித்த காரியமாகவே இருந்தது. (மத் 20:18-24)

இயேசு சில மணி நேரங்களில் மரணத்திற்கு கையளிக்கபடுவதற்குமுன் -" இராஜ்யத்தில் யார் பெரியவராக இருப்பார்" என்று அப்போஸ்தலர் களுக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தை நினைத்தால் நாம் அனைவருக்கும் சற்று மன வேதனையா யிருக்கும். ஆயினும், அன்று அப்போஸ்தலர்கள் பெற்ற மிக பெரிய பாடங்கள் இந்த யுகம் முழுவதிலும் இருக்கக்கூடிய விசுவாச வீட்டாருக்கும் பாடமாக அமைந்துள்ளது.

நம்முடைய ஆண்டவர் சீஷர்களின் வாக்கு வாதத்தில் வெளிப்படுத்தப்பட்ட பலவீனத்தையும், சுயநலத்தையும் பயன்படுத்தி தானும் , தன்னுடைய தந்தையும் இவர்களுக்கு தரக்கூடிய மிக சிறப்பான காரியங்களை வெளிப்படுத்தினார். சிறந்த பணியைச் செய்பவர்கள், மனத்தாழ்மையில் அதிகதிகமாய் வளர்ச்சியடைந்து, நம்மை எல்லாரைக்காட்டிலும் குறைவுள்ளவர்களாய் நம்மை நாம் எண்ணிக்கொண்டு இருப்பவர்களின் பரிசு என்னவாய் இருக்கும் என்று இயேசு கூறினார். அடுத்து ஒருவரிடம் ஊழியம் பெற்றுக் கொள்வதை காட்டிலும் மனப்பூர்வமாய் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வது எவ்வளவு மேன்மையான காரியம் என்று இயேசு காட்டினார்.

### சீஷர்களின் கால்களை கழுவுதல்(யோவான் 13:5-17)

"இராஜ்யத்தில் பெரியவர்" என்று யோவான் குறிப்பிடாவிட்டாலும் இந்த வாக்குவாதத்திற்கு பின் இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவினது நியாய மாக தோன்றியது. (யோவா 13:1-20) சகோதரர்களுக்கு பணி செய்வதை அதாவது மிகவும் கீழ்தரமான பணியை மனப்பூர்வமாய் செய்வதற்கு அவர்களுக்குள்ளும், நமக்குள்ளும் விருப்பத்தை ஏற்படுத்துவதற்காக இயேசு இதை செய்தார்.

பாரம்பரியமாக வீட்டிற்கு வரும் விருந்தாளிகளின் கால்களை கழுவுவது, அந்த வீட்டு வேலைக்காரர்களின் கடமையாயிருந்தது. அக்காலங்களில் பாதரட்சைகளை அணியாமல் வெறும் கால்களோடு நடந்து வரக்கூடியவர்களின் அழுக்குகளையும், ஒட்டிக் கொண்டிருக்கும் மற்ற அசுத்தங்களையும் சுத்திகரிப்பதற்கு கால்கள் கழுவப்பட்டது. இந்தக் காரியத்தை அனைவரும் செய்யமாட்டார்கள். ஆனால் இங்கு இயேசு, இந்தப் பூமியின் மேல் மிக சிறந்தவரும், ஆவிக்குரிய விதத்தில் இந்தப் பூமியை இரட்சிக்க வந்தவர், சீஷர்களின் கால்களை கழுவினார். பாதங்கள் நேரடியாக இந்த உலகத்தில் தொடர்பு கொள்வது போல, நம்முடைய அனுதின அனுபவங்களிலும் நாம் இந்த உலகத்தோடு ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்று காட்டப்படுகிறது. நாம் இந்தப் பூமிக்குரிய அசுத்தங்களை பற்றி கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் அடுத்து நம்முடைய சகோதர சகோதரிகள் அறியாமையினால் இந்தப் பூமிக்குரிய அசுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கு நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.

"பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றான்." (யோவ 13:8) என்று பேதுரு கூறினதுபோல நாமும் துவக்கத்தில் கூறியிருக்கலாம். இயேசுவின் ஊழியத்தில் தன்னுடைய கிரியைகளினால் அதாவது மனத்தாழ்மையான கிரியைகளினால், மனுஷ பெருமையை அற்பம் என்று நிரூபித்தார். இந்தச் சூழ்நிலையில் பன்னிரண்டு சீஷர்களும், குற்றம் உணர்ந்து, மிக வேதனையில் இருந்திருப்பார்கள். ஆகவே இதை தவிர்த்து கொள்ள பேதுரு தன்னுடைய கால்களை கழுவ வேண்டாம் என்று இயேசுவை தடுத்தார். இதனிமித்தம் மீண்டுமாக இயேசுவிடம் தம்முடைய குறைகளை மறைத்துக் கொள்ள நினைத்தார். ஆனால் இயேசு அதன் விளக்கத்தை கூறின போது அவருடைய முழு சரீரத்தையும் கழுவ ஒப்புக் கொடுத்தார்.

### நினைவு கூருதலில் நியமனங்கள்

**(மத் 26:26 -29, மாற்கு 14:22-25, லூக் 22:14-22)**

அடுத்து இயேசு யூதாசுடன் நேரடியாக பேச வேண்டி இருந்தது. தன்னை ஒருவர் காட்டிக் கொடுப்பார் என்பதை இயேசு முன்னதாகவே அறிந்திருந்தார் என்று சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார். உடனடியாக அவர்களுக்குள் காட்டி கொடுப்பவர் பற்றிய சம்பாஷணை துவங்கியது. இறுதிவரை எந்த மன வருத்தத்தையும் அடையாத யூதாஸ், சாத்தான் தன் வழியாக செயல்படுவதற்கு மனப்பூர்வமாய் தன்னை ஒப்புக்கொடுத்தான். இயேசு அப்பத்தை தொய்த்து யூதாசுக்கு கொடுத்து அடையாளமாக காட்டினார். யூதாஸ் உடனடியாக வெளியேறினான்.

இப்பொழுது தூய்மையும், விசுவாசமும் உள்ள சீஷர்கள் மத்தியில் இயேசு தம்முடைய புதிய கற்பனையாகிய அன்பின் பிரமாணத்தைக் கொடுப்பதற்கு சூழ்நிலை சாதகமாயிருந்தது. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின் அயலகத்தாரின் உறவைப் பற்றி மட்டும் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், இந்தப் புதிய சகோதர ஐக்கியம் நியாயப்பிரமாண சட்டத்தைக் காட்டிலும் மிக உன்னதமாய் இருந்தது. இதை ஒருவருக்கொருவர் எவ்வளவு நியாயமாய் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. பலியின் ஜீவியத்தில் இந்தப் பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது. கிறிஸ்து நம்மை நேசித்தது போல நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதில் வளர்ச்சி அடைந்தால் நிச்சயமாக நம்முடைய ஜீவனைக் கொடுக்க இந்த அன்பு நம்மை வழிநடத்தும். அந்தப் பன்னிரண்டு சீஷரில் பேதுரு தம்மிடமிருந்த வாளை உருவி, இயேசுவை பாதுகாத்து தன்னுடைய ஜீவனை கொடுக்க ஆயத்தமானார். ஆயினும் சில மணி நேரங்களுக்குபின் இயேசுவை அறிந்திருந்தும், பேதுரு அவரை மறுதலித்தார். ஆகவே பேதுரு இயேசுவின் பேரில் தன்னுடைய சகோதரர்கள் மேல் வைத்திருந்த அன்பில் இன்னும் அதிகமாக வளர்ச்சியடைய வேண்டும் என்பது தெளிவாகிறது. தன்னை காத்துக்கொள்ள வேண்டும் என்ற மாம்சீகமான விருப்பத்தில், இருப்பவர்கள் தேவனிடத்தில் பக்தியாகவும், விசுவாசமாகவும் இருக்க முடியாது.

நம்முடைய ஆண்டவர் அப்பத்தைப் பிட்டு அப்போஸ்தலர்களுக்கு கொடுத்து நினைவு கூறுதலின் நியமங்களை கூறினார். அந்த அப்பம் நம்முடைய ஆண்டவரின் சரீரத்தை அடையாளப் படுத்தியது. இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்து,

அவருடைய பாடுகளில் மனப்பூர்வமாய் பங்கெடுத்து, எல்லாவற்றிலும் ஐக்கியமாக இருப்பதை இந்த அப்பம் புசிப்பதின் மூலம் அடையாளப்படுத்தபடுகிறது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக கிறதல்லவா?"(1கொரி 10:16) என்று பவுல் கூறுகிறார். அந்தப் பாத்திரம் நம்முடைய கிறிஸ்து சிந்தின இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. அதிலும் நமக்கு ஒரு பங்குண்டு. அநேக கோதுமை மணிகள் அரைக்கப்பட்டு ஓர் அப்பத்தை உருவாக்குவது போல அநேக திராட்சை பழங்கள் பிழியப்பட்டு திராட்சை ரசமாக சேர்க்கப்படுகிறது. கிறிஸ்துவினுடைய பலியிலும் பாடுகளிலும் மற்றும் அவமானத்திலும் பங்கெடுத்துக் கொள்வதை இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதை அடையாளப் படுத்தும். (கொலோ 1:24)

**இயேசு தம்முடைய சீஷர்களுக்காக ஓர் இடத்தை ஆயத்தம்பண்ணும்படி புறப்பட்டார்**

**யோவான் 14:1-6**

அந்த மாலைப் பொழுதில் நடந்த சம்பவங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள் - இயேசு சீஷர்களின் பாதங்களைக் கழுவினார். யூதாசுக்கு அப்பத்தைத்தொய்த்து கொடுத்தார். பேதுரு தம்மை மூன்று தரம் மறுதலிப்பார் என்று சொல்லப்பட்ட காரியம். இந்தக் கட்டத்தில் அவர்கள் உதவியற்று இருந்தபோதிலும், அவர் அடுத்து என்ன செய்யப் போகிறார் என்பதை கவனித்திருந்தார்கள்.

யோவானால் பதிவு செய்யப்பட்டுள்ள நம்முடைய ஆண்டவரின் வாக்கியங்கள் இந்தச் சூழ்நிலையை, தெளிவாக நமக்கு புரிய வைக்கிறது. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக." (யோவ 14:1) என்று இயேசு பேசத் துவங்கினார். அதற்குப் பின் பதிவு செய்யப்படாத கேள்விகளுக்கு பதிலளித்தார். ஆயினும் அந்த கேள்விகள் முன்னதாகவே கேட்கப்பட்டிருந்தது. தோமாவும் , பிலிப்பும், மேலும் சில கேள்விகள் கேட்டனர். "நீர் போகிற இடத்தை அறியோமே, நீர் பிதாவினிடத்தில் போகுவீரானால், அவரைப் பற்றி இன்னும் கற்றுக்கொடுங்கள்" என்று கேட்டார்கள்.

தங்களுடைய போதகர் உண்மையில் மரிக்கப் போகிறார் என்று இறுதியில் அவர்கள் நம்ப துவங்கினார்கள். "அவர் மரித்தால்" என்று அவர்கள் கூறாமல் "அவர் மரிக்கும் போது" என்று அவர்கள் பேசத்துவங்கினார்கள். மேலும் இந்த மாலை பொழுதில் நடந்த சம்பவங்கள் மற்றும் இயேசுவின் வார்த்தைகளின் மூலம், அவருடைய மரணம் வெகு சமீபத்தில் இருப்பதை சீஷர்கள் புரிந்துக்கொண்டனர். ஆனால் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டதையும் இயல்பான மனுஷ சிந்தையில் வியாகுலப்பட்டதையும் இயேசு அறிந்தார். ஆகவே அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற ஆறுதலான ஒரு பிரசங்கத்தை யோவான் 16 ம் அதிகாரத்தில் கூறினார்.

இயேசு மனித நிலையை கடந்து உயிர்த்தெழுந்து, தம்முடைய சீஷர்களுக்காய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போவதாக அவருடைய மரணத்திற்கு முன் பேசினார்.

அவருடைய மரணத்தை குறித்து பேசும் போது சீஷர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண போகிறேன் என்று முன்னறிவித்தார். இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்தும் அவருடைய அன்பையும், ஆதரவையும் குறித்தும் அவர் மனித நிலையிலிருந்த போதே முன்னறிவித்தார். சீஷர்களின் மரணத்திற்குப் பின்னும் இயேசுவோடு கூட அவர்கள் கிரியை செய்ய வேண்டும் என்பதே இங்கு தெளிவாக கூறப்படுகிறது. வரக் கூடிய நாட்களில் அவர்களுக்குள் இருக்க வேண்டிய சரியான நோக்கத்தை இது கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது.

**தேற்றரவாளனை அனுப்புதல்**

**(யோவ 14 :15-17, 25-26, 16 :5-15)**

ஆழமான விசுவாசமும், உறுதியான நம்பிக்கையும் இருந்தால் சீஷர்கள் அனைவரும் பிதாவோடு நோக்கத்திலும் , விருப்பத்திலும் ஒருமனப்பட்டவர்களாய் இருக்கக்கூடும் என்பதை யோவான் 16ம் அதிகாரத்தில் இயேசு கூறுகிறார். இயேசுவின் சுவிசேஷ வேலைகளான வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கி அற்புதங்களை நடப்பித்து தொடர்ந்து இப்பணியைச் செய்வதாக உறுதியளித்தார்கள். பிதாவின் நாமத்தினால் அவர்கள் கேட்டுக் கொள்ளக்கூடிய காரியங்கள் அனைத்தும் அவர்களுக்கு கொடுக்கப்படும் என்று இயேசு உறுதியளித்தார்.

ஆயினும் மனுஷ திராணிக்கு அப்பாற்பட்ட இந்தக் காரியங்களை எப்படிச் செய்ய முடியும் என்று அப்போஸ்தலர்கள் ஆச்சரியப்பட்டார்கள். நான் போய் உங்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புகிறேன் என்று இயேசு அவர்களுக்கு வாக்களித்தார். இந்தத் தேற்றரவாளன் எப்படிப்பட்ட உதவிகளை செய்வார் என்பதை அறியாதிருந்தார்கள். அவர்களுக்குள் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் நித்தியமாக அவர்களுக்குள் தங்குவார். உண்மையான தேவனுடைய புத்திரர்கள் இதை பெற்றுக் கொள்வதற்கு மிக எளிதாய் இருந்தது. இந்தப்

பரிசுத்த ஆவி தொடர்ந்து இயேசுவின் கிரியைகளைச் செய்வதற்கு சீஷர்களை ஊக்குவித்து தேற்றியது. மேலும் அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தியது. ஆதி சபைக்கு மட்டுமல்ல, இந்த யுகத்திலுள்ள முழு சபைக்கும் இந்த வாக்குறுதி கொடுக்கப்படுகிறது.

இயேசுவின் உடனடியான மரணத்திற்குபின் அவர் உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையின் வெளிச்சம் அவர்களுக்கு மிக அவசியம் என்று இயேசு அறிந்திருந்தார். ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டு அதற்குப்பின் நடக்கக்கூடிய ஆவிக்குரிய கிரியைகளை குறித்து புரிந்து கொள்வதற்கான ஏற்ற சமயம், அப்போது சீஷர்களுக்கு கொடுக்கப்பட வில்லை. ஆகவே அவர்கள் புரிந்து கொள்வதற்காக ஆண்டவராம் இயேசு பரிசுத்த ஆவியை ஒரு போதகரைப் போல விவரித்தார். அநேக நேரங்களில் பரிசுத்த ஆவியின் வெளிப்பாடு சாத்தானையும் அவனுடைய தீய செயல்களையும் விரட்டியது. பிதாவினிடத்திலிருந்து வரக்கூடிய வல்லமையினால் ஜெநிபிக்கப்படுவது என்ற காரியம் அவர்களுக்கு விரோதமாக தோன்றினாலும், இயேசுவின் வார்த்தைகளை மிக கவனமாக கேட்டார்கள். தேவனுடைய ஆவி செயல்படும் விதங்களைக் குறித்து முதலில் இயேசு அறிவிக்க வில்லை. ஆனால் பரிசுத்த ஆவி அனுப்பப்படும் நோக்கத்தை விவரமாகவும் தெளிவாகவும் விவரித்தார். அப்பொழுது அவர்கள் ஒரு கிறிஸ்தவ வளர்ச்சியில் பரிசுத்த ஆவியின் வளர்ச்சியை உணர்ந்து கொள்ள முடிந்திருக்கும்.

பரிசுத்த ஆவி அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும் (வசனம் 13) அது தனக்கானவைகளை குறித்து பேசுவதில்லை. ஆனால் வரக்கூடிய காரியங்களைக் குறித்து (தீர்க்கதரிசனங்கள்) தெளிவாக எடுத்துரைக்க கூடியதாய் இருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் இயேசுவைப் பற்றி எழுதிய காரியங்கள் பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டு அவருக்கு மகிமையை சேர்க்கும். (வசனம் 14) இந்தப் பரிசுத்த ஆவி அவர்கள் சிந்தையில் கொழுந்து விட்டு எரிவதினால், இயேசுவைக் குறித்த தீர்க்கதரிசனங்களையும் சகலவிதமான நிழலான பாடங்களையும், எளிதில் விவரிக்க செய்யும்.

**முடிவுரை**

இந்தப் பூமியில் தன்னுடைய கடைசி இரவைக் குறித்து கவலைப்படுவதற்கு பதிலாக நம்முடைய ஆண்டவராம் இயேசு அவருடைய சீஷர்களுக்காக கவலைப்பட்டார். கடந்த 3 1/2 வருட காலங்களாக போஷித்து பராமரித்த தன்னுடைய சீஷர்கள் இப்போது தன்னுடைய பிரிவினால் அவர்கள் சந்திக்கக்கூடிய உபத்திரவங்களையும் பாடுகளையும் குறித்து நினைத்து அவர் கவலையடைந்தார். ஆயினும் வருங்கால சுவிசேஷ யுக சபைக்கு இவர்களே அஸ்திபாரமானவர்கள். இந்த வெவ்வேறு பின்னணியைக் கொண்ட மற்றும் வெவ்வேறு தாலந்துகளை பெற்றிருந்த பதினோரு பேர்களை தங்களுடைய போதகரின் மறைவுக்குப்பின் அவருடைய வார்த்தைகளை பிரஸ்தாபித்து, சபைகளை ஸ்தாபித்து போஷித்து வரக்கூடிய காலங்களில் ஓர் உறுதியான அஸ்திபாரமாக திகழ நீங்கள் இவர்களை எவ்வாறு ஆயத்தப்படுத்த கூடும்?

அநேகர் மனித இயல்புக்கு ஏற்ற காரியங்களைச் செய்வார்கள். ஆனால் அந்த மாலையில் இயேசு பேசின உருக்கமான வார்த்தைகளும், அவர் நடப்பித்த மனதை தொடும் கிரியைகளும், அந்தச் சீஷர்களை அதிகதிகமாய் ஊக்குவித்து, தங்களுடைய மனித இயல்புகளை விட்டு விட்டு இயேசுவுக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்த சீஷர்களாக மாறுவதற்கு உதவி செய்தது. இயேசு தன்னுடைய மரணத்தை நினைவு கூரவும், அந்தப் பஸ்கா பண்டிகையில் பங்கெடுக்கவும் அவர் மிகவும் ஆவலோடும் ஆசையோடும் காத்திருந்தார். இப்பொழுது நம்முடைய சிந்தையில் இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் நினைவுகளைக் காட்டிலும், வேறு எந்தக் காரியங்கள் விலையுயர்ந்ததாய் இருக்க கூடும்? ஏனெனில் அன்று இயேசு தம்முடைய சீஷர்கள் மேல் காட்டிய அன்பையும் விருப்பத்தையும் இந்நாளிலும் அவர் சீஷர்கள் மேல் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆகவே இந்த நினைவு கூருதலின் காலங்களில் மட்டுமல்ல மற்ற எல்லா நேரங்களிலும், அந்த மாலை நேரத்தில் கற்பிக்கப்பட்ட பாடங்களில் கொடுக்கப்படக்கூடிய ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பயன்படுத்தி நம்மால் முடிந்த வரைக்கும் அவருக்கு ஊழியம் செய்ய நாம் அனைவரும் உறுதியோடு செயல்படுவோமாக.

யோவான் 15ம் அதிகாரத்தின் வசன வாரியான ஆய்வு

# நாம் கொண்டுள்ள உறவுகள்



"நான் மெய்யான திராட்சச்செடி, ….. நீங்கள் கொடிகள்." (யோவான் 15 :1,5)

**O.B. Elbert**

**மெய்யான திராட்சை செடிக்கும், அதன் கிளைகளுக்கும் உண்டான தொடர்புகள்**

**யோவான்** 15:1,2 -*"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்"*

இயேசுவே உண்மையான திராட்சை செடி. "நானே மெய்யான திராட்சை செடி" என்று சில நவீன கிரேக்க மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன. மற்ற திராட்சை செடிகள் நம்மை திசை திருப்பினாலும் இயேசு என்ற மெய்யான திராட்சை செடி மட்டுமே, நாம் தேடுகிற நித்திய ஜீவனை கொடுக்க முடியும். நம்முடைய குடும்பம், தொழில், கனம், இன்னும் பல பூமிக்குரிய காரியங்கள் நம்முடைய மாம்சத்திற்கான தேவைகளை பூர்த்தி செய்யலாம். ஆயினும், உண்மையில், இக்காலத்தில் ஐசுவரியம் உள்ள ஒரு வாழ்க்கையையும், வருங்காலத்தில் நித்திய ஜீவனையும் கொடுக்கக்கூடிய மெய்யான திராட்சை செடி இயேசு மட்டுமே.

"பூமிக்குரிய ஒவ்வொரு மகிழ்ச்சியும் மங்கிப்போகும். சகலத்தையும் பூர்த்தி செய்த இயேசு என்னுடையவரானார்."

நம்முடைய பிதாவாகிய தேவன் திராட்சை தோட்டக்காரர். மெய்யான திராட்சைச் செடியில் இணைக்கப்பட்டிருக்கும் கிளைகளாகிய நாம் ஆவிக்குரிய கனிகளை கொடுப்போம் என்று பொறுமையோடு நம்முடைய பிதா தாமே கவனித்துக் கொண்டிருப்பதை நாம் உணரும்போது பேரானந்தம் அடைகிறோம். நமக்குள் ஒரு முதலீடு செய்திருக்கிறார். அவரால் நேசிக்கப்பட்ட தம்முடைய ஒரே பேரான குமாரனே அந்த முதலீடு. முதலீட்டில் இருந்து லாபத்தை எதிர்பார்ப்பதற்கு எஜமானனுக்கு சகல உரிமையும் உண்டு. இந்தச் சிந்தனை மிக அழகாக, நம்மை ஊக்குவிக்கக் கூடிய சத்தியத்திற்கும் வழி நடத்துகிறது. கனி கொடுக்கக்கூடிய ஒவ்வொரு கிளைகளும் அதிக கனிகளை கொடுக்கும்படியாக சுத்தம் செய்யப்படுகிறது. (களை நசுக்க படுகிறது) இப்படியாக நாம் விசுவாசமுள்ளவர்களாக தேவனிடத்தில் கீழ்படிந்திருந்தாலும், நாம் களை நசுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுவோம். இந்தச் சுத்திகரிப்புகள் நமக்கு தண்டனைகளாக அல்ல, ஆசீர்வாதங்களாய் இருக்கிறது.

நாம் கடுமையான அனுபவங்களின் வழியாக மறுபடியும் மறுபடியும் பிரவேசித்தாலும் நாம் தேவனுடைய வார்த்தைகளை புரிந்து கொண்ட அளவுக்கு அவருடைய சித்தத்தின்படி செய்கிறோமா ? என்பதை மிக எச்சரிப்போடு கவனித்துக் கொள்ள வேண்டும். தேவன் நமக்கு கற்பிக்கக்கூடிய பாடங்களை நாம் சரியாக கற்றுக்கொள்ளாததினால் இப்படிப்பட்ட அனுபவங்கள் மீண்டும் மீண்டும் வருகிறதா ? நிச்சயமாக இல்லை.

சில நேரங்களில் நாம் சில காரியங்களை நாம் இன்னும் தெளிவாக புரிந்துகொள்ள, இப்படிப்பட்ட காரியங்கள் அனுமதிக்கப்படுகின்றது. தேவன் கற்பிக்கக்கூடிய காரியங்களை நாம் நன்கு புரிந்து கொள்வதினால் நாம் அதிகதிகமாக கனி கொடுக்கக்கூடியவர்களாய் இருப்போம். ஆகவே நம்முடைய பரலோக பிதா இப்படிப்பட்ட அனுபவங்களை முழுமையாக நம்மேல் அனுமதிக்கிறார். தேவனுடைய மகிமைக்காக அபரிவிதமான கனிகள் கொடுக்கக்கூடியவர்களாய் இருப்போம். நம்முடைய வாழ்க்கையில் வரக்கூடிய சோதனைகளை புரிந்து கொண்டால் நாம் அபரிவிதமாய் கனி கொடுப்பதற்கு ஊக்குவிக்கப்படுவோம்.

யோவான் 15:3 - *"நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்."*

தேவனுடைய வார்த்தையாகிய ஜலத்தினால் இந்தப்பூமியின் அசுத்தங்களிலிருந்து நாம் சுத்திகரிக்கப்பட்டுள்ளோம். (எபே 5:26) இயல்பாக திராட்சைச் செடி தரையில் படரக்கூடிய ஒரு கொடியாகும். செடி தரையில் படர்ந்தால் கனிகள் கெட்டுப்போகும். ஆகையால் அது பூமிக்குமேல் படருவதற்கு ஊன்றுகோல் கொடுக்கவேண்டும். அது போல் பரலோகத்தை நோக்கி நாம் வளர்வதற்கு ஏற்ற ஆதாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். இயேசு தேவனுடைய குமாரனாயிருந்த போதும் அவர்பட்ட பாடுகளினால், அநேக பாடங்களை கற்றுக்கொண்டார்

என்று வாசிக்கிறோம். (எபி 5:8) "ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" (லூக் 12:50 ) என்று கூறினார். இயேசு மாம்சத்தை மேற்கொண்டு, பரலோகத்தை நோக்கி செல்வதற்கு தொடர்ந்து பயிற்சி பெற்றார். அவர் பெற்ற வெற்றியின் காரணமாக நாமும் இவ்வாறு பயிற்சி பெற அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**யோவான் 15:4-6** "*என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக் கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.*"

திராட்சை கொடிகள் செடியோடு இணைக்கப்படாவிட்டால் அவர்கள் தொடர்ந்து உயிர்வாழ முடியாது. நமக்கு ஒரு முக்கிய பாடம் இதில் உள்ளது. நாம் அவருக்குள் எப்படி நிலைத்திருக்க வேண்டும் ? நாம் ஒவ்வொரு நிமிடமும் அவருடைய ஞானத்தையும் ஊக்கமளிக்கக் கூடிய உற்சாகமான சத்தியத்தையும் தொடர்ந்து அவரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முயற்சித்து, கிருபையாக பெற்ற நீதிமானாக்கப்பட்ட நிலையை தக்கவைத்துக் கொண்டு, எல்லா காரியங்களிலும் அவருடைய பலத்தையே சார்ந்திருக்க வேண்டும். நம்முடைய சொந்த பலத்தினால் எதையாவது செய்ய முயற்சித்தாலும் நாம் ஒன்றும் செய்ய முடியாது. "என்னுடைய ஆண்டவரின் ஜீவனை விட்டு என்னுடைய ஜீவன் பிரிக்கப்படுவதில்லை" என்பதே நம்முடைய வாழ்க்கையின் கோட்பாடாக இருக்கவேண்டும்.

நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அறிந்து கொள்வதற்கும், அவருக்குள் நிலைகொண்டிருப பதற்கும் பரிசாக, அவர் அதிகதிகமாக தம்முடைய ஆவியையும், அன்பையும் அவருடைய சுபாவத்தையும் தரக் கூடியவராய் இருக்கிறார். இதினிமித்தம் அவருடைய பிரசன்னம் நம்மோடிருப்பதை ஆழமாக உணரலாம். நமக்குள் நம்முடைய தலையாக அவர் இருக்கிறார். இந்தப் பூமியில் அவர் மாம்சத்தில் வாழ்ந்தபோது, அவர் வாழ்ந்த வாழ்க்கையும், அவர் செய்த பணியும், நமக்கு முன் வைக்கப்பட்ட மாதிரியாய் இருக்கிறது. நன்றியறிதல் உள்ள உணர்வுகளினால், அவர் நமக்குள் வாசம் செய்கிறார். நமக்காக அவர் செலுத்தின அன்பின் பலியை நாம் ஆழமாக புரிந்து கொள்ளுவதன் நிமித்தம், இந்த உணர்வு நமக்குள் பொங்கி எழுகிறது. இப்படிப்பட்ட ஒவ்வொரு சிந்தையும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்து நமக்குள் நிலைத்திருக்க நம்மை ஊக்குவிக்க வேண்டும். கிறிஸ்துவின் ஐக்கியத்தை விட்டு அலைந்து, திரிவோர் அக்கினியிலிருந்து தப்பினர்வர்கள் போல் இருப்பார்கள் (1கொரி 3:15) கிறிஸ்துவை புறக்கணித்தோர் இறுதியில் ஜீவனுள்ள தேவனுடைய கையில் விழுவார்கள். இது எவ்வளவு பயங்கரமானது (எபி 10:31) "இயேசுவுக்குள் சத்தியம் உள்ளது." (எபேசி 4:21) ஜீவனுள்ள வார்த்தைகள் அவரிடம் உண்டு. அவரைவிட்டு நாம் எங்கு செல்வது? (யோவான் 6:68) ஆகவே நாம் அவரை இறுகப்பற்றிக் கொண்டு ஜீவனுள்ள தேவனுக்குள் நிலைத் திருப்போம். அவருடைய அன்பில் வளர்ச்சியடைந்து, பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக ஆவிக்குரிய கனிகளை, அதிகதிகமாய் கொடுப்போம்.

**யோவான் 15:7,8 -** "*நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.*"

நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அதை நிச்சயமாக பெற்றுக் கொள்வீர்கள் என்ற வாக்குத்தத்தத்தை நம்முடைய பிதா கொடுத்திருக்கிறார். நாம் எதை கேட்க வேண்டும் ? நம்முடைய பரம அழைப்பையும், பரலோக நம்பிக்கையையும், திசை திருப்பக் கூடிய யாதொரு பூமிக்குரிய காரியங்களை நாம் கேட்பதற்கு இப்படிப்பட்ட வாக்குறுதி கொடுக்கப்படவில்லை. நிச்சயமாக நமக்கும் நம்மை சார்ந்தவர்களுக்கும் அதிகதிகமான ஆவிக்குரிய நன்மைகளை கேட்க வேண்டும், என்பதை மனதில் கொள்ள வேண்டும். (1தீமோ 5:3,11தெச 3:10) நம்முடைய பரலோக இலக்குக்கும் பூமியில் நாம்பெற்றுள்ள பொறுப்புகளையும் சீராக நிறைவேற்றுவதற்கும் அதிகதிகமான ஆவிக்குரிய ஞானம் தேவைப்படுகிறது. பிதாவாகிய தேவனை நெருக்கமாக அறிந்து கொள்வதைக் காட்டிலும் நமக்கு என்ன தேவைப்படும் ? நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அதிகதிமாய் நிரப்பப்படுவதைக் காட்டிலும் நமக்கு என்ன தேவைப்படும் ? அவரை சேவிப்பதைக் காட்டிலும் நமக்கு என்ன தேவைப்படும்? அவருடைய நித்திய மகிமைக்கென்று நாம் ஆவியின் கனிகளை அதிகதிகமாய் கொடுக்கப் படுவதற்கு

நாம் தேவனிடத்தில்கேட்கக்கூடியவைகளைத் தவிர வேறு எதை கேட்பது ? நாம் அதிகதிகமான கனி தந்து இயேசுவின் சீஷர்கள் என்று நிரூபிக்கலாம். மற்றவர்கள் தங்களுடைய வாயின் வார்த்தைகளினாலும் தங்களுடைய விருப்பதைக் கூறுவதினாலும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று நிரூபிக்கலாம். நாமோ அனுதினம் கிறிஸ்துவுக்காய் ஜீவித்து அவருடைய சீஷர்களாக நிரூபிக்கப்படலாம். நாம் அவருக்குள்ளும், அவர் நமக்குள்ளும் நிலைத்திருக்கட்டும்.

**யோவான்15:9,10 -** "*பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.*"

இயேசுவின் வார்த்தைகளால் நாம் மிகவும் தாழ்மைப் படவேண்டும். அவருடைய அன்புக்கு நாம் எந்த விதத்திலும் பாத்திரமல்ல. ஆனால் விசுவாசத்தின் மூலம் நாம் அந்த அன்பை இறுக பற்றிக்கொள்ளவேண்டும். அந்த அன்பை நாம் பற்றிக்கொண்டு அவர் நம்மை நேசிக்கிறார் என்று நம்பி விசுவாசித்து அவருடைய அன்புக்குள் நாம் வாசம் செய்யவேண்டும்.

**யோவான் 15:11 -**"*என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.*"

இந்த வசனம் முன்னால் சொல்லப்பட்ட வசனத்தின் முக்கியத்துவத்தை காட்டுகிறது. நாம் அவைகளை நிதானமாய் புரிந்து கொள்ள வேண்டும். "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" (நெகே 8:10) என்று கண்டறிந்தார். இயேசு நமக்குள் வாசம் செய்வதினால் சகல பலத்திற்குரிய ஊற்றும் நமக்குள் இருக்கிறது. நித்தமும் நாம் அவரோடு ஐக்கியப்பட்டு, அவரோடு நடந்து, அவரோடு நித்தமும் மரிக்கும்போதும் நம்முடைய மகிழ்ச்சி பூரணப்படுகிறது.

### சீஷர்களுக்குள்ளிருக்கும் தொடர்புகள்

**யோவான் 15:12** "*நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.*"

இயேசுவின் வார்த்தைகள் வல்லமையுள்ளதாய் இருக்கிறது என்று நிரூபிக்கப்படுகிறது. நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கூறவேண்டும் என்று அவர் கட்டளை யிட்டிருக்கிறார். நாம் விரும்பினால் அன்பு செலுத்தலாம் என்று அவர் கூறவில்லை. உண்மையாக இது ஒரு கட்டளையாக கொடுத்திருக்கிறார். ஆகவே அதன் முக்கியத்துவத்தையும், நம்முடைய சகோதரரிடத்தில் நாம் அன்பு செலுத்த வேண்டுமென்ற அவசியத்தையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். இயேசுவின் வார்த்தைகளை அப்போஸ்தலனாகிய யோவான் மிகத்தெளிவாக வேறுவிதத்தில் பிரதிபலிக்கிறார். " தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" 1யோவா 4:20,21

ஒருவரில் ஒருவர் ஊக்கமாய் அன்புகூறவேண்டும் என்ற கட்டளையை நாம் பெற்றிருக்கிறோம். சில கருத்து வேறுபாடுகளினால் அந்தச் சகோதரர்களிடத்தில் நம்முடைய அன்பு தனித்திருக்கும் பட்சத்தில் யோவானுடைய கடிந்துகொள்ளுதலை எச்சரிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் சகோதரர்கள் மேல் செலுத்தக் கூடிய பூரண அன்பே கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேற்றமடைந்த பாடமாய் உள்ளது. "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்"(1யோவ 3:14) ".நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவாகளாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோவ 13:35) சகோதரர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்பு கூறுவதினால் நாம் இயேசுவின் சீஷர்கள் என்று அனைவரும் எப்படி அறிந்து கொள்வார்கள் ? சீஷர்கள் (disciple) என்ற வார்த்தைக்குள் இந்த பதில் அடங்கியுள்ளது. சீஷர்களாக இருப்பதற்கு சில ஒழுங்கு தேவைப்படுகிறது. (discipline). ஒருவரிலொருவர் அன்பு செலுத்துவதே, இந்த ஒழுக்கமாகும். இப்படிப்பட்ட கிறிஸ்துவின் ஒழுக்கத்தின் கீழ் சகல சகோதர்களிடத்திலும் அன்பு கூருகிறவர்கள் மட்டுமே மற்ற அனைவர்களிடத்திலும் அன்பு செலுத்த முடியும்.

அனைத்து சகோதரர்களிடத்திலும் இயல்பாக அன்பு செலுத்துவது கடினமான காரியம். இப்படிப்பட்ட அன்பை செலுத்துவதற்கு நம்முடைய புதிய சிந்தைக்குள் ஒரு புதிய சித்தத்தை அல்லது

விருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் பரம அன்புக்கு பங்குள்ளவர்கள் சர்வாயுதங்களை தரித்து விழிப்போடு இருந்தாலும் இவர்கள் அனைவருக்கும் விழுந்து போகக்கூடிய இறுதி சோதனை "சகோதர அன்பு". (Reprints, pg 2453:4)

**யோவான் 1:13-15** "*ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.*"

உண்மையில் நம்முடைய போதகரின் உபதேசம் நமக்கு வேதனை தருகின்றது. "சிநேகிதர்" என்று நம்மை அவர் அழைத்த வார்த்தைகள் நமக்குள் பொக்கிஷமாய் இருக்கிறது. நாம் எப்படிப்பட்ட அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்றும், நம்முடைய சிநேகிதர்களுக்காக மரிக்கக்கூடிய அன்பு நமக்குள் இருக்க வேண்டுமென்பதையும் இதன்மூலம் இயேசு வலியுறுத்துகின்றார். ஒரே நிமிடத்தில் நம்முடைய சரீரங்களை தகன பலியாக சுட்டெரிப்பதற்கு நாம் கொடுப்பதை விட நம்முடைய சிநேகிதர்களாகிய சகோதரர்களுக்கு பணி புரிந்து நாளுக்கு நாள் நாம் மரிக்க வேண்டும். இதற்கான எடுத்துக்காட்டை அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்."எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன்செய்கிறது" 11கொரி 4:11, 12, மற்றொரு வார்த்தையில் சொல்லப்போனால் பவுலைப் போலவும் மற்ற அப்போஸ்தலன் போலவும் நாம் மற்ற சகோதரர்கள் ஆவிக்குரிய வல்லமையை ப்பெறுவதற்கு அதிகதிகமாய் ஊக்கமளிக்க வேண்டும்.

**யோவான் 15:16,17** "*நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.* "

நாம் இயேசுவை தேர்ந்தெடுக்கவில்லை. அவரே நம்மையும் நம்முடைய சகோதரரையும் தேர்ந்தெடுத்திருக்கின்றார். கிறிஸ்துவின் ஒவ்வொருசரீர அங்கங்களும் பிதாவின் சித்தத்தின்படி சரீரத்தில் பொருத்தப் படுகிறார்கள். (1கொரி 12:18)

நாம் கனி கொடுப்பதற்காக இயேசு நம்மை தேர்ந்தெடுத்தார். நாம் அந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். அப்பொழுது நம்முடைய கனிகள் நிலைத்திருக்கும் என்ற காரியம் நமக்கு ஆறுதல் அளிக்கிறது. இவ்வாழ்க்கையில் நாம் கொடுக்கக்கூடிய ஆவியின் கனிகள் தேவனுடைய இராஜ்யத்தில் மனுக்குலம் புத்துணர்வு பெற்று ஜீவனில் நிலைத்திருப்பதற்கு மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.

ஆகவே பிதாவின் நாமத்திற்கு மகிமை சேர்க்கும்படி நாம் அதிகதிகமாய் கனி தருவதற்கு தேவையான பரிசுத்த ஆவியை நம்முடைய பிதாவினிடத்தில் கேட்போம். நாம் ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு செலுத்த வேண்டுமென்ற இயேசுவின் கற்பனைகளுக்கு கீழ்படிந்தால் மிகுதியான ஆவிக்குரிய கனிகளை கொடுக்கக்கூடிய அனுபவங்களை தேவன் நமக்கு கொடுப்பார். இதற்காகவே இயேசு இதை கட்டளையாக கொடுத்தார்.

**சீஷர்களுக்கும் இந்த உலகத்திற்கும் உள்ள உறவுகள்**

**யோவான் 15:18-20** "*உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்.* "

இந்த உலகம் நம்மை பகைக்கும். உலகம் என்ற வார்த்தைக்கு சமுதாய ஒழுக்கம் என்று கிரேக்க வார்த்தை (kosmos) பொருள் கூறுகிறது.

"இந்த உலகம் உங்களை பகைத்தால்" என்று இயேசு கூறும்போது இந்த உலகம் நம்மை பகைக்காமல் இருப்பதற்கு வாய்ப்புண்டு என்று பொருள்படுகிறது.

இந்த உலகம் நம்மை வெறுக்குமோ அல்லது , வெறுக்காமல் இருக்குமோ என்பது கேள்வியா யிராமல் நாம் நம்முடைய அன்றாட கிறிஸ்துவ வாழ்க்கையில் தேவனுக்கு விசுவாசமுள்ள வர்களாய் இருப்போமா என்பது தான் கேள்வி . உண்மையில் தேவ பக்தியாக நடக்க மனதாய் இருப்பவர்கள் துன்பப்படுவார்கள். (11தீமோ 3:12)

யோவா 15 :18 ம் வசனம் நம்மை இந்த உலகம் பகைக்கக்கூடிய செயல்பூர்வமான பாதிப்புகளை வெளிப்படுத்துகிறது. உபத்திரவத்தின் போது இயேசு பட்ட பாடுகளை நேரடியாக நாம் புரிந்து கொள்ள முடிகிறது. கிறிஸ்துவின் பாடுகளில் ஒரு நல்ல பங்கை நாம் பெறுகிறோம். இவைகள் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு காரியமாகவும் நம்முடைய இரட்சகரோடு நெருங்கிய உறவு கொள்ளவும் நம்மை வழிநடத்தும்.(பிலி :10)

உலகத்தின் கடும்பகையையும், வன்மத் தையும் தங்களுக்குள் துணிகரமாய் செயல்படுத்தி இந்தத் தீர்க்கதரிசனத்தை தங்களால் முடிந்த வரைக்கும் நிரூபிக்க முயற்சி செய்கிறார்கள். நாம் என்றுமே காரணத்தோடு பகைக்ககூடாது. நாம் தெய்வீக வாழ்க்கையை வாழ்ந்து நம்முடைய எதிரிகளையும், நண்பர்களையும் ஒரே விதமாக பூரண அன்போடு நேசிக்க வேண்டும். "நான் உங்களுக்கு சொல்லுகிறேன், உங்கள் பகைவர்களை நேசித்து, உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" (மத் 5:44)என்று இயேசு கூறினார். நாம் விரோதத்தினால் அல்ல அன்பினால் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும். "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர் களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (பிலி 2:15,16).

இறுதியாக "உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையு மாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.. உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். "(1யோவ 2:15-17) என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறிய வார்த்தைகள் மிகப் பொருத்தமாய் உள்ளது.

**யோவான் 15:21 -** "*அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.*" ". அதை இப்பிரபஞ சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே." 1கொரி 2:8 என்று பவுல் அறிக்கையிட்டார். தேவனுடைய திட்டம் மற்றும் இயேசு கிறிஸ்துவின் நோக்கம் குறித்து இந்த உலகம் குருடாய் இருக்கிறது. குருடாய் இருப்பவர்கள் தேவனுடைய திட்டத்தை காண வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது."சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல. சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா? அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை" (மத் 10:24-26) வருங்காலத்தில் ஆவிக்குரிய பார்வையற்றோர், உண்மையான காரியங்களை அறிந்துகொள்ளும்படி பார்வை பெறுவார்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்துவும், அவருடைய சபையும் சேர்ந்து செய்த காரியங்களை உணர்ந்து தேவனை மகிமைப் படுத்துவார்கள். இப்படிப்பட்ட வருங்காலத்தின் நம்பிக்கையே நம்முடைய இக்காலத்து ஆறுதலாய் இருக்கிறது.

**யோவான் 15:22-27 -** "*நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை. என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற*

*வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று. பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."* இந்த உலகம் இயேசுவையும், நம்மையும் மட்டும் பகைக்காமல், பிதாவாகிய தேவனையும் பகைக்கிறது என்று இயேசு மிகவும் ஆணித்தரமாக கூறுகிறார். நாம் எவ்வளவு அற்புதமான கூட்டமைப்பில் உள்ளோம் என்பதை எண்ணிப்பாருங்கள்.

இந்த உலகம் தேவனை அறியாமல் இருப்பதற்கு காரணம் சொல்ல முடியாது. ஏனெனில் இந்த உலகத்தில் உள்ள சகல சிருஷ்டிப்புகளும் தேவனை பிரதிபலித்துக் கொண்டிருப்பதை பவுல் கூறுகிறார். (ரோ 1:20) மேலும் நம்முடைய ஆண்டவராம் இயேசு மற்றும் அவருடைய சீஷர்களினால் இந்தச் சுவிசேஷத்தின் நற்செய்தி பூமியெங்கும் பரவியிருப்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. " அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். " (யோவ16 :8-11)

என்று இயேசு பரிசுத்த ஆவியைக் குறித்து போதித்தார். தேவ ஜனங்களின் செய்திகள்

மூலமாகவும், அவர்களின் வாழ்க்கை மூலமாகவும் இந்த உலகத்தில் தேவனுடைய ஆவி

வெளிப்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்டவர்களை காரணம் இல்லாமல் இந்த உலகம் பகைக்கிறது.

**முடிவுரை**

யோவான் 15ம் அதிகாரத்தில் நம்முடைய சிந்தைக்கு ஏற்ற மூன்று முக்கிய, ஆழமான பாடங்களை இயேசு கற்பித்திருக்கிறார்.

முதலாவது, அவரையல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இந்த உண்மையை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். இரண்டாவது, நம்முடைய சகோதரரிடத்தில் நாம் ஊக்கமாய் அன்பு செலுத்த வேண்டும். அவர் இப்படிச் செய்ததினால் நாமும் இந்தக் கற்பனையைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். மூன்றாவது, இந்த உலகத்தில் நாம் எந்த அளவிற்கு அன்பு கூருகிறோமோ, அந்த அளவிற்கு நாம் தேவனை விட்டு விலகியிருப்பது என்று பொருள் படுகிறது. ஆகவே நம்முடைய பரமபிதாவை அன்போடு சேவிக்க நம்முடைய ஒவ்வொரு அணுகவும், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க வேண்டும். அப்போது அவரும் நமக்குள் நிலைத்திருப்பார்.



# மனுஷரால் வெறுத்து புறக்கணிக்கப்பட்டவர்

"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" எபி 12:3

**Tom Ruggirello**

சில நேரங்களில், இயேசுவின்மேல் அதிகதிகமாய் அன்பு செலுத்துகிறவர்களுக்கு இயேசுவின் எதிரிகள் அவருக்கு விரோதமாக, இப்படிப்பட்ட பகிரங்கமான துணிகரம் கொண்ட பாவங்களை செய்ய அனுமதிக்கப்பட்டதன் காரணத்தை, புரிந்து கொள்வது கடினமாய் இருக்கிறது. பூரண மனுஷனாகிய இயேசு, மனுஷரால் எப்படி வெறுத்து புறக்கணிக்க முடிந்தது ? யூத மத தலைவர்கள் தங்களுடைய இரட்சகர் தங்களுக்கு முன்பாக நின்று கொண்டிருக்கையில், அவர் தங்களுடைய வாழ்க்கையில் நடப்பித்த ஆச்சரியமான மாற்றங்களை பார்த்து உணர்ந்துகொள்ளாதபடிக்கு அவர்களின் பொறாமையும் பேராசையும் அவர்களை தடுத்தது.

### சதுசேயர்கள்

நம்முடைய ஆண்டவரின் உலகப் பிரகாரமான மரணத்திற்குள்ளான இறுதி காட்சிகளை அடிப்படையாக நடத்தினவர்கள் இந்த சதுசேயர்கள்.

பரிசேயர்களைப் போல் இராமல், ரோம அதிகாரிகளிடத்தில் இவர்களுக்கு அதிகமான செல்வாக்கு இருந்து. இவர்கள் அரசியலில் ஆர்வமுள்ளவர்களாக இருந்ததினால் ரோமர்களோடு தொடர்ந்து உறவு கொள்வதை பழக்கமாக வைத்திருந்தனர். ஆகவே அவர்கள் உடனடியாக பிலாத்தினிடத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் சென்றார்கள். ஆண்டவராம் இயேசு ஆலயத்திலுள்ள காசுக்காரர்களை துரத்தின சம்பவத்தினால் சதுசேயர்கள் அவர்களை முற்றிலும் பகைப்பதற்கு காரணமாய் இருந்தது. ஏனெனில் ஆலயம் முழுவதும் சதுசேயர்களின் கட்டுக்குள் இருந்தது. ஆலயத்தில் இரண்டாவது முறையாக இயேசு சவுக்கை பின்னி, காசுக்காரர்களை விரட்டின பின்பு, சதுசேயர்கள் இயேசுவின் பெயரை முற்றிலுமாக கெடுப்பதற்கு முழுமையாக முயற்சித்தார்கள். (மத் 21:12-46)

கெத்சமெனே தோட்டத்தில் இயேசுவை பிடித்தபின் முதலில் அன்னாவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். முன்னாள் பிரதான ஆசாரியனாக இருந்த அவர் ஒரு சதுசேயர். ஆலயத்திற்குள் நடந்த வியாபாரத்தில், லாபத்தில் ஒரு பங்கை இவர் தனிப்பட்ட ஒரு முறையில் பெற்றிருக்க வேண்டும். ஆயினும் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக இயேசு நிறுத்தப்பட்ட பின்பு, ஆலயத்தில் நடந்த சம்பவத்தைக் குறித்த எந்த விதமான கேள்வியும் கேட்கப்படவில்லையென்பது ஆச்சரியமூட்டுகிறது. ஏனெனில் இயேசுவை பிடிப்பதற்கு இதுவே ஒரு முக்கிய காரணமாய் இருந்தது. இப்படிப்பட்ட இயேசுவின் செயலை அவர்கள் ஏன் அவருக்கு எதிராக குற்றம் சாட்டுவதற்கு பயன்படுத்தவில்லை? ஆலயத்தை குறித்து சதுசேயர்களுக்கும், பரிசேயர்களுக்கும் மிகப்பெரிய பிரச்சனை நடந்து கொண்டிருந்தது. காசுக்காரர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்து கணிசமான தொகையை சதுசேயர்கள் அறுவடை செய்து கொண்டிருந்தனர். இந்த பழக்கம் பரிசேயர்களுக்கு மிகவும் வெறுப்பூட்டக்கூடியதாய் இருந்தது. ஆகவே இந்தப் பிரச்சனையை சதுசேயர்கள் ஆலோசனை சங்கத்தாரிடம் கொண்டு வந்திருந்தால், பரிசேயர்களுக்குள் கிளர்ச்சியை எழுப்பியிருக்கும். இயேசு மரிக்கிறதை காணவேண்டுமென்ற அவர்களின் இலக்கை அடைவதற்கு இந்த இருதரத்தாரும் ஒரு பொதுவான காரணத்தை தேட வேண்டியதாக இருந்தது. ஆகவே அவர்கள் இயேசுவை பகைத்த உண்மையான காரணங்களை இறுதிவரைக்கும் அவர்களால் கூற முடியவில்லை.

### ஆலோசனை சங்கத்தாரின் செயல்பாடு

அன்னா காய்பா மற்றும் ஆலோசனை சங்கத்தாரின் மத்தியில் இயேசு மிகவும் அவமானப் படுத்தப்பட்டார். ஆலோசனை சங்கத்தாரின் மத்தியில் பொதுவாக வழக்குகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று ஆல்பிரட் எடர்ஷின் (Alfred Edershein) என்பவர் எழுதியுள்ளார். அதில் இயேசுவின் வழக்கில் ஆலோசனை சங்கத்தார் ஆறு காரியங்களை மீறினதாக அவர் குறிப்பிடுகிறார்.

1. நடைபெற்ற இயேசுவின் வழக்கை ஒருவரும் குறிப்பெடுக்கவில்லை. மற்றும் நடந்த சம்பவங்களை ஒருவரும் பதிவு செய்யவும் இல்லை.

2. இயேசுவுக்காக பரிந்து பேசுவதற்காக ஒருவரும் நியமிக்கப்படவும் இல்லை.

3. யூத சட்டத்தின்படி பொதுவாக ஆலோசனை சங்கம் கூடுமிடத்தில் இயேசுவின் வழக்கு விசாரிக்கப்படாமல், காய்பாவின்

அரண்மனையில் (இருப்பிடம்) விசாரணைகள் நடத்தப்பட்டது.

4. ஆலோசனை சங்கத்தாரின் அதிகபட்சமான ஓட்டெடுப்பின் மூலம் ஒருவரை குற்றவாளியாக தீர்க்க வேண்டும். ஆனால் இயேசுவின் விஷயத்தில் இந்தக் காரியம் தெளிவாக நடைபெறவில்லை.

5. விசாரணை நடந்த அதே நாளில் குற்றவாளி நியாயம் தீர்க்கப்பட மாட்டார்கள்.

6. இரவிலும் மத்தியான வேளைகளிலும், ஓய்வு நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் அதற்கு முன்பாகவும், பின்பாகவும் இப்படிப்பட்ட விசாரணைகள் நடத்தப்படக் கூடாது.

ஆலோசனை சங்கத்தின் நியாயமான சட்டங்களை இப்படியாக புறக்கணித்து யூதமத தலைவர்கள் தங்களுடைய உண்மையான சுயரூபத்தை வெளிப்படுத்தினார்கள். அன்னா மற்றும் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் அதிகாரத்தின் கீழ் நியாயங்களும், நீதிகளும் ஒதுக்கி வைக்க ப்பட்டது.

இயேசுவை பொறுத்த வரைக்கும் எல்லா விசாரணைகளும் சட்ட விரோதமாக நடத்தப்பட்டதென்று தெளிவாகிறது. உண்மையில் இது ஒரு நியாயமான விசாரணையாக இருக்கவில்லை. ஆலோசனை சங்கம் ஒருவருக்கும் நேரடியான மரணத்தீர்ப்பைக் கொடுப்பதற்கு அதிகாரம் பெறவில்லை. இந்த அதிகாரத்தை ரோமர்கள் மட்டுமே பெற்றிருந்தார்கள். ஒருவர் மரணத்தீர்ப்பை அடைய வேண்டுமென்றால், ரோம ஆளுநர் அவர்களின் சட்டத்தின்படி மரணத்துக்கு பாத்திரமான குற்றவாளி என்று அவர் கண்டுபிடித்தால் மட்டுமே அந்த மரணத்தீர்ப்பை அவரால் கொடுக்க முடியும். இறுதியாக இயேசுவை பிலாத்துவிடம் இழுத்துச் செல்கையில், அவர் முன்னதாகவே மரணத்தீர்ப்பை அடைந்தவராக அல்ல, குற்றம் சாட்டப்பட்டவரைப்போல் அழைத்துச் செல்லப்பட்டார். மோசேயின் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நீதிகளில் இப்படிப்பட்ட கூட்டங்களை விசாரனைக்கு கூட்டுவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருந்தது ? இயேசுவின் நியாயமான உரிமைகளை, பாதுகாப்பதற்கு முன்னதாகவே அவர்கள் நபர்களை நியமித்திருக்க வேண்டுமல்லவா ?

இயேசுவுக்கு எதிராக சாட்சிகளை உருவாக்குவதற்கு அவர்கள் கேட்ட அநியாயமான கேள்விகளையும், சொற்களையும் தடுப்பதற்கு அங்கே இருந்தவர்கள் யார்? (மத் 26:63) இயேசு நியாயமாக பதிலளித்ததினால் கன்னத்தில் அவர் பெற்ற அறையை யாரால் தடுக்க முடிந்தது ? நியாயமான சட்டங்கள், குற்றம் சாட்டுப்பவரின் உரிமைகள் மற்றும் நியாயப்பிரமாணத்தின் ஆவி செயல்பட்டிருந்தால், இவ்வளவு அநியாயங்களும் அனுமதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லையே.

**பொய்ச் சாட்சிகள்**

எல்லா விசாரணைகளிலும் நடப்பது போல, இயேசுவின் மேல் சாட்டப்பட்ட குற்றங்களை நிரூபிப்பதற்கு அநேக பொய்சாட்சிகள் கொண்டு வரப்பட்டார்கள். (மத் 26:59, 60)

இயேசுவை இடற செய்வதற்கு பரிசேயர்கள் கேட்ட மிக அருமையான கேள்விகளைப் போல் இந்தச் சாட்சிகள் இல்லை. இவர்கள் பொய்யாக உருவாக்கப்பட்டு அவருக்கு எதிரான சாட்சி கொடுத்தார்கள். இறுதியில் இயேசுவின் மேல் குற்றம் சுமத்துவதற்கு இரண்டு சாட்சிகள் வந்தார்கள். "தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்றுநாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள்" (மத் 26:61) என்று ஒருவர் கூறினார். இந்தக் குற்றச்சாட்டை கூர்ந்து கவனிக்கும்போது இயேசு இப்படியாக கூறவில்லையென்பது தெளிவாகிறது. மூன்று வருடங்களுக்கு முன்பாக அவர் ஆலயத்தை சுத்திகரிக்கையில் இவர் இந்த வார்த்தைகளை கூறினார். அப்பொழுது காசுக்காரர்களை விரட்டக் கூடிய அதிகாரத்தை ஸ்தாபிக்கக்கூடிய அடையாளத்தை யூத மத தலைவர்கள் இயேசுவினிடம் கேட்டார்கள். அப்பொழுது இயேசு இந்த ஆலயத்தை இடித்துபோடுங்கள் மூன்று நாளுக்குள் நான் அதை எழுப்புவேன் (யோவா 2:19) என்று இயேசு பதிலளித்தார்.

இயேசு தன்னுடைய சரீரமாகிய ஆலயத்தை குறித்துப் பேசினார் என்பதை யோவான் 21ம் வசனத்தில் விவரிக்கிறார். ஆனால் யூதர்கள் தவறாகப் புரிந்து கொண்டனர். அவர் சொல்லர்த்தமான ஆலயத்தைக் குறித்து பேசியிருந்தாலும் அவர்கள் மிக தெளிவாக இயேசுவின் வார்த்தைகளை மாற்றி கூறியிருப்பார்கள். ஆலயத்துக்கு எதிராக ஆண்டவர் பயமுறுத்தினார் என்று வலியுறுத்தினார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு இயேசு எந்த விதத்திலும் தன்னை பாதுகாத்துக் கொள்ளவில்லை. இயேசுவின் மௌனம் அவர்மேல் இருந்த குற்றச்சாட்டுகளை தள்ளிவிட்டு நேரடியாக காய்பா இயேசுவிடம் மோதுவதற்கு வழிவகுத்தது. ". இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய

வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"(மத் 26 :63, 64) இதுவே காய்பாவிடம் இயேசு பேசின இறுதி வார்த்தைகள்.

இயேசு அளித்த பதில், உண்மையான தேவ தூஷணம் என்று காய்பா அறிக்கையிட்டு, தன்னுடைய வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு". இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே.. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்." (மத் 26 : 65 -67)

இப்படியாக நம்முடைய ஆண்டவரை அவர்கள் நேரடியாக அடித்து கொடூரமாக உபத்திரவப்படுத்தி, அவரை நிந்தித்து பரியாசம் பண்ணி, சிலுவை மரணத்திற்கு அவரை அனுப்பினார்கள்.

**பிலாத்துவுக்கு முன்**

மறுநாள் காலை இயேசு பிலாத்துவுக்கு முன் கொண்டுவரப்பட்டார். முந்தைய இரவில் காய்பாவின் அரண்மனையில் இயேசு தேவ தூஷணம் சொன்னதினால் அவர் குற்றவாளி என்று யூதர்கள் முடிவு செய்திருந்தார்கள். ஆயினும் அவர்கள் பிலாத்துவினிடம் பேசும்போது இயேசுவின் மேல் வேறுவிதமான குற்றங்களைச் சாட்டினார்கள். "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்" லூக்கா 23:2 இஸ்ரயேலின் தேவனுக்கு விரோதமாக சொல்லப்பட்ட தேவ தூஷணங்கள் பிலாத்துவுக்கு முன்பாக குற்றமாக கருதப்படாது என்று அவர்கள் நன்கு அறிந்திருந்ததினால் வேறு குற்றங்களை இயேசுவின் மேல் சாட்டினார்கள். பிலாத்து இயேசுவுக்கு மரணத்தீர்ப்பை கொடுக்கும்படியாக அவர்கள் இயேசுவின் மேல் வேறு சாட்சிகளை உருவாக்கினார்கள். நியாயங்களை காட்டிலும், தன்னுடைய வருங்கால பதவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார் என்ற பிலாத்தின் பலவீனத்தை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தினார்கள்.

இயேசு தேசத்தை நெறி தவற செய்கிறவர் என்று சொன்னவுடன், "ஜனங்களுக்கு மத்தியில் புரட்சியை உண்டுபண்ணுகிறவர்" என்று கிரேக்கர் சிந்தித்தார்கள். மற்ற வார்த்தைகளில் சொல்லப்போனால் ரோம அதிகாரத்திற்கு எதிராக புரட்சி செய்கிறவர் என்று இயேசுவின் மேல் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இயேசு ரோம அதிகாரத்தை குறித்து எந்தச் சூழ்நிலையிலும் பேச வில்லை. அவர்களுக்கு எதிராக புரட்சி செய்வதற்கும் அவர் ஒருபோதும் கூறவில்லை. இயேசு ரோம அரசாங்க அதிகாரத்தை அல்ல. யூத மத தலைவர்களின் அதிகாரத்தை பலவீனப்படுத்தி கொண்டிருந்தார். இதனால் இவர்கள் அதிகமான பாதிப்புக் குள்ளானார்கள். ஆனால் ரோம அதிகாரத்திற்கு முன் உண்மையான காரணங்களை இயேசுவின் மேல் குற்றமாக கருதப்படாது. ஆகவே ரோம அதிகாரத்திற்கு முன் குற்றப்படுத்துவதற்காக இயேசு அரசாங்கத்திற்கு எதிராக புரட்சியைத் தூண்டிவிட்டார் என்று குற்றம் சாட்டுவதற்கு பொய்யான சாட்சிகளை ஏற்படுத்தினார்கள். அடுத்து, ராயனுக்கு வரி செலுத்துவதற்கு அவசியம் இல்லை என்றும் இயேசுவின் மேல் குற்றம் சாட்டினார்கள். இது அப்பட்டமான பொய்யாக இருந்தது. ஏனெனில் இரண்டு நாட்களுக்கு முன் இயேசுவிடம் இக்கேள்வி கேட்கப்பட்டபோது."இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்" மத் 22:21 என்று இயேசு பதில் அளித்தார். அதாவது ராயனுக்கு வரி செலுத்துவது நியாயமான காரியம் என்று இயேசு கூறினார். இயேசு தன்னை குற்றமில்லாதவராக நிரூபிக்க விரும்பியிருந்தால், இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சம்பவத்தை பிலாத்துவினிடம் அவர் கூறியிருக்கலாம். (மத் 22:15,16) ஆனால் இயேசு அப்படிச் செய்யவில்லை. தன்னுடைய சுய உரிமையை நிலை நிறுத்திக் கொள்வதற்கு, இயேசுவுக்கு அநேக வாய்ப்புகள் இருந்தது. ஆனால் அவரை கொல்லவேண்டும் என்று அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தையும் எந்த விதத்திலும் தடுத்துவிடக்கூடாது என்ற தீர்மானத்தில் இயேசு உறுதியோடிருந்தார்.

**காட்டிக்கொடுத்தலின் கிரயம்**

"நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்"(மத் 26:15) என்று யூதாஸ் பிரதான ஆசாரியனிடம் சொன்ன போது அவர்கள் 30 வெள்ளிகாசுகளை கொடுப்பதற்கு தீர்மானித்ததன் காரணம் என்ன ?

யாத்தி 21:32ம் வசனத்தின்படி ("அந்த மாடு ஒரு அடிமையானவனையாவது ஒரு அடிமைப்பெண்ணையாவது முட்டினால், அதற்கு உடையவன் அவர்களுடைய எஜமானுக்கு முப்பது சேக்கல் நிறையான வெள்ளியைக்

கொடுக்கக்கடவன்; மாடு கல்லெறியப்படவேண்டும்.") ஓர் அடிமைக்கான விலை 30 வெள்ளிகாசு என்று நினைக்கலாம்.

ஆசாரியர்கள் இயேசுவை மிகக் குறைவாக மதிப்பிட்டதை நாம் இங்கு காணலாம். இயேசுவை ஒரு சராசரி மனுஷனாக அல்ல, ஒரு அடிமையாக தான் அவர்கள் எண்ணினார்கள். "அந்த மாடு ஒரு அடிமையானவனை முட்டினால்" நியாயப்பிரமாணத்தின் படி என்ன செய்யவேண்டும் என்று சொல்லப்பட்ட காரியங்கள், சங்கீத புத்தகத்தில் இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்திற்கு மிக பொருத்தமாக இருக்கிறது. "அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது" "என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்; நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும் போது எனக்குச் செவிகொடுத்தருளினீர்"(சங் 22:12,21)

"யோர்தானுக்கு அப்புறத்தில் பாசான் என்ற ஊர் இருந்தது. அது மிக செழிப்பானதும் கால் நடைகளை வளர்ப்பதற்கு மிக அருமையான நிலப்பகுதியாக இருந்தது. மேய்ச்சலுக்கு சென்ற கால்நடைகள் கொழுத்த மிருகங்களாக வளர்ந்தது. இவைகள் உயர் நிலையில் உள்ள ஐசுவரியவான்களின் அதாவது யூதர்கள் மற்றும் புறஜாதியாரில் உள்ள ஐசுவரியவான்களின் கட்டுபாட்டிலிருந்தது. தாவீதின் எதிராளிகளாக இருந்த இவர்கள் கிறிஸ்துவுக்கும் எதிராக இணைந்து செயல்பட்டார்கள் என்று ஆதாம் கிளர்ச்சியின் விமர்சனங்கள் கூறுகிறது.

இயேசுவின் மரணத்தை யூத ஆசாரியர்கள் முன்னதாக தீர்மானித்திருந்தாலும், ரோமர்கள் அவர்களால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாக இருந்தார்கள். எனவே பாசானின் எருதுகள் மிக வல்லமையுள்ளதாக இருப்பதை போல கபடற்ற அடிமையான இயேசுவை முட்டிக்கொன்றார்கள். அவர்களின் இந்தச் செயலுக்காக அவர்கள் 30 வெள்ளிக் காசுகளை கொடுக்க சம்மதித்தார்கள். நியாயப்பிரமாணத்தின் சட்டபடி அந்த எருதுகள் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும்.

ரோமர்கள் ஆலயத்தை சீரழித்த போது ஆலோசனை சங்கத்தாரின் வல்லமை முடிவுக்கு வந்தது. அதன் விளைவாக ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடிக்கு தேசம் பாழாக்கப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்பட்டது. ( மத் 24:2)

**யூதாஸின் மனம்வருந்தல்**

இயேசு மரண தீர்ப்பு பெற்றவுடன், யூதாஸ் மனம் வருந்தி, ஆசாரியர்களிடம் அந்த 30 வெள்ளி காசை திருப்பி கொடுத்ததாக வாசிக்கிறோம். (மத் 27:3) அவர்கள் அதை வாங்கிக் கொள்ள மறுத்தபோது, அந்தக் காசுகளை ஆலயத்தில் வீசி விட்டு தூக்கு மாட்டிகொண்டான்.". குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான்." (மத் 27:4) என்று அவன் மன வியாகுலத்துடன் அறிக்கையிட்டான்.

யூதாஸின் மனம் வருந்துதலை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, இது ஒரு சரியான மனம் வருந்துதலா ? என்ற கேள்வி எழும்புகிறது. அவன் உண்மையான நோக்கத்துடன் மனம் வருந்தினதற்கு, தற்கொலை தான் தகுந்த நிரூபணமா ? மனம் வருந்துதலின் உண்மையான விளக்கத்தை இதற்கான பதில் தரவேண்டும்.

செய்த தவறை ஒத்துக்கொள்வது மட்டுமே உண்மையான மனம் வருந்துதல் அல்ல. தவறுகளை ஒத்துக்கொள்வது நியாயமானதாக இருந்தாலும், அதை தொடர்ந்து நடக்கக்கூடிய செயல்கள் அதற்கேற்ற நிரூபணங்களாக இருக்கவேண்டும். யூதாஸ் மனம் வருந்தினான், அவன் பிரதான ஆசாரியர்களிம் சென்று குற்றத்தை ஒத்துக் கொண்டான், ஆனால் தேவனிடமோ, தாம் துரோகம் செய்த இயேசுவினிடத்திற்கும் அவன் செல்லவில்லை. தவறு செய்த யூதாஸ் நியாயமாக தேவனிடத்திற்கும் இயேசுவினிடத்திற்கும் சென்று தன்னுடைய குற்றத்தை ஒத்துக்கொண்டு, அதற்கான மன்னிப்பை கேட்டிருக்கவேண்டும். ஆகையால் இந்த விஷயத்தில் இயேசுவால் ஒன்றும் செய்ய வாய்ப்பில்லாமல் போனது. இது தேவனுடைய திட்டம். ஆயினும் யூதாஸ் தன்னுடைய தவறுகளுக்கு மனம் வருந்தி, தான் செய்த தவறை திருத்திக்கொள்ள முயற்சித்திருக்கவேண்டும். அவன் செய்ய விரும்பிய எந்த ஒரு நல்ல காரியத்தையும் (மனம் வருந்துதலுக்கான செயல்கள்) தற்கொலை தடுத்துவிட்டது.

பாவம் செய்த கிறிஸ்தவர்களுக்கு வல்லமையுள்ள ஒரு பாடம் இதில் உள்ளது. தாங்கள் செய்த தவறுகளை தேவனிடத்தில் ஒத்துக் கொண்டவர்கள் தாங்கள் செய்த பாவத்தினால் வந்த தீங்கை சரி செய்வதற்கு வேண்டி அல்லது தக்க காரியங்களை வரிசையாக செய்யவேண்டும். சில நேரங்களில் இதற்கான கிரியைகளைச் செய்யமுடியாமல் போகலாம். ஆனாலும் இந்தக் கோட்பாடுகள் இருதயத்தின் விருப்பமாக இருக்கவேண்டும்.

**சிலுவையின் ஆவிக்குரிய சவால்**

சிலுவையின் மேல் இயேசு பொறுமையோடு சகித்த மனுஷ நிலைக்கு அப்பாற்பட்ட பாடுகளும், உபத்திரவங்களும் விவரிப்பது அப்பாற்பட்ட காரியமாக

இருக்கிறது. ஆயினும் இயேசுவின் ஆவிக்குரிய சவாலுக்கு இது ஒரு மிகப் பெரிய சோதனையாக இருந்தது. அவருடைய இருதயத்தில் ஏற்பட்ட பகையை அவருடைய மாம்சத்திற்கு எதிராக அவரால் எப்படி முறியடிக்க முடிந்தது ? இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் உடனடியாக சுற்றியிருந்த பிரதான ஆசாரியர்களும், ஜனக்கூட்டங்களும் அவரை பரியாசம் பண்ணி, அவரை ஏளனம் செய்தார்கள்."அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்.அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைக் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத் 27:39-43)

இப்படிப்பட்ட அவமானத்திற்குரிய வார்த்தைகளுக்கு, இயேசு எந்த விதமான பதிலும் கொடுக்கவில்லை. இயேசுவின் இருதயத்திற்கு மிகப்பெரிய சோதனை நடந்தது. பகை மற்றும் விரோதங்கள் பாவமான காரியங்களாகும். இயேசு சிறிதளவு கசப்பை தன்னுடைய இருதயத்தில் யோசித்திருந்தால் கூட, அதாவது இஸ்ரயேலின் மேல் இனி வரக்கூடிய கலவரங்களை அவர் நினைத்திருந்தால் கூட அவருடைய இருதயத்திற்குள் சிறதளவு பாவம் நுழைந்திருக்கும். இதன் பலனாக இயேசு இந்த உலகத்தை மீட்கக்கூடிய பணியில் தோல்வி அடைந்திருப்பார். ஆகவே இயேசுவின் சிலுவை மரணத்தில் அவர் மாம்சத்தில் உண்டான வேதனையை மட்டும் சகிக்கவில்லை. சத்துருக்களையும் சிநேகிக்க வேண்டும் என்ற விசுவாசத்தின் இறுதி சோதனையை அவர் எதிர்நோக்கினார். கொடூரமான வேதனையை சந்தித்திக்கும்போது ஏழு அங்குல ஆணிகள் தன்னுடைய கைகளிலும், கால்களிலும் அடிக்கப்பட்ட வேதனையோடு, முழு பலத்தோடு அவர் எப்படி அன்பு கூர்ந்திருப்பார் ? இப்படியாக அன்பு கூருவதற்கு அவருடைய மனம் எவ்வளவு சீராக இருந்திருக்க வேண்டும் ?

தன் மேல் தவறாக குற்றம் சுமத்தி, தன்னை தகடுபொடியாக்கின துரோகிகளை நிந்திப்பதற்கு அவர் தம்முடைய இருதயத்தை அடைத்துவிட்டாரா ?

இயேசுவின் மலை பிரசங்கத்தின் போது அவர் வெளிப்படுத்தின கோட்பாடுகளின் உச்சக்கட்ட சோதனைகளை சிலுவை மரணத்தில் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் சோதனைகள் அனுமதிக்கப்பட்டது. "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.

இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" (மத் 5:44,45)

இயேசு போதித்த காரியங்களை அவரால் செய்ய முடிந்தது என்பதை அவருடைய சீஷர்களுக்கு எவ்வளவு அருமையாக நிரூபித்தார். பகைக்கு பதிலாக அன்பை காட்டினார். இயேசுவின் அன்பின் போதனைகள் வெறும் வார்த்தைகள் அல்லவென்பதை அன்று கொல்கொதாவில் நின்ற ஜனங்கள் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள். அவர் போதித்த கோட்பாடுகள் அவருக்குள் ஆழமாக பதிந்திருந்தது. சொல்லபோனால் அவர் அந்தக் கோட்பாடுகளின் ஒரு பகுதியாய் இருந்தார்.

உண்மையில் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினதால் அவருடைய மனநிலை மிக சரியானதாக ( தேவனுக்கு ஏற்றதாக) இருந்திருக்கும் என்று நிரூபணமாகிறது. முழு கீழப்படிதலோடும், இருதயத்தில் எல்லா சுத்திகரிப்போடும், அவர் வாழ்ந்தார் என்பதை தேவன் முழுமையாக அங்கிகரித்ததன் விளைவாக அவர் உயிர்த்தெழுப்பப்பட்டார். பிதாவாகிய தேவன் இயேசுவை இவ்வளவாக உயர்த்தினதற்கு அவர் செய்த புண்ணியங்கள் எத்தனை எத்தனை !! அவர் செய்த காரியங்களுக்காக மட்டும் அல்ல அவர் எப்படி இவைகளை செய்தார் என்பதை எண்ணி நாம் மிகவும் நன்றியுள்ள உணர்வோடு அவரை மகிமைப் படுத்துவோம்.

இயேசுவும் உயிர்த்தெழுதலும்

# மரித்தோரிலிருந்து எழுந்திருத்தல்



"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்"(1கொரிந்தியர் 15:20 )

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக் கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" யோவான் 11:25,26 என்று இயேசு சொன்னார். உண்மையில், இதுவரைக்கும் ஒருவரும் பேசியிராத இனிமையான காரியத்தை, ஆசீர்வதிக்கப்பட்ட இந்தச் செய்தி கூறுகிறது. மகிமையான உயர்த்தெழுதலின் நம்பிக்கை !அற்புதமான வேதாகமம் ! மரித்தோர் உயிர்த்தெழு வார்கள் என்றும், மரித்தவர்கள் மரித்தருக்கிறார்கள் என்ற சத்தியத்தை போதிக்கும் உண்மையான ஒரே புஸ்தகம் வேதாகமம்.

எரி நரகத்திற்கும், கந்தகத்தில் நித்தியமாக உபத்திரவப்படுவார்கள் என்பது மிக தவறான நம்பிக்கை என்பதை உணர்ந்து, "பாவத்தின் சம்பளம் மரணம்" என்ற உண்மையை நாம் அறிந்து, முழு மனுக்குலமும் ஹைடிஸ்க்கு அல்லது ஷீயோலுக்கு அல்லது செயலற்ற, நிலைமைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும். இப்படிப்பட்ட நிலையிலிருந்து ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவதற்கு - முதலாவது சபைக்கு அதற்குப்பின் இந்த உலகத்திற்கு - உயிர்த்தெழுதலின் நம்பிக்கை மிகவும் அவசியமானது.

பழைய ஏற்பாட்டில் ஷீயோல் என்ற வார்த்தையை தாவீது பயன்படுத்தினாார். புதிய ஏற்பாட்டில் ஹைடிஸ் என்ற வார்த்தையை அப்போஸ்தலர் பேதுரு பயன் படுத்தினார். ஆகவே ஒரே வார்த்தை வெவ்வேறு மொழியில் இருப்பதை புரிந்து கொண்டால் குழப்பமில்லை. ஷீயோல் மற்றும் ஹாதேஸ் என்ற பிரபலமான வார்த்தைகள் உபத்திரவப்படுத்தக்கூடிய ஓர் இடத்தை அல்ல, மாறாக மரணத்தில், உணர்வற்ற ஒரு நிலையை குறிக்கும்.

இயேசு ஹாதேசுக்கு சென்றது போல முழு மனுக்குலமும் ஹாதேசுக்கு செல்லவேண்டும். மூன்றாம் நாளில் பிதாவாகிய தேவன் இயேசுவை எழுப்பினது போல சபையாகிய நம்மையும் தேவன் எழுப்புவார். மேலும், துன்மார்க்கரும், அதாவது வாழ்க்கையில் தேவனால் அங்கிகரிக்கப்படாதவர் களும்கூட மரணத்தின் நித்திரையிலிருந்து எழுந்தி ருப்பார்கள். அவர்கள் இதுவரைக்கும் பாவம் மற்றும் மரணத்தின் கீழ் இருந்தார்கள் என்பதை உணருவார்கள்.இனி அவர்கள் நீதியின் பாதையில் நடக்க பயிற்சி பெற்று, நித்திய ஜீவனை பரிசாக பெறுவார்கள்.

மரணத்தின் கம்பிகள் தெறித்துவிடும். இயேசு உயிர்த்தெழுந்து, "மரணத்தின் கம்பிகளை தகர்த்தார்" என்று ஒரு பாடல் உண்டு. அந்த மரண நிலையில் அவரால் நிலைத்து நிற்க முடியவில்லை என்று பவுல் கூறுகிறார். (அப் 2:24)

இயேசு இறுதிவரைக்கும் விசுவாசமுள்ள வராக இருந்ததினால் உச்சக்கட்ட ஜீவனுக்குரிய நிலையை - அழியா ஜீவனை - பரிசாக பெறவேண்டும் என்று தெய்வீக தீர்ப்பளிக்கப்பட்டது. (எபே 1:20.21)

நம்முடைய இரட்சகர் பரலோகத்திற்குரிய மகிமையை விட்டு, மாம்சத்தில் வந்து, உயிர்த்தெழும் வரையில் இந்த உலகத்தில் வாழ்ந்து அதற்குப்பின் இந்தப் பூமிக்குரிய ஜீவனிலிருந்து "தூதர்களுக்கும் மேலான" பரலோகத்திற்குரிய அழியா ஜீவனை பெற்றதைகண்ட பரிசுத்த தூதர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் நியாயமாக யோசிக்கலாம். இயேசுவின் (ஜனனத்தின) போது, இந்தத் தூதர்கள் மிக மகிழ்ச்சியோடு "எல்லா ஜனங்களுக்கும் சந்தோஷம் உண்டாகும். ." என்று பாடினார்கள். இப்படியிருக்க, பிதாவாகிய தேவன் அவருடைய உபத்திரவத்தின் பாத்திரத்தை நிரப்பி அதன் வண்டல்களை உறிஞ்சி குடிக்கும் வரையில் அனுமதித்து சோதிக்கப்படவும், வேதனைப்படவும் முழுமையாக ஒப்புகொடுத்ததை கண்டு, நிச்சயமாக அவர்கள் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். "அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராகிய அவர் மரித்தார்." என்பதை குறித்தும் அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும். பல மணிநேரங்களாக மரித்த இயேசு கல்லறையில் கிடந்ததை கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பரலோக பிதாவின் மேல் இந்த பரிசுத்த தூதர்கள் வைத்திருந்த விசுவாசம் இந்தக் காலத்தில் சோதிக்கப்பட்டது. ஆனால் தெய்வீக வல்லமையினால் இன்னும் அதிகமான மகிமையில் எழுப்பப்பட்டதை அவர்கள் கண்ட போது அவர்களுக்கு பலனளிக்கப்பட்டது.

"தேவ தூதர்கள் அனைவரும் இயேசுவை தொழுதுகொள்ள கடவீர்கள்" என்ற பிதா அறிக்கையிட்டவுடன் அனைத்து தூதர்களும் எவ்வளவு ஆர்வத்தோடு இயேசுவை தொழுது கொண்டிருப்பார்கள். "அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமை யையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். " நம்முடைய இரட்சகர் அவருடைய உயிர்த்தெழுதலின் போது பெற்ற மாற்றத்தை குறிப்பாக கவனிக்கவேண்டும். இயேசு மூன்று நாள் கல்லறையில் இருந்த போது அந்த மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனால் அவருடைய 3 1/2 வருட ஊழியத்திற்குபின் உயிர்த்தெழுதலில் இது நடந்து. அவர் முப்பது வயதானபோது அனுமதிக்கப்பட்ட தெய்வீக காரியங்களுக்கு, எல்லா விதத்திலும் அவர் கீழப்படிந்திருப்பதற்கு அவர் பெற்றிருந்த இந்தப் பூமிக்குரிய நம்பிக்கைகளையும் உரிமைகளையும் பிதாவின் கரங்களில் ஒப்புகொடுத்தார். அந்நேரத்தில் அவருடைய மாம்சத்தின் பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு ஆதாரமாக பரிசுத்த

ஆவி புறாவைபோல் அவர்மேல் அமர்ந்தது, மனித கிரியைகளுக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய கிரியைகளை செய்வதற்கு அவருடைய சிந்தை உடனடியாக ஊக்கவிக்கப்பட்டது.

யோர்தானில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டியாகிய இந்த இயேசு, தேவனுடைய வல்லமையான கிரியைகளை நடப்பித்தார். தெய்வீக வழிநடத்துதலுக்கு இசைவாக இயேசு தன்னுடைய மாம்சத்தையும், அவருடைய மனித நிலையையும் படிப்படியாக பலிசெலுத்தினார். பிதா கொடுத்த பாத்திரத்தில் இயேசு பானம் பண்ணினார்.

"சிறந்த தெய்வீக வல்லமை மரித்தோரிலி ருந்து எழுப்பியது"

இப்படியாக ஆண்டவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த அந்த விசேஷித்த நாளை ஏதோ ஒரு ஞாயிற்று கிழமை அன்று என்று கொண்டாடி வருகின்றனர். இது பொய்யாக இருந்தால், நம்முடைய நம்பிக்கை, விசுவாசம், போதனை, மற்றம் உபதேசங்கள் வீணாக இருக்குமே என்று பவுல் கூறுகிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் இயலாததாக இருந்தால், இயேசுவின் உயிர்த்தெழுதலும் நடந்திருக்காதே. இயேசுவின் உயிர்த்தெழுதல் நடக்காவிட்டால், தெய்வீக வல்லமையினால் சபை உயிர்த்தெழும் என்ற நம்பிக்கைக்கு எந்த ஆதாரமும் இருந்திருக்காதே. தெய்வீக வல்லமையானது "ஆடுகளின் நல்ல மேய்ப்பனை" மரித்தோரிலிருந்து பிதாவாகிய யேகோவா தேவன் குறித்த காலத்தில் நம்மையும் எழுப்புவார்.

ஒருவரும் இந்தக் கேள்வியை மறுக்க வேண்டாம் ! அனைவரும் உடனடியாக முடிவு செய்வோம் !நாம் உயிர்த்தெழுதலை விசுவாசித்தாலும் சரி விசுவாசிக்காவிட்டாலும் சரி, உயிர்த்தெழுதல் ஒரு கதையாக இருந்தால், இயேசுவுக்குள் விசுவாசத்தோடு அவரோடு மரித்த அனைவரும் அழிந்துபோய்விடுவாரே - இவர்கள் பரலோகத்திலோ, நரகத்திலோ, உத்திரிக்கும் ஸ்தலத்திலோ இருப்பதில்லையே. ஆனால் நாம் மரித்த நீதியுள்ளவர்கள் மற்றும் அநீதியுள்ளவர்களின் உயிர்த்தெழுதலை விசுவாசித்தால் இப்போது அவர்கள் அனைவரும் மரித்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை நியாயமாக நம்ப வேண்டும். தெய்வீக வாக்குத்தத்தத்தின்படியும், நோக்கத்தின் படியும், ஒழுங்கின்படியும் அவர்கள் மரித்திருக்கி றார்கள் என்று நம்ப வேண்டும். உயிர்த்தெழுதலின் கேள்விக்கான முடிவுகள், பொதுவாக கிறிஸ்துவ சபையில் எல்லா உபதேசங்களிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. (1கொரி 15:13-19)

**கிறிஸ்துவே முதற்பலன்**

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்"(1கொரி 15:20) தேவனுக்கே நன்றி, நம்முடைய ஆண்டவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று மறைமுகமாக அப்போஸதலர் கூறுகிறார். இந்தப் பாடம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாம் அறிந்து கொள்வதற்கு இப்படியாக ஒரு சில கேள்விகளை அப்போஸ்தலனாகிய பவுல் எழுப்பினார். "கிறிஸ்துவே முதற்பலனானவர்" என்று என்ன பேரானந்தத்தோடுபதில் அளிக்கிறார். இதில் உள்ள பல காரணங்களுக்காக மகிழ்ச்சி அடையக்கூடியவர் களாக இருக்கிறோம். முதலில் தன்னுடைய மகிமையை விட்டு, மாம்சமாகி நமக்காக மரணத்தை ருசிபார்த்தவர், உயிர்த்தெழாவிட்டால் எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும். அவர் உயிர்த்தெழுந்ததில் நமக்கு எவ்வளவு சந்தோஷம். மேலும் அவர் ஆவிக்குரிய மகிமையை இழந்த மாம்சத்தில் உயிர்த்தெழுப்பப்படாமல், கர்த்தாதி கர்த்தராகவும், இராஜாதி இராஜாவாகவும் அழியா நிலையில் உயிர்த்தெழுப்பப்பட்டது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இரண்டாவதாக நம்முடைய சொந்த காரியத்திற்காகவும், இந்த உலகத்திற்காகவும், மகிழ்ச்சி அடைகிறோம். மரித்தோரிலிருந்து அவர் எழுந்திருக்காவிட்டால் இரண்டு காரியங்களில் ஒன்று நிரூபிக்கப்பட்டிருக்கும் - ஒன்று தெய்வீக நிலையின் அளவுக்கு அவர் தேவன் மேல் வைத்த விசுவாசம் திருப்தியாக இருப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்கும். ஆகையால் அவருடைய ஜீவன் பூரணமான மனுஷனுடைய ஜீவனுக்கு சரி நிகர் சமமாக இருந்திருக்காது. அல்லது மரணம் வரைக்கும் கீழ்ப்படிதலை நிரூபித்தால் அவர் உயிர்த்தெழுப்பப்படுவார் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் பொய்யாகி விட்டிருக்கும்.

மேலும் மரித்த அனைவரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவது இல்லை என்பதை அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார்"அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள்" (1கொரி 15:23) வரிசையில் முதல் உயிர்த்தெழகூடியவர்கள் சபை"முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி 20:6)

இந்தப் பரிசுத்தவான்கள் இயேசுவோடு கூட இணைந்து ஆட்சிசெய்வதற்கு முன், கிறிஸ்துவைப் போல அழியா ஜீவனை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இப்பொழுது நாம் பூமிக்குரிய ஆதாமின் சாயலைப் பெற்றிருக்கிறோம் இனி இரண்டாம் ஆதாமாகிய நம்முடைய மகிமையடைந்த ஆண்டவரைப் போல மகிமையான உயிர்த்தெழுதலில் மாற்றப்படுவோம். நாம் அவரைப் போல இருந்து அவரை தரிசிப்போம். இப்படியாக, முதலாம் உயிர்த்தெழுதல் பங்கை பெறும் விசேஷித்த வகுப்பார், நம்முடைய இரட்சகரோடு சிங்காசனத்தில் அமருவார்கள்.

அதற்குப்பின் நம்முடைய மேசியாவின் பகிரங்கமான ஆட்சியில் இரண்டாம் உயிர்த்தெழுதல் சம்பவிக்கும். அப்பொழுது நம்முடைய அப்போஸ்தல னாகிய பவுல் சொல்லியபடி - எல்லாச் சத்துருக் களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும்வரைக்கும், அவர் ஆளுகை செய்வார், கடைசி சத்துருவாகிய மரணத்தையும் பரிகரிப்பார்.

# பாதுகாப்பான உலகமா?

"சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும். அவர்கள் தப்பிப் போவதில்லை" - 1 தெசலோனிக்கேயர் 5:3

2002ம் ஆண்டில் வன்முறைப் பற்றியும் அரோக்கியத்தைப் பற்றியும் உலக சுகாதார அமைப்பு (W.H.O) நடத்திய ஆய்வின் துவக்க கட்டுரையாக தென் ஆப்பிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா எழுதியது, என்ன வென்றால், "வன்முறையை குறிக்கும் நூற்றாண்டாக இருபதாம் நூற்றாண்டை நினைவில் வைக்கலாம். இவ்வளவு திரளான மக்கள் கூட்டம் அழிந்து கொண்டிருக்கிறவரை பார்க்க பாரமாக இருக்கிறது. இது போன்ற வன்முறை இதுவரை பார்த்ததும் இல்லை, மனித சரித்திரத்தில் இதுவரை நிகழ்ந்ததும் இல்லை". 2000 ஆண்டில் 1.6 மில்லியன் ஜனங்கள் வன்முறையால் இறந்துள்ளார்கள் என்ற அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. அதாவது குறைந்தது 1,00,000 மக்களுக்கு 28.8 பேர் ஆயுதம் தாங்கிய போரால் 20% மக்கள் இறந்தார்கள். ஆப்பிரிக்கா முதல் பாகிஸ்தான் வரை சமுதாய கிளர்ச்சியால் இன்றுவரை பலர் உயிர்யிழந்து கொண்டிருக்கிறார்கள். போதை மருந்து தயாரிப்போரால் நடந்து கொண்டிருக்கும் கொலைகள் மெக்சிகோவில் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து பார்க்கையில் ஆயுதம் தாங்கியவர் நடத்தும் போர்களில் இறந்தவர் எண்ணிக்கை சற்று குறைந்தே உள்ளது.

ஆனால் உண்மையில், இந்நாள் வரை சரித்திரத்தில் பதிவாகியிருக்கும் வன்முறையை பார்கிலும் இப்பொழுது நடக்கும் வன்முறைகள் சற்று குறைந்து தான் உள்ளது. உணர்ச்சி பூர்வமான செய்திகளை 24மணி நேரமும் கொடுக்கும் செய்தி சேனல்கள் ஆராய்ந்து கூறும் உண்மைகள் என்னவென்றால் உள்நாட்டு கலகங்களுக்கு பிறகு நடந்து கொண்டிருக்கும் உலக முரண்பாடுகள் அனைத்தும் எண்ணிக்கையிலும் சரி வீரியத்திலும் சரி சீராக குறைந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் மற்றும் கனாடாவின் கூட்டு ஆராய்ச்சியில் எல்லா விதமான போர்கள் அதாவது மாநிலங்களுக்கு இடையே, சமுதாயப் போர், இனப்போர், மேலும் வேறு வகையான புரட்சிகள், 1990 ஆம் ஆண்டிலிருந்து இந்த புதிய நூற்றாண்டு வரை குறைந்து கொண்டே போகிறது. எதிரிகள் கையாள கொடூரமாக சாகும் மனிதர்களின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே போகிறது.

அனுதினமும் ஜீவனும் பாதுகாப்பாக இருக்கிறது

போர்களினால் வரும் இறப்பு குறைந்ததால் வன்முறை குறைந்து விட்டது என்று கூற முடியாது, F.B.I கொடுத்த செய்தியின்படி, வாஷிங்கடன் போஸ்டு (Washington Post) என்ற செய்தித் தாளிலும் அனுதினமும் வன்முறை குறைந்து கொண்டே வருவதாக கூறுகிறது. ஐக்கிய நாடுகள் இந்த குறைந்துகொண்டிருக்கும் குற்றங்களை தலைப்பு செய்திகளில் போடுகையில் "கடந்த 20 ஆண்டுகளாக மிக முக்கியமான சமுதாய போக்கு" என்று கூறுகிறது.

சில கண்டுபிடிப்புகள் -

* 1991 முதல் 2000 ஆண்டிற்குள் ஐக்கிய நாடுகளில் கொலை என்னும் குற்றம் 51 % ஆக குறைந்துள்ளது. அதாவது 1,00,00 மக்களுக்கு 9.8 பேராக இருந்தது. 10,000 மக்களுக்கு 4.8 ஆக குறைந்தது.

*அதே காலகட்டத்தில் சொத்து குவிக்கும் குற்றங்களாகிய திருட்டு போன்ற குற்றங்களும் மிக விரைவாக குறைந்தது.

*வண்டிகளை திருடும் குற்றங்கள் 64 % ஆக குறைந்தது.

*இதே போன்ற போக்குகள் 2011 இல் முதல் பாதி மாதங்கள் வரை தொடர்ந்தன என்று டிசம்பர் 19யில் வெளியான F.B.I செய்தி கூறுகிறது. ஐக்கிய நாடுகள் மிக விரைவில் தனது கொலை குற்ற விகிதம் மிக குறைந்த அளவு குறைந்துவிடும்.

போர் அதிகம் நடக்கும் கண்டமாக ஐரோப்பிய கண்டம் சரித்திரத்தில் பெயர் வகித்தாலும், தற்சமயம் முழுவதும் அமைதியாக - ஒரு சின்ன அச்சுறுத்தல் கூட இல்லாமல் மாநிலங்களுக்கு இடையே வன்முறைக்கு திட்டங்கள் கூட தீட்டாமல் இருக்கிறது. இதுவரை சரித்திரத்தில் சொல்லப்படாத அளவிற்கு பல சதவீத உலக ஜனங்கள் இன்றைய நாட்களில் மிக அமைதியாக வாழ்வதாக கூறப்படுகிறது. தற்சமயம் நிகழந்து கொண்டிருக்கும் வன்முறைகள் மேற்கத்திய நாடுகளில் ஒன்றாக கொலெம்பியாவில் நடக்கும் சமுதாய போர், அதுவும் பத்து வருடங்களுக்கு முன் இருந்த வன்முறை போல் அல்லாமல் இப்பொழுது மிகுந்த குறைந்த நிலையில் உள்ளது. நிறைய விஷயங்களில் இன்று இவ்வுலக மக்கள் சமாதானம் என்ற பொற்காலத்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இது நிரந்திரம் என்பதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை. சமாதானத்தினால் வாழ்க்கையின் தரம் உயர்வதில்லை

*2011யில் உலக ஜனத்தொகை ஏழு பில்லியன் ஆக உயர்ந்தது. ஆனாலும் 40 மில்லியன் கருகலைப்பு நடந்தது.

*ஐக்கிய நாடுகளில் மட்டும் ஏழு மில்லியன் ஜனங்கள் அதாவது 0.1 % உலக ஜனத்தொகையில் - சிறையில் உள்ளார்கள் அல்லது காவலில் வைக்கப்பட்டுள்ளனார்கள்.

*80% உலக மக்கள் இன்று ஒரு நாள் ஊதியமாய் 10 டாலர்களுக்கும் குறைவாக வாங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 40% ஜனத் தொகையால் உலக வருமானம் வெறும் 5% மாக மட்டுமே உள்ளது.

* UNICEF யின் படி அனுதினமும் வறுமையில் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 25,000. இந்த உலகமே ஒதுக்கிவைத்திருக்கும் ஏதோ ஒரு மூலையின் ஒரு ஏழை கிராமத்தில் அமைதியாக இறந்து கொண்டிருக்கிறார்கள்.

*வளர்ந்து வரும் நாடுகளில் 27% மேற்ப்பட்ட பிள்ளைகள் எடை குறைவுள்ளவர்கள் அல்லது குட்டையாக இருக்கிறார்கள். இது தென் ஆசிய மற்றும ஆப்பிரிக்கா கண்டங்களில் அதிகமாக காணப்படலாம்.

*40 மில்லியன் ஜனங்கள் HIV | AIDS போன்ற நோயினால் வேதனைப்படுகிறார்கள். அதன் பலன் ஒரு வருடத்திற்கு மூன்று மில்லியன் இறப்பு.

*ஒரு வருடத்தில் குறைந்தது 500 மில்லியன் மக்களுக்கு மலேரியா வருகிறது. அதில் 1 மில்லியன் மக்கள் இறக்கிறார்கள்.

*வளரும் நாடுகளில் குறைந்தது பாதி ஜனங்களக்கு சுத்தமான குடி நீரோ அடிப்படை சுகாதராமோ இல்லை. அதனால் 1 வருடத்திற்கு 1.8 மில்லியன் பிள்ளைகள் வயிற்று போக்கினால் இறந்து கொண்டிருக்கிறார்கள். போரினாலும், பல நோயினாலும் மக்களின் இறப்பு சதவீதம் குறைவாக இருந்தாலும், வறுமை மனிதனை ஆட்கொண்டிருக்கிறது. உலகத் தலைவர்கள் தங்கள் அதிகாரங்களை உலகளவில் சம நிலைப் படுத்தி போர்களை குறைத்தாலும், அவர்களுக்கு கீழ் வாழும் மக்கள் நோய் மற்றும் பாவத்தின் சாபத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு செலவு செய்தாலும், எவ்வளவு முயற்சி எடுத்தாலும் இது போக்கை மாற்ற இயலாது. தேவனால் மட்டுமே இந்த சாபத்தை நீக்க முடியும். தேவனின் இராஜ்ஜியம் தனிமனிதனுக்கு சமாதானம் கொண்டவரும்

"ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள்.திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை."(மீகா 4:1-3)இனி அவர்கள் யுத்தத்தை கற்பதுமில்லை. வரப் போகும் நாட்களில் வன்முறைகள் எல்லாம் மாறிப்போய் மனிதனை மனிதனாய் கவனிக்கும் நிலை ஏற்படும் என்று அடையாள பாஷையில் தீர்க்கதரிசி வலியுறுத்துகிறார்.

மனித முயற்சிகள், நல்ல பயனுள்ள முறையில் செயல் பட்டால் இந்த பூமியல் நல்ல பலன்களை பெறலாம். ஏசா 35:1 யில் கூறுகூது போல "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்." வறுமை, துன்பங்கள், சுயநலம், வியாதிகள் மற்றும் வலிகள் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இவைகள் ஆதாமும் அவன் சந்ததியாரின் மேல் விழுந்த மரண தண்டனையின் விளைவுகளாகும். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளில் நீ சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். ( ஆதி 2:17 ) தேவனால் மட்டுமே இந்த பிரச்சனைகளை தீர்க்க முடியும். நிச்சயமாக அவர் செய்துகொண்டிருக்கிறார். பாவத்தின் கரைகள் விரைவில் நீக்கப்படும். இரவு நேரத்தின் துன்பங்கள் முடிந்துவிடும். "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்."(சங் 30 : 5)

அப்பொழுது, இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் ஆசீர்வதிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

*ஆரோக்கியம் - ஏசாயா 33:24 "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில்வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்."

* சந்தோஷம் - வெளி 21:4 "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."

*நித்திய வாழ்வு - லூக்கா 20 :36 "அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்."

* நீதியான நியாயம் - அப் 17:31 "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்."

*பாதுகாப்பு - மீகா 4:4 "அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று."

இந்த ஆசீர்வாதமான, வெளிச்சமான தேவனுடைய இராஜ்யம் வர நாம் தொடர்ந்து எதிர் நோக்கி கொண்டிருப்போம்.

## நம் உயிர்த்தெழுதல்

நீர் முழங்காற்படியிட்ட அந்த ராவினில்,
நாங்கள் அங்கிருந்தோமா அன்பு நேசரே
உம் உதடுகளில் வேதனையின் ஜெபம் இருக்கையில்,
நாங்கள் உம் ஆழ்ந்த துக்கத்தை உணர்ந்தோமா ?
அங்கிருந்தோமா நாங்கள் ?

கல்வாரி நோக்கி நீர் செல்கையில்,
உம்மருகில் இருந்தோமா, விலையுயர்ந்தவரே
நீர் தூக்கிய சிலுவை கீழே விழும்பொழுது
அச்சுமையை தூக்க நாங்கள் இருந்தோமா ?
உம்மருகில் இருந்தோமா நாங்கள் ?

உம் புனிதமான கல்லறையை தேடி,
அந்த அதிகாலையில் நாங்கள் சென்றோமா,
கந்தவர்கங்களினாலும் சுகந்தவாசனையினாலும் உம்மை,
ஆங்கு அபிஷேகம் செய்ய வந்தோமா ?
அந்த அதிகாலையில் ?

நீர் உயிர்த்தெழுந்து, ஒருபோதும் மரிப்பதில்லையென்று,
என்னே ஓர் ஆனந்தம்.
அவருடைய நாமத்தை நாம் துதிப்போம்.
நாம் வாழும் நோக்கிற்காக,
அவர் உதிரம் முற்றும் சிந்தினார்,
என்னே ஓர் ஆனந்தம் !

நாம் பின்செல்வோம், அழைப்பு உண்மையுள்ளது
வாருங்கள் உடன்படிக்கை செய்வோம்,
நம்முள் புது வாழ்வு தொடங்கிவிட்டது,
அனைத்தையும் உதறி விட்டொழித்து,
பின்செல்லுவோமே நாம் !

ஒவ்வொரு சிலுவைக்கும் ஒவ்வொரு கிரீடம்
மரித்தபின், அவரோடு எழுந்திருப்போமே மகிமையில்,
என்னே ஆதாயம் ஒவ்வொரு இழப்புக்கும் !
என்னே மகிழ்ச்சி அடைவோம் உயிர்த்தெழுகையில்
அவரோடு எழுந்திருக்கையில் !

**- Alice M. Ripper**

**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

திருச்சி.

**Cell : 9244611241, 9688975724**